REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஏப்ரல் 27 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 97 | Wednesday 27, April, 2022 | 16 பக்கங்கள் | 30/-




1,00,000 டொலர் வைப்பிலிடும்

## வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நீண்டகால வதிவிட வீசா



### ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த நீண்டகால வதிவிட வீசா வழங்கும் பொறிமுறைக்குப் பதிலாக, புதிய முறைமையொன்றுக்கு 2021 மார்ச் மாதம் 07 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இப்பொறிமுறையின் கீழ், குறிப்பிட்ட நீண்டகால வதிவிட வீசா வழங்குதல் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை 06



உலக வங்கி பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று ஜனாதிபதி மாளிகையில் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார். நிதி அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான பொருளாதார நிபுணத்துவ குழுவினரும் இதில் கலந்துகொண்டனர்.

## எக்காரணம் கொண்டும் பிரதமர் பதவி விலகத் தேவையில்லை

### மாகாண சபை உறுப்பினர்கள் சங்கம் ஏகமனதாக தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

"பயப்பட வேண்டாம் பதவி விலக மாட்டேன்" - பிரதமர்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகத் தேவையில்லையென மாகாண சபை உறுப்பினர்கள் பேரவை ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

அதேவேளை அரசாங்கமும் பிரதமரும் பதவி விலகத் தேவையில்லையென்ற ஏக மனதான தீர்மானத்தையும் பேரவை நேற்று நிறைவேற்றியுள்ளது. இதன்போது பேசிய பிரதமர் 06

மாற்றம் நிகழ பாராளுமன்றில் பெரும்பான்மை வேண்டும்

# அரசாங்கத்துக்கே இன்னும் பெரும்பான்மை பலமுள்ளது

### ஜனாதிபதி, பிரதமரை பதவி விலகுமாறு எவராலும் கூற முடியாது

**ஷம்ஸ் பாஹிம்**

அரசியலமைப்பை மாற்றாது ஜனாதிபதியையோ அரசாங்கத்தையோ மாற்ற முடியாது. தற்போதைய நிலையில் அரசாங்கத்துக்கு பெரும்பான்மை பலமுள்ளதாக இணை அமைச்சரவை பேச்சாளர் ஊடகத்துறை அமைச்சர் நாலக்க



பாராளுமன்றில் மாற்றம் நிகழ்ந்தால் ஜனாதிபதி எதிர்க்க மாட்டார்

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டில் ஊடகத்துறை அமைச்சர் நாலக்க கொடஹேவா தெரிவிப்பு

கொடஹேவா தெரிவித்தார்.பெரும்பான்மை பலம் இருக்கையில் ஜனாதிபதியையோ பிரதமரையோ பதவி விலகுமாறு கோர முடியாதென்று தெரிவித்த அவர், தற்போதைய நெருக்கடிக்கு இடைக்கால அரசு தான் தீர்வாக அமையுமென்றும் குறிப்பிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாடு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

நாட்டின் அரசியல் நெருக்கடி குறித்தும் அரசின் பெரும்பான்மை பலம் தொடர்பாகவும் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த போதே 06

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமின் இரட்டை வேடம்

### அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அவசர கடிதம் தகுந்த பதிலளிக்க தயாரெனவும் தெரிவிப்பு



முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் கார்னிவல் அலுவலகத்தில் நீண்ட நேரம் பேச்சு வார்த்தை நடத்திய பின்னர் 20 க்கு ஆதரவாக வாக்களிக்குமாறு எமக்கு கூறிய ரவூப் ஹக்கீம், இப்போது என்னை கட்சியிலிருந்து நீக்கிவிட்டதாக இரட்டை வேடம் போடுவதாக அமைச்சர் ஹாபிஸ் நஸீர் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன அரசில் சுற்றாடல் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் 06



## பயங்கரவாத தடை சட்டத்தில் கைதான 10 பேர் விடுதலை

06

### வாழைச்சேனை நீதவான் உத்தரவு

## எதிரணியின் பிரேரணையையும் உள்ளடக்கி 21 ஆவது திருத்தம்

**(ஷம்ஸ் பாஹிம்)**



அரசியலமைப்பின் பத்தொன்பதாவது மற்றும் இருபதாவது திருத்தச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு,இருபத்தோராவது திருத்த சட்டமூலத்தைத் தயாரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 19ஆவது அரசியலமைப்பை தேவையான திருத்தங்கள் மற்றும் காலத்துக்கேற்ற திருத்தங்களுடன் அமுல்படுத்துவதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்த முன்மொழிவுக்கமைய, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார். புதிய சட்டமூலத்தை துரிதமாக தயாரிப்பதற்கு அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிக்கவும், தயாரிக்கப்படும் 06

## மின்சார கட்டண அதிகரிப்பு இன்னும் தீர்மானம் இல்லை

### மின் சக்தி அமைச்சர் கஞ்சன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இலங்கை மின்சார சபையினால் முன்மொழியப்பட்ட கட்டண திருத்தங்கள் தொடர்பில் இன்னும் தீர்மானம் எடுக்கப்படவில்லை என மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் கோரிக்கைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். 06

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவால்

## மின் கட்டணத்தை 100 வீதம் அதிகரிக்க அனுமதி



### இறுதித் தீர்மானம் அமைச்சரவையே எடுக்கும்

மின்சாரக் கட்டணத்தை 100 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்சார சபை விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த அதிகரிப்புக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இது தொடர்பில் கருத்து 06




## சமையல் எரிவாயு விலை 2,185 ரூபாவால் அதிகரிப்பு

### லிட்ரோ GAS நிறுவனம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சமையல் எரிவாயுவின் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. அதன்படி 12.5 கிலோ கிராம் எடையுள்ள சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 2185 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

விலையதிகரிக்கப்பட்டுள்ளதையடுத்து 12.5 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 4,860 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலகச் சந்தையில் சமையல் எரிவாயுவின் 06

## அரசாங்க செலவினங்களை கட்டுப்படுத்த அரசு தீர்மானம்

### நிதி அமைச்சு விசேட சுற்றறிக்கை வெளியீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரச செலவினங்களை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை நேற்று நிதியமைச்சு வெளியிட்டுள்ளதுடன் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், அரச நிறுவனங்களின் தலைவர்கள், மாகாணசபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள்,மாவட்ட செயலாளர்கள், அரச கூட்டுத்தாபன மற்றும் சபைகளின் தலைவர்களுக்கும் நிதி அமைச்சின் செயலாளரினால் சுற்றறிக்கை நேற்று 06

## 3,600 மெற்றிக் தொன் Gas நாட்டை வந்தடைந்தது

### இன்று முதல் விநியோகம் ஆரம்பம் லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



3,600 மெற்றிக் தொன் சமையல் எரிவாயுவுடனான கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்துள்ள நிலையில் இன்று முதல் சமையல் எரிவாயு விநியோகம் வழமைக்குத் திரும்புமென லிட்ரோ கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த வாரத்தில் 7200 மெற்றிக் தொன் எரிவாயு நாட்டுக்குக் கிடைக்கும் என ஏற்கனவே 06






# சர்வதேச செய்திகள்

## சீனாவில் கடுமையாகும் கொவிட் தொற்று பாதிப்பு



சீனாவில் கொவிட் 19 நிலைமை மோசமடைந்து வருகிறது. சீனத் தலைநகர் பீஜிங்கில் முதல்முறையாகப் 11 முக்கிய வட்டாரங்களில் கட்டாயப் பரிசோதனை அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகரில் புதிதாக முப்பது பேருக்கு வைரஸ் தொற்று பதிவானதைத் தொடர்ந்து மத்தியில் இருக்கும் சோயங் வட்டாரத்தில் ஏற்கனவே பெரிய அளவில் வைரஸ் பரிசோதனை நடப்பில் உள்ளது.

பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை மேலும் உயரலாம் என்று அஞ்சப்படுகிறது.

பீஜிங்கின் மிகப்பெரிய வட்டாரம் சாவ்யாங்கில் மூன்றரை மில்லியன் பேர் வசிக்கின்றனர். பெரும்பகுதி புதிய வைரஸ் தொற்றுச் சம்பவங்கள் அந்தப் பகுதியில் இருந்தே வந்துள்ளன.

எந்நேரத்திலும் முடக்கநிலை அறிவிக்கப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாக மக்கள் அத்தியாவசியப் பொருட்களை வாங்கிக் குவிக்க ஆரம்பித்துவிட்டனர்.

நிதி மையமான ஷங்ஹாயில் திடீர் முடக்கநிலை ஏற்பட்டபோது உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டதை மறந்துவிட வேண்டாம் என்று தலைநகர் பீஜிங்கில் வசிக்கும் மக்களுக்கு சமூக ஊடகத்தினர் நினைவுறுத்தி வருகின்றனர்.

ஷங்ஹாய் நகரம் கிட்டத்தட்ட ஒரு மாதமாக முடக்கநிலையில் உள்ளது. கடந்த திங்களன்று அங்கு புதிதாக இருபதாயிரம் பேருக்கு நோய்த்தொற்று ஏற்பட்டது. அங்கு முடக்கநிலை இப்போதைக்கு முடிவுக்கு வரும் சாத்தியம் குறைவாகவே உள்ளது.

## பாதுகாப்பு மேம்பாடு குறித்து இந்தியா, வியட்நாம் இணக்கம்



இந்தியா மற்றும் வியட்நாம் இடையிலான பாதுகாப்பு நட்புறவை மேம்படுத்துவதற்கு வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் குயேன் பூ ட்ரொங்வும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இணக்கம் கண்டுள்ளனர்.

வியட்நாமுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவின் ஐம்பதாண்டு நிறைவையொட்டி இரு தலைவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், தென் சீனக் கடற்பரப்பின் பாதுகாப்பு நிலைமை, சீனாவுடனான வியட்நாமின் கடல் சார் முரண்பாடு மற்றும் உக்ரைன் விவகாரம் போன்ற விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளன. அந்த வகையில் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை மேலும் மேம்படுத்த இரு தலைவர்களும் இணக்கம் கண்டுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## ட்விட்டரை 44 பில். டொலருக்கு வாங்குகிறார் எலொன் மஸ்க்



உலகின் பெரும் செல்வந்தரான எலொன் மஸ்க், ட்விட்டர் நிறுவனத்தை 44 பில்லியன் அமெரிக்க டொலருக்கு வாங்குவதற்கு ட்விட்டர் நிறுவன நிர்வாக சபையில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

ட்விட்டரை வாங்கும் அதிர்ச்சி தரும் முயற்சி ஒன்றை மஸ்க் ஒரு வாரத்திற்கு முன் ஆரம்பித்தார். எனினும் அதனை முறியடிக்க ட்விட்டர் நிர்வாக சபை ஆரம்பத்தில் முயன்றது. எனினும் இந்த உடன்படிக்கைக்கு ஆதரவாக வாக்களிக்கும்படி அந்த நிறுவனம் பங்குதாரர்களை கேட்கவுள்ளது.

ட்விட்டர் தளத்தைப் பெறுவதற்கான மஸ்க்கின் முன்மொழிவைத் தீர ஆராய்ந்த பின்னர் அதை அவரிடமே விற்க முடிவெடுக்கப்பட்டது என்று நிர்வாகக் குழுத் தலைவர் பிரட் டெய்லர் கூறினார்.

ட்விட்டர் "மிகச்சிறந்த திறன்களை" கொண்டிருப்பதாகவும் அதனை தான் வெளிக்கொண்டு வரவிரும்புவதாகவும் மஸ்க் தெரிவித்திருந்தார்.

மேலும், ட்விட்டர் தளத்தில் பல்வேறு மாற்றங்களை கொண்டுவருவது குறித்தும் அவர் கடந்த சில தினங்களாக கருத்து வெளியிட்டு வந்தார். அதில், ட்விட்டர் பதிவுகள் சிலவற்றுக்கான கட்டுப்பாடுகளை தளர்த்துதல் மற்றும் போலி ட்விட்டர் கணக்குகளை நீக்குதல் உள்ளிட்டவை அடங்கும்.

ட்விட்டரில் 9.2 வீதமான பங்குகளை வைத்துள்ள மஸ்க் அந்த நிறுவனத்தின் மிகப்பெரிய பங்குதாரராக தற்போது உள்ளார். ட்விட்டர் நிறுவனத்தை அவர் வாங்கிய பின்னர் அது ஒரு கூட்டுப் பங்கு நிறுவனமாக இல்லாமல் தனியார் நிறுவனமாக ஆகிவிடும் என்றும் கூறப்படுகிறது.

எனினும், எப்போது அதிகாரபூர்வமாக தொகை பரிமாற்றம் நடக்கும், மஸ்க் வாங்கிய பின்னர் ட்விட்டர் நிறுவனத்தை வழிநடத்தப் போவது யார் என்பது போன்ற விபரங்கள் இப்போது வெளியாகவில்லை. தற்போது ட்விட்டர் நிறுவனத்தை இந்தியரான பராக் அகர்வால் வழிநடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ட்விட்டர் சமூக ஊடக நிறுவனத்தின் எதிர்காலம் நிச்சயமற்றது, ட்விட்டர் கைமாறும் நிலையில் அது எந்த திசையில் செல்லும் என்று எங்களுக்குத் தெரியாது என அதன் தலைமை செயல் அதிகாரி பராக் அகர்வால் கருத்து தெரிவித்துள்ளார்.

இதனிடையே ட்விட்டர் ஊழியர்களுடன் கேள்வி–பதில் அமர்வில் எலொன் மஸ்க் பங்கேற்பார் என தெரிகிறது. இதனை ஊழியர்களிடம் ட்விட்டர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ட்விட்டர் சிலருக்கு மட்டுமே கருத்து சுதந்திரம் வழங்குகிறது என்பதே மஸ்க் வைக்கும் புகார். இதற்கு மாற்றாக முதலில் வேறு ஒரு செயலியை அவர் உருவாக்குவார் என்று கருதப்பட்டது. ஆனால் ட்விட்டர் நிறுவனத்தையே கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரலாம் என்ற முடிவை மஸ்க் எடுத்தார். அதன் பொருட்டே ட்விட்டர் நிறுவனத்தின் 9.2 வீத பங்குகளை மஸ்க் வாங்கினார்.

இந்த ஒப்பந்தம் உறுதிசெய்யப்பட்டு இருப்பதால், 273 பில்லியன் டொலர் சொத்து மதிப்பு உடன் இதற்கு முன் வரை மின்சார வாகன தொழிலதிபராகவும், ஸ்பேஸ் எக்ஸ் என்னும் விண்வெளி நிறுவன அதிபராக மட்டுமே அறியப்பட்டு வந்த மஸ்க், தனது நிறுவனங்கள் பட்டியலில் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றையும் சேர்த்துள்ளார்.

## 'மூன்றாம் உலகப் போர்' பற்றி ரஷ்யா எச்சரிக்கை



உக்ரைனுக்கு மேலும் ஆயுத உதவிகளை அளிக்கும் அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகளுக்கு இடையிலான சந்திப்பு இடம் பெறவுள்ள நிலையில் மூன்றாம் உலகப் போர் வெடிப்பதற்கான உண்மையான அச்சுறுத்தல் பற்றி ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் சர்கே லாவ்ரோவ் உக்ரைனுக்கு ஆயுதங்களை அனுப்புவது, போருக்குச் சமம் என்று கூறியுள்ளார். ரஷ்யா அவற்றை இராணுவ இலக்காகக் கருதும் என்று அவர் எச்சரித்தார்.

உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்குவதன் மூலம் நேட்டோ கூட்டணி அடிப்படையில் ரஷ்யா மீது போர் தொடுத்திருக்கிறது என்று அவர் கூறினார்.

உக்ரைனுக்கு ஆயுதம் வழங்குவது பற்றி ஏற்கனவே ரஷ்யா எச்சரித்திருக்கிறது.

இதற்கிடையே நெருக்கடியை மேலும் அதிகரிக்கும் விதத்தில் உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி, ரஷ்யா இந்தப் போரில் வெல்ல முடியாது என்று அறிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபைக்கான ரஷ்யத் துணைத்தூதர் டிமிட்டிரி போலியான்ஸ்கி, உக்ரைனுடன் போர்நிறுத்தம் செய்துகொள்வதில் அர்த்தம் இல்லை என்றும், உக்ரைன் ரஷ்யாவை மட்டம்தட்டவே அத்தகைய போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தும் என்றும் கூறியுள்ளார்.

அமெரிக்கா உக்ரைனுக்குப் புதிய தூதராக பிரிஜட் பிரிங்க்கை அறிவித்த பின்னர் ரஷ்யா புதிய எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவின் அழைப்பில் 40 நாடுகள் ஜெர்மனியில் பாதுகாப்பு மாநாடு ஒன்றை நடத்துகிறது. இதில் உக்ரைனுக்கு மேலும் ஆயுதங்கள் வழங்குவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது. போர் முடிந்த பின் அந்த நாட்டின் நீண்டகால பாதுகாப்பு ஏற்பாடு பற்றியும் இங்கு பேசப்படவுள்ளது.

இந்த மாநாட்டில் ஐரோப்பிய கூட்டணி மற்றும் அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பான் நாடுகளும் பங்கேற்கின்றன.

இந்நிலையில் ரஷ்ய செய்தி நிறுவனத்திற்கு பேசிய அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் லாவ்ரோவ், மூன்றாம் உலகப் போருக்கான அச்சுறுத்தல் தீவிரமாக உள்ளது என்றார். "இது உண்மையானது யாரும் இதை குறைத்து மதிப்பிடமுடியாது" என்றார்.

## ரஷ்ய கப்பலை தடுக்க முயன்றவர்கள் கைது



ரஷ்யாவிலிருந்து எண்ணெய் ஏற்றி வந்த கப்பலைத் துறைமுகத்தில் தடுக்க முயன்ற சுற்றுப்புற ஆர்வலர்களை நோர்வே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தப் சுற்றுச்சூழல் அமைப்பைச் சேர்ந்த 20 பேர் கைதாயினர்.

அவர்கள் நோர்வேயின் எக்சோமொபைல் துறைமுக முனையத்தில் ரஷ்ய எண்ணெயை இறக்க முனைந்த கப்பலைத் தடுக்க முயன்றனர். உக்ரைன் மீது ரஷ்யா படையெடுப்பு நடத்தியிருப்பதைக் கண்டித்து ஆர்வலர்கள் அந்த நடவடிக்கையை எடுத்தனர்.

கப்பலின் நங்கூரச் சங்கிலியில் சிறு ரப்பர் படகுகளைக் கட்டி அவர்கள் கப்பலிலிருந்து எண்ணெய் இறக்கப்படுவதைத் தடுக்க முயன்றனர்.

படையெடுப்புக்கு முன்னதாகவே ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்கும் ஒப்பந்தம் கையெழுத்தானது என்றும் ரஷ்யாவிடமிருந்து புதிதாக எண்ணெய் வாங்கும் எண்ணம் இல்லை என்றும் எசோ நோர்வே நிறுவனம் கூறியது.

ரஷ்யா மீது நோர்வே விதித்திருக்கும் தடைகளை முழுமையாகப் பின்பற்றி நடப்பதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்தது.

## சூச்சிக்கு எதிரான தீர்ப்பு ஒத்திவைப்பு



மியன்மார் இராணுவ நீதிமன்றம், முன்னாள் அரசாங்க ஆலோசகர் ஆங் சான் சூச்சிக்கு எதிரான தீர்ப்பை ஒத்திவைத்துள்ளது.

அவருக்கு எதிரான பல்வேறு குற்றச்சாட்டுகள் குறித்து நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

முந்தைய யங்கூன் முதலமைச்சரின் ஆதரவைக் கோரி அவருக்கு, சூச்சி கையூட்டு தந்ததாகக் குற்றச்சாட்டுகள் கூறுகின்றன. அது தொடர்பில் அவருக்கு 15 ஆண்டு வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

சூச்சி, அந்தக் குற்றச்சாட்டுகள் அபத்தமானவை என்று கூறி நிராகரித்துவிட்டார்.

ஏற்கனவே 2 குற்றச்சாட்டுகளில் அவருக்கு 6 ஆண்டுச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பதவியில் இருந்து நீக்கப்பட்ட பின் சூச்சி மீது இராணுவ அரசாங்கம் கொண்டுவந்துள்ள எண்ணற்ற குற்றச்சாட்டுகள் அனைத்தும் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 150 ஆண்டுகளுக்குமேல் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம். அவருக்கு இப்போது வயது 76.

## நேட்டோவில் இணைவதற்கு பின்லாந்து, சுவீடன் விருப்பம்



பின்லாந்தும் சுவீடனும் நேட்டோ கூட்டணியில் இணைவதற்குக் கூட்டாக விருப்பம் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

அவை இரண்டும் அடுத்த மாதம் நேட்டோவில் சேர விரும்புவதாக அந்நாடுகளின் ஊடகங்கள் கூறின.

ரஷ்யா 2014ஆம் ஆண்டு கிரைமியா வட்டாரத்தைக் கைப்பற்றிய பின்னர் அவ்விரு நாடுகளும் நேட்டோ கூட்டணியுடன் நெருக்கமாகச் செயல்பட ஆரம்பித்தன. ஆயினும் நேட்டோவில் சேர விரும்பவில்லை என்று கூறி வந்தன.

தற்போது ரஷ்யா உக்ரைன் மீது படையெடுத்ததைத் தொடர்ந்து சுவீடனும் பின்லாந்தும் ஒன்றாக நேட்டோவில் சேர விரும்புவதாகச் செய்தி வெளிவந்துள்ளது.

இருநாட்டுப் பத்திரிகைகளிலும் ஒரே நேரத்தில் வெளிவந்துள்ள அந்தச் செய்தி குறித்து இருநாட்டு வெளியுறவு அமைச்சுகளும் கருத்துரைக்க மறுத்துவிட்டன.

இந்த இரு நாடுகளும் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் தொடக்கம் இராணுவ அணிசேரா கொள்கையையே பின்பற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்தியாவசிய பொருட்களுக்காக

# மக்கள் வரிசையில் நிற்கும் நிலைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எரிபொருள், எரிவாயு, மின்சாரம் மற்றும் மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்கு நிலவும் தடைகள் மற்றும் அதற்கான வரிசை முறையை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட வேண்டுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குறுகிய காலத்தில் இந்த வரிசை முறையை இல்லாதொழிக்க முடியுமென நம்பிக்கை தெரிவித்துள்ள பிரதமர், அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு உடனடியாக பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்னுமொருவரது கையினால் இந்தப் பொறுப்புகள் நிறைவேற்றப்படும்வரை காத்துக்கொண்டிருக்க முடியாது. அதன் பாதிப்புகளை உணர்ந்துள்ளவன் என்ற வகையில் நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு அனைத்து நடவடிக்கைகளின் பின்னணியிலும் தாம் இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.



ஆளும்கட்சி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் பேரவைக்கிடையில் நேற்றைய தினம் அலரி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ அரசாங்கமோ பதவி விலகவேண்டிய அவசியம் கிடையாதென மாகாண சபை உறுப்பினர்களின் பேரவை இதன்போது ஏகமனதாக தெரிவித்துள்ளது. அதற்கான யோசனைகளும் அதன்போது நிறைவேற்றப்பட்டுள்ளன. அதனையடுத்து உரையாற்றும்போது, "நான் பதவி விலகப் போவதில்லை. பயப்பட வேண்டாம்" என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாடு மிக நெருக்கடியான நிலையில் உள்ள தருணத்திலேயே இந்த நிகழ்வு நடத்தப்படுகின்றது. நாடும் மக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேர்ந்துள்ளது. அரசாங்கமென்ற வகையில் நாம் இரவு பகல் பாராது இந்த நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்கும் சவால்களை வெற்றிகொள்வதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

கடந்த அரசாங்கம் பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த, பாதுகாப்பு முற்றாக வீழ்ச்சியடைந்திருந்த நாட்டையே எம்மிடம் கையளித்தது. அந்த வகையில் நாம் மக்களிடம் சென்று அப்போதிருந்த சூழ்நிலைக்கு தீர்வுகாண்பது தொடர்பிலேயே தெரிவித்தோம்.

அதேவேளை, அரசாங்கத்தை நாம் பாராமெடுத்த ஆரம்பத்திலேயே கொரோனா வைரஸ் தொற்று பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இது உலக நாடுகள் எதுவும் எதிர்பார்க்காத பாதிப்பாகும். அவ்வாறான நிலையில் நாம் மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதிலேயே முக்கிய கவனம் செலுத்தினோம். அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்த போது அதற்கு பக்கபலமாக நின்று நாம் செயற்பட்டோம். சுகாதாரத் துறையினர் தமது அர்ப்பணிப்புள்ள பங்களிப்பை அதற்காக வழங்கினர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)




## இஃதிகாபை பயன்படுத்தும் ஒழுங்கு

ரமழான் மாதத்தின் இறுதிப் பத்தில் மேற்கொள்ளப்படும் இஃதிகாப் ஆனது லைலதுல் கத்ரை அடைந்து கொள்வதற்காக நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட வழிமுறையாகும். அதனால் இஃதிகாப் இருப்பவர்கள் இக்காலப் பகுதியை உச்சளவில் பயன்படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும்.

குறிப்பாக, இஃதிகாப் இருப்பவர் இரவும் பகலும் முடியுமானளவு இறை வணக்கங்களில் ஈடுபட வேண்டும். அதாவது தொழுதல், அல் குர்ஆனை ஓதுதல், அதனைப் படித்தல், அதன் தூதை விளங்க முயற்சி செய்தல், குர்ஆன் வழங்கும் செய்திகளை சிந்தித்து உணருதல், திக்ர், இஸ்திபார் செய்தல், நபிமொழிகளை வாசித்தல், நபி(ஸல்) அவர்களின் வரலாற்றை வாசித்தல், நபிமார்களின் வரலாற்றை வாசித்தல் போன்றவாறான நல்லமல்களில் ஈடுபட வேண்டும்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'அல் குர்ஆனைப் படித்து அதனைக் கற்றுக்கொடுப்பவரே உங்களில் சிறந்தவர்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புகாரி)

அதேநேரம் ரமழான் காலத்தில் மேற்கொள்கொள்ளப்படும் ஒவ்வொரு நற்காரியத்துக்கும் ஒன்றுக்கு பத்து முதல் எழு நூறு மடங்கு வரை நன்மைகள் அளிக்கப்படுகின்றன. அதனால் இஃதிகாப் காலப்பகுதியை உச்சளவில் பயன்படுத்திக் கொள்ளத் தவறக்கூடாது.

நபி (ஸல்) அவர்கள் இஃதிகாப்பின் முக்கியத்தை வார்த்தைகளால் எடுத்துக்கூறியதோடு நின்று விடாது அவற்றை செயலிலும் செய்து காட்டினார்கள். ஏனெனில் இஃதிகாப் அந்தளவுக்கு முக்கியத்துவம் மிக்க ஒரு செயற்பாடாகும்.

இஃதிகாபானது இறை தொடர்புடன் வாழ்வதற்கு தேவையான பயிற்சியையும் பக்குவத்தையும் அளிக்கக்கூடியதாகும். அந்தப் பயிற்சியும் பக்குவமும் உண்மையான இறை சிந்தனையுயையும் இறை பயத்தையும் பெற்றுக்கொடுக்கும். அதன் ஊடாக நீதி, நேர்மை போன்ற உயரிய ஒழுக்கப் பண்புகளைக் கொண்டவர்களாக தம் வாழ்வை அமைத்துக்கொள்ள வழி கிடைக்கப்பெறும்.

ஆகவே இஃதிகாப்பின் ஊடாக லைலதுல் கத்ரை அடைந்து கொள்ள முயற்சிக்கின்ற அதேநேரம், இஃதிகாபின் ஊடாக பெற்றுக்கொள்ளும் பயிற்சியையும் பக்குவத்தையும் ஈருலகிலும் விமோசனம் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பயன்படுத்திடுவோம்.

மர்லின் மரிக்கார் ...

நாட்டின் நெருக்கடி நிலைமைகள்

## உண்மை நிலவரங்களை தெளிவூட்ட அரசு முடிவு

நிலவுகின்ற அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியாகவுள்ள நெருக்கடி நிலைமைகள் பற்றிய உண்மை நிலவரங்கள் தொடர்பாக பொதுமக்களைத் தெளிவூட்ட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போது நாட்டில் உருவாகியுள்ள அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியாகவுள்ள நெருக்கடியான நிலைமைகள் பற்றிய உண்மை நிலவரங்கள் தொடர்பாக பொதுமக்களைத் தெளிவூட்டுவதற்காக, எற்புடைய அமைச்சுக்களின் பங்கேற்புடன் அரசாங்க தகவல் திணைக்களத்தின் மூலம் நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (பா)

## அரசுக்கு எதிரான SJB யின் பேரணி கண்டியிலிருந்து நேற்று ஆரம்பம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கண்டியிலிருந்து கொழும்புக்கு ஏற்பாடு செய்துள்ள பேரணி நேற்று (26) ஆரம்பமாகியது.

'ஐக்கிய மக்கள் பேரணி' என்ற தொனிப்பொருளில் ஆரம்பமாகவுள்ள இந்த பேரணி, 05 நாட்கள் தொடரவுள்ளது.

அதற்கமைய நேற்று செவ்வாய்க்கிழமை கண்டி தலதா மாளிகையில் ஆரம்பமாகி (30) சனிக்கிழமை கொழும்பில் நிறைவடையவுள்ளது.

ஐந்து கட்டங்களின் அடிப்படையில் இந்த பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது.

அதற்கமைய நேற்று (26) கண்டியிலிருந்து மாவனெல்ல வரையும், (27) மாவனெல்லையிலிருந்து கலிகமுவ வரையும், (28) கலிகமுவையிலிருந்து தனோவிட வரையும், (29) தனோவிடவிலிருந்து யக்கல வரையும், (30) யக்கலையிலிருந்து பேலியகொட வரையும் மே (01) கொழும்பு கெம்பல் பார்க் பகுதி வரையும் பேரணி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரு வாரங்களுக்கு ஒருமுறை மருந்து விலைகளில் திருத்தம்

### டொலர் பெறுமதிக்கு ஏற்ற வகையில் சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவிப்பு

இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை மருந்துகளின் விலைகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச் சந்தர்ப்பங்களில் காணப்படும் டொலரொன்றின் பெறுமதிக்கமைய இந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மருந்துகளின் விலைகளை அதிகரிக்க வேண்டுமென பல்வேறு தரப்பினரும் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு தாம் ஒரு போதும் இணங்குவதில்லை என சுகாதார அமைச்சர், பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

டொலரொன்றின் பெறுமதிக்கு நிகராக விலைகளை திருத்தியமைத்து, நோயாளர்களுக்கு தேவையான மருந்துகளை தட்டுப்பாடின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, தற்போது 40 முதல் 60 வீதமான மருந்துகளின் விலைகள் வர்த்தமானியூடாக கட்டுப்படுத்தப்படுவதாக ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் தலைவர், வைத்தியர் ரசித விஜேவந்த தெரிவித்தார்.

டொலரொன்றின் பெறுமதி அதிகரித்ததையடுத்து, மருந்துகளின் விலைகளை 29 வீதத்தால் அதிகரிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுத்ததாக அவர் கூறினார்.

## விசேட துறைகளுக்கு தேவையான எரிபொருளை தனித்தனியாக இறக்குமதி செய்ய அனுமதி

சகல விதமான பொருளாதார நடவடிக்கைகளுக்கும் எரிபொருள் அத்தியாவசியமாக உள்ளதால், பொருளாதார செயன்முறையில் தெரிவு செய்யப்பட்ட விஷேடமான துறைகளில் தமக்குத் தேவையான எரிபொருட்களை தனித்தனியாக இறக்குமதி செய்து பயன்படுத்துவதற்கான அனுமதிப்பத்தித்தை வழங்குவது உகந்ததென கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, பெற்றோலியப் பொருட்கள் இறக்குமதிக்காக முறையான வகையில் அடையாளம் காணப்படும் தரப்பினர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு இயலுமை கிட்டும் வகையில் 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காவும் எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.(பா)

## உயிரிழந்தவர்களில் புலஸ்தினியும் உள்ளாரா?

### சடலங்களை தோண்டி எடுக்க நீதிமன்று அனுமதி

உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டவுள்ளதாக பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ நேற்று தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலையடுத்து கல்முனை சாய்ந்தமருதில் குண்டுகளை வெடிக்க வைத்து உயிரிழந்தவர்கள், மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் சடலங்கள் இவ்வாறு தோண்டி எடுக்கப்படவுள்ளன.

இந்நிலையில், சாரா என்ற புலஸ்தினி மஹேந்திரனின் மரபணுவை ஆராய்வதறகே இவ்வாறு உடற்பாகங்கள் தோண்டப்படவுள்ளன.

எவ்வாறாயினும், சாய்ந்தமருது வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து இறந்தவர்களின் மரபணு மாதிரிகள் சாரா ஜெஸ்மினுடைய மரபணுவை ஒத்ததாக இருப்பதை வெளிப்படுத்தவில்லை.

கடந்த இரண்டு சோதனைகளின் போது மாதிரிகள் சாரா ஜெஸ்மினின் மரபணுவை ஒத்ததாக இருப்பதைக் காட்டாததால், மூன்றாவது மரபணு சோதனை நடத்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது வெடிப்பு மற்றும் மரபணு சோதனைகளைத் தொடர்ந்து சாரா ஜெஸ்மின் உயிருடன் இருப்பதாகவும், இந்தியாவுக்குத் தப்பிச் சென்றதாகவும் சந்தேகம் எழுந்தது.

சாரா ஜெஸ்மின் சாய்ந்தமருது குண்டுவெடிப்பில் உயிரிழந்தாரா? அல்லது அந்த நேரத்தில் நாட்டை விட்டு தப்பிச் சென்றாரா? என்பதை அறியவே மூன்றாவது மரபணு பரிசோதனையை சி.ஐ.டி யினர் கோரினர். இதையடுத்தே இச் சடலங்கள் தோண்டியெடுக்கப்பட உள்ளன.

இந்நிலையிலேயே நீர்கொழும்பு – கட்டுவாபிட்டிய தேவாலயத்தில் தாக்குதல் நடத்திய மொஹம்மது ஹஸ்தூன் எனும் குண்டுதாரியின் மனைவியான புலஸ்தினி மகேந்திரன் எனும் சாராவுக்கு என்ன நடந்தது? என்பது தொடர்பில் வெளிப்படுத்த மீண்டும் மரபணு பரிசோதனைகளை முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண முன்னர் தெரிவித்திருந்தார்.

அதற்கமைய நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டுள்ளதாகவும் கல்முனையின் சாய்ந்தமருது பகுதியில் வெடிப்பின் பின்னர் அடையாளம் காணப்பட்டு மீட்கப்பட்ட பயங்கரவாதிகளின் உடற்பாகங்களை மீள தோண்டி எடுத்து மரபணு பரிசோதனைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன கூறியிருந்தார்.

06

## அந்நிய செலாவணி நெருக்கடிக்கு பொறிமுறை நிறுவ குழு நியமனம்

பல்வேறு தரப்பினர்களால் முன்வைக்கப்படும் வெளிநாட்டு செலாவணி மற்றும் எரிசக்தி விநியோகம் தொடர்பான நிதி முன்மொழிவுகளை மதிப்பீடு செய்வதற்கான பொறிமுறையை நிறுவுவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

நாட்டில் நிலவுகின்ற வெளிநாட்டு செலாவணி நெருக்கடிகளுக்குத் தீர்வுகளாக ஒருசில நட்பு நாடுகள், சர்வதேச விநியோகத்தர்கள் மற்றும் உள்ளூர் தனியார் துறையினரால் பல்வேறு வகையான இருதரப்பு சலுகைக் கடன், எரிசக்தி விநியோகம் மற்றும் எரிசக்தி துறைசார்ந்த முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு சமர்ப்பிக்கப்படுகின்ற ஒருசில முன்மொழிவுகள், நாடு எதிர்கொண்டுள்ள வெளிநாட்டு செலாவணி நெருக்கடிகளுக்கு பயனுள்ள வகையிலான முன்மொழிவுகளாக அவதானிக்கப்பட்டாலும், அது தொடர்பாக தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தற்போது காணப்படுகின்ற பொறிமுறையில் திட்டவட்டமான வாய்ப்புக்கள் இல்லை. அதனால், இம்முன்மொழிவுகளில் சமகால முக்கியத்துவங்களைக் கருத்தில் கொண்டு அவற்றைப் பகுப்பாய்வு செய்து கடைப்பிடிக்க வேண்டிய பொறிமுறைகள் தொடர்பாக பரிந்துரைகளை மேற்கொள்வதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையில் மற்றும் அமைச்சின் செயலாளர்கள் நால்வரின் (04) பங்கேற்புடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்கு பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## கட்டுப்பாடின்றி விலைகள் உயர்வதை கட்டுப்படுத்த பொறிமுறை

**ஷம்ஸ் பாஹிம்**

கட்டுப்பாடின்றி பொருட்களின் விலைகள் உயர்வதை கட்டுப்படுத்த உகந்த பொறிமுறையொன்றை தயாரிக்க வர்த்தக அமைச்சர் நடவடிக்கை எடுத்து வருவதாக இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

விலைக்கட்டுப்பாடின்றி பொருட்களின் விலைகள் அதிகரிப்பது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

கடந்த காலத்தில் விநியோக வலையமைப்பு வீழ்ச்சி அடைந்துள்ளது. வர்த்தக நிலைமை அரச கட்டுப்பாட்டுக்கு அப்பால் சென்றுள்ளது. சில மொத்த வர்த்தகர்களும், வர்த்தக நிறுவனங்களும் நினைத்தவாறு கட்டுப்பாடின்றி பொருட்களின் விலைகளை அதிகரிக்கும் நிலை கடந்த காலத்தில் காணப்பட்டது. அதற்காக முன்னெடுத்த தீர்வுகளின் போது சிலர் பொருட்களை மறைக்க முற்பட்டனர். அதனால் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. உகந்த பொறிமுறையொன்றை உருவாக்க புதிய வர்த்தக அமைச்சர் செஹான் சேமசிங்க நடவடிக்கை எடுத்து வருகிறார். நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் பங்களிப்புடன் எதிர்காலத்தில் பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த ஆவன செய்யப்படும் என்றார்.(பா)

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அவுஸ்திரேலியா டொலர் | 240.20 | 251.23 |
| கனடியன் டொலர் | 263.20 | 274.07 |
| யூரோ | 362.94 | 374.92 |
| ஜப்பான் யென் | 2.6346 | 2.7393 |
| சிங்கப்பூர் டொலர் | 245.36 | 254.12 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 428.58 | 445.81 |
| சுவிஸ் பிராங்க் | 350.48 | 364.07 |
| அமெரிக்க டொலர் | 333.88 | 346.49 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
| --- | --- | --- | --- |
| பஹ்ரின் டினார் | 903.00 | கட்டார் ரியால் | 93.19 |
| குவைத் டினார் | 1,113.72 | சவூதி ரியால் | 90.76 |
| ஓமான் ரியால் | 884.31 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 92.69 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 14ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 25


## குறள் தரும் சிந்தனை



நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்

காலம் தாழ்த்துதல், மறதி, சோம்பல், அளவுக்கு மீறிய தூக்கம் ஆகிய நான்கும், கெடுகின்ற ஒருவர் விரும்பியேறும் தோணிகளாம்.

# நியாயப்படுத்த முடியாத தொழிற்சங்க நடவடிக்கை

நாடு பொருளாதார ரீதியில் நெருக்கடிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில் சுகவீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கையை ஆசிரியர்கள், அதிபர்கள் நேற்றுமுன்தினம் முன்னெடுத்தனர். இச்சமயம் கல்வி மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன, பெருமளவிலான ஆசிரியர்கள் கடமைக்கு சமுகம் அளித்திருந்ததாகவும், கல்வி நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெற்றதாகவும் தெரிவித்திருந்தார்.

ஆனாலும் ஆசிரியர்கள், அதிபர்களின் தொழிற்சங்க நடவடிக்கையை ஏனைய துறையினரின் தொழிற்சங்க நடவடிக்கை போன்று நோக்க முடியாது. ஆசிரியர், அதிபர்கள் இந்நாட்டு இளம் சந்ததியினரின் எதிர்காலத்துடன் நேரடியாக சம்பந்தப்பட்டவர்களாக உள்ளனர். அவர்களது தொழிற்சங்க நடவடிக்கை எதிர்கால சந்ததியினரின் கல்வியையே பெரிதும் பாதிக்கக் கூடியதாக அமையும். அதனால் அவ்வாறான ஒரு காரியத்திற்கு எவரும் துணைபோகலாகாது.

கொவிட் 19 தொற்று பரவுதல் அச்சுறுத்தல் காரணமாக 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடுப்பகுதி முதல் 2021 ஆம் ஆண்டு நவம்பர் வரையான காலப் பகுதியில் பல மாதங்கள் கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் திறக்கப்படவில்லை. இதன் விளைவாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் வழமை போன்று செயற்படத் தொடங்கி சில மாதங்கள்தான் கடந்துள்ளன.

இவ்வாறான சூழலில் எதிர்கால சந்ததியினரின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதற்கு துணைபோகும் வகையில் ஆசிரியர்கள், அதிபர்கள் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க முடியாது. அவ்வாறான தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பது தொடர்பில் ஆசிரியர்களும், அதிபர்களும் ஒன்றுக்கு இரண்டு மூன்று தடவைகள் சிந்தித்து தீர்மானம் எடுக்க வேண்டும்.

அதேநேரம் தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்டுள்ள எரிபொருள் விலையேற்றத்தைக் காரணம் காட்டி அருகாமையிலுள்ள பாடசாலைக்கு தமக்கு இடமாற்றம் கோரியே அதிபர்கள், ஆசிரியர்கள் இத்தொழிற்சங்க நடவடிக்கையை முன்னேடுத்தனர்.

ஆனால் நாடு எதிர்கொண்டுள்ள இப்பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்பட்டுள்ள எரிபொருள் விலையேற்றம், தனியே ஆசிரியர்கள், அதிபர்கள் மாத்திரம் எதிர்கொள்ளக் கூடிய பிரச்சினை அல்ல. இந்நெருக்கடிக்கு நாட்டிலுள்ள எல்லா மட்டத்தினரும் முகம் கொடுத்திருக்கின்றனர். அதனால் ஆசிரியர்கள், அதிபர்களின் இத்தொழிற்சங்க நடவடிக்கை நியாயப்படுத்தக் கூடிய ஒன்றல்ல. அதேநேரம் ஆசிரியர்கள், அதிபர்களின் கோரிக்கைப்படி, அவர்களுக்கு அருகிலுள்ள பாடசாலைக்கு இடமாற்றம் வழங்கினால் நாட்டிலுள்ள ஏனைய துறைகளைச் சேர்ந்தவர்களும் அவ்வாறான கோரிக்கையை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கும் நிலை நாட்டில் உருவாகும்.

இதன் விளைவாக நாட்டின் முழு அரச சேவையும் பெரும் நெருக்கடிக்கும் தாக்கங்களுக்கும் உள்ளாகக் கூடிய நிலைமை ஏற்படும். குறிப்பாக கல்வி மற்றும் ஏனைய அரச சேவைகளை வழங்குதலில் ஏற்றத்தாழ்வுகள் தோற்றம் பெறும். எரிபொருள் விலையேற்றத்தைக் காரணம் காட்டி ஆசிரியர்களுக்கு அவர்களுக்கு அருகிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றங்களை வழங்கினால், தூரப் பிரதேசங்களதும் பின்தங்கிய பிரதேசங்களதும் கல்வி நிலைமை என்னவாகும் என்பதை ஒரு தரம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இவற்றின் ஊடாக கல்வி மற்றும் ஏனைய சேவைகளின் நிலைமை பின்னடைவுக்கு உள்ளாவதைத் தவிர்க்க முடியாது. அதனால் நாடு மேலும் நெருக்கடிக்கு உள்ளாகும். கல்வித் துறையில் வீழ்ச்சி ஏற்படும்.

மேலும் ஆசிரியர்களும் அதிபர்களும் முன்னெடுத்த இத்தொழிற்சங்க நடவடிக்கையை ஏற்றுக் கொள்ளவும் முடியாது. ஏனெனில் சுமார் 25 வருடங்களாக தீர்க்கப்படாது நீடித்து வந்த ஆசிரியர்கள், அதிபர்கள் சம்பள முரண்பாட்டை தற்போதைய அரசாங்கம் 33 பில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் தீர்த்து வைத்தது. அதாவது சம்பள உயர்வுடன் இம்முரண்பாடு தீர்க்கப்பட்டுள்ளது.

இம்முரண்பாடு தீர்க்கப்பட்டு ஒரு சில மாதங்கள் கூட கடந்து விடவில்லை. அதற்கிடையில் மற்றொரு கோரிக்கையை முன்வைத்து ஆசிரியர்கள், அதிபர்கள் முன்னெடுத்த இத்தொழிற்சங்க நடவடிக்கையை மனசாட்சியுள்ள எவரும் ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள். எனவே நாட்டினதும் எதிர்கால சந்ததியினரினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி செயற்பட வேண்டிய பொறுப்பு ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் முன்பாக உள்ளது. அதன் ஊடாக தற்போதைய பொருளாதார நெருக்கடி நாட்டின் கல்வித்துறையில் பாதிப்பு ஏற்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள வழிவகுக்கும்.

editor.tkn@lakehouse.lk

# உடப்பு கிராமத்துக்கு மாத்திரமே தனித்துவமான 'சித்திரைச் செவ்வாய் முளைக்கொட்டு' நிகழ்வு



புத்தளம் மாவட்டத்திலே தமிழ் மக்கள் செறிந்து வாழும் தமிழ்க் கிராமம் உடப்பு ஆகும். இம்மக்கள் பாரம்பரிய கலைகலாசாரத்தை கண்ணியமாக மதித்து வாழ்கின்றனர். அந்த வகையில் உடப்பு கிராமத்தில் 'சித்திரைச் செவ்வாய் முளைக்கொட்டு' முக்கியத்துவம் பெறுகின்றது.

இதன் ஆரம்ப நிகழ்வுகள் கடந்த 2022.04.17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முளைப்பதித்தல் மூலம் ஆரம்பமாகின. தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும் இந்நிகழ்வின் இறுதி நிகழ்ச்சி இன்று 2022.04.27 புதன்கிழமை காலை நடைபெறுகின்றது.

உடப்பு மாரியம்மன் வழிபாட்டின் மற்றொரு அம்சமாக சித்திரை மாதத்தில் திறந்தவெளி வீடுகளின் வளவுகளில் சித்திரைச் செவ்வாய் விழா நடத்தப்படுகிறது. அக்கினி நட்சத்திரம் என்பது சித்திரை மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் இருந்து விசாக நட்சத்திரம் வரை 21 நாட்களைக் குறிக்கும். இக்காலப் பகுதி மிகவும் வெப்பமானது. இந்தக் காலத்திலேயே தமிழ்நாட்டில் மாரியம்மன் கோயில்களில் விழாக்கள் இடம் பெறும். மழை வரவிருப்பதையே இவ்வழிபாடு உணர்த்தும். அங்கு கோயில் திருவிழா தொடங்கி விட்டதை அறிவிக்க கொடி ஏற்றப்படும். அன்று 'முளைப்பாரி கொட்டுதல்' என்ற ஒருநிகழ்ச்சி உண்டு. கிராமத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தாரும் குறிப்பிட்ட ஓரிடத்தில் ஒரு குடத்தில் நெல் தானியங்கள், பயறு வகைகள் ஆகியவற்றை விதைப்பார்கள்.

எட்டாம் நாள் அந்தக் குடங்களை கோயிலுக்குக் கொண்டு வருவார்கள். அந்த மூன்று நாட்களும் பெண்கள் பலர் சேர்ந்து மாரியம்மன் புகழைக் கும்மியடித்து பாடுவார்கள். பிறகு பானைகளுடன் வலம் வருவர். திருவிழாவின் இறுதில் அருகேயுள்ள குளம் அல்லது ஆற்றில் பானைகளை மூழ்கடித்து விடுவர்.

தமிழ்நாட்டு வழிபாட்டுச் சடங்குகளின் ஒரு கூறு சிற்சில மாறுதல்களுடன் சித்திரைச் செவ்வாய் விழாவாகப் பின்பற்றப்பட்டு வருவது புலப்படுகின்றது. இச்சடங்கின் போது கும்மிஆட்டத்துடன் பாடலும் இடம்பெறுகின்றது. இச்சடங்கு நிகழ்ச்சியின் போது நவதானியங்கள் முளைக்கவைத்தல் முக்கிய நிகழ்ச்சியாக உள்ளது. முளைக்க வைக்கத்தேவையான நவதானியங்களை வீடுவீடாகச் சென்று பெற்றுக் கொண்டனர். அவ்வாறு நவதானியங்களைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் அதற்குரிய பாடலைப் பாடினர். கன்னிப்பெண்கள் வீடுவீடாகச் செல்லும் போது இவ்வாறு பாடுவர்.

மாரியம்மனுக்காக கொண்டாடப்படும் இச்சடங்கில் நவதானியங்களின் வளர்ச்சி மிகவும் முக்கியமானதொன்றாகக் கருதப்படும். குறிப்பிட்ட பத்து தினங்களில் நவதானியங்கள் நன்கு வளர்ச்சியடைந்திருப்பின் அம்மன் அருள் பாலித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. நவதானியங்களுக்காக கடலை, பயறு, கானா எள்ளு, கொள்ளு, இறுங்கு,நெல், குரக்கன், தினை போன்றவற்றை தெரிவு செய்வர். நவதானியங்களை பாலிகைச் சட்டியில் உரமிட்டு சாணம் நிரப்பிபதித்து தூப தீபம் காட்டி காலையும் மாலையும் நீர் ஊற்றுவார்கள். இவற்றுக்கு பத்து வயதுக்குட்பட்ட பெண்கள் நீர் ஊற்றி பக்குவமாக வளர்ப்பார்கள்.

## பத்தாவது நாளான இன்று நைவேத்தியங்கள், படையல் செய்து பூஜையுடன் நிறைவு



இறுதி நாளுக்கு முந்தியசெவ்வாய்க்கிழமை இரவு மாரியம்மனுக்கு வேப்பிலைகும்பம் வைத்து அதற்குரிய பலகாரம், கனிகள் வைத்துஅன்று இரவு தொடங்கி விடியும் வரை ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் கும்மி கொட்டி கொண்டாடுவார்கள். இதனை செவ்வாய்க் கொட்டுதல் என்று அழைப்பார்கள்.

இறுதி நாளான இன்று புதன்கிழமை காலை கொழுக்கட்டை,பொங்கல் ஆகிய நைவேத்தியங்களை படையல் செய்து பூசை வைத்து வழிபடுவார்கள். அத்துடன் தேர் வடிவத்தில் அழகான பெட்டி செய்து பலவர்ண நிற ஓலைகளால் அலங்கரித்து அதற்குள் செவ்வாய் என்னும் பலகாரம் வைத்து அத்துடன் சோறு, பொரியல் வைத்து படையல் வைப்பார்கள். செவ்வாய் இரவு வைத்த இந்த படையல்களை புதன்கிழமை காலையில் எடுத்து வீடுகளுக்கு கொண்டு போய் உண்பார்கள்.

சித்திரை மாதம் வெப்பம் நிறைந்த காலப்பகுதியாகும். இக்கால கட்டத்தில் அம்மை நோய் கூடுதலாக வருவதுண்டு. இந்நோயை ஒழிப்பதற்கு மாரியம்மனுக்கு செய்யும் ஒரு நேர்த்தியாகவும் இதை உடப்பு கிராம மக்கள் கருதுகின்றனர் எனலாம். பெண்கள் ஒரேவர்ண சேலை அணிந்து வரிசையாக வலம் வந்து இரு கைகளாலும் ஓசை உண்டாக்கி செவ்வாய் கொட்டுவார்கள். இந்தக் கண்கொள்ளாக் காட்சி உடப்பு கிராமத்தில் மட்டும் பார்ப்பவரை கவரும் வண்ணம் நடைபெறுகின்றது. சித்திரைச் செவ்வாய் சடங்கு நிகழ்ச்சி இலங்கையில் ஏனைய எந்தவொரு பிரதேசத்திலும் இருப்பதாக அறிய முடியவில்லை. ஆனால் இதனுடன் தொடர்புடையதாக இந்தியாவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெறும் முளைப்பாரி சடங்கு நிகழ்ச்சி காணப்படுவதாக அறிய முடிகின்றது.

கலைச்சுடர் க.மகாதேவன்...
(உடப்பூர்)

# வறிய மக்களுக்குக் கைகொடுத்துதவும் காத்தான்குடி பிஸ்மி இளைஞர் கழகம்

பொருளாதார நெருக்கடியினால் நாடு பாதிக்கப்பட்டுள்ள இவ்வேளையில் முஸ்லிம்களில் வறிய நிலையில் உள்ளோர் நோன்புப் பெருநாள் காலத்தில் சிரமம் அடைகின்றனர். அவர்கள் நோன்புப் பெருநாளுக்கு புதிய ஆடைகளை வாங்குவதென்பது சிரமமாகும். ஆடைகளின் விலையும் உச்சத்திலுள்ளது.

இந்த நிலையில் வறிய குடும்பங்களுக்கு காத்தான்குடி பிஸ்மி இளைஞர் கழகத்தினர் உதவி புரிய முன்வந்துள்ளனர். ஏழைகளுக்கான இலவச ஆடையகம் ஒன்றை அவர்கள் ஆரம்பித்துள்ளனர். நோன்பு பெருநாளை முன்னிட்டு ஏழை மக்களுக்கு ஆடைகளை பகிர்ந்தளிக்கும் வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்பட்டுள்ளது.

பிஸ்மி இளைஞர் கழகத்தில் அங்கம் வகிக்கும் மாணவர்களின் பெற்றோர், அவர்களின் குடும்பங்கள் நலன்விரும்பிகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களிடம் இருக்கக் கூடிய நல்ல நிலையிலுள்ள ஆடைகளை அன்பளிப்பாகத் தரும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

அவ்வாறு சேகரிக்கப்பட்ட ஆடைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை காத்தான்குடி அல்மனார் வளாகத்தில் வைத்து பகிர்ந்தளிக்கப்பட்டன. காத்தான்குடி பிரதேச செயலகத்தினூடாகவும் சில பள்ளிவாயல்கள் ஊடாகவும் இதற்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு இதற்காக டோக்கன்கள் வழங்கப்பட்டு இந்த ஆடைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.





குறித்த பயனாளிகள் இங்கு வந்து சுயமாக ஆடைகளை தெரிவு செய்து பெற்றுச் சென்றனர். பிஸ்மி இளைஞர் கழகத்தின் உறுப்பினர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.நுஸ்ரி நழீமியின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிஸ்மி நிறுவனத்தின் ஸ்தாபகர் அஷ்ஷெய்க் எம்.பி.எம்.பிர்தௌஸ் நழீமி உட்பட பிஸ்மி கல்வி நிறுவனத்தின் விரிவுரையாளர்கள், ஊழியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

போது 200க்குமேற்பட்ட குடும்பங்கள் பயணடைந்துள்ளன.

எம்.எஸ்.எம்.நூர்தீன்...
(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# இலங்கைப் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம்-கொமர்ஷல் வங்கி ஒப்பந்தம்

AIA இன்ஷுரன்ஸ் நிறுவனத்தின் பெண்களுக்கான திட்டமான 'எய சுரக்கின AIA' ஆயுள் காப்புறுதிப் பாதுகாப்புடன் இலங்கை முழுவதுமுள்ள பெண்களின் நிதியியல் ஸ்திரத்தன்மையினை அதிகரிப்பதன் மூலமாக அவர்களை ஊக்கப்படுத்துவதற்காகப் பணியில் பெண்கள் IFCDFAT திட்டத்தின் கீழ் கொமர்ஷல் வங்கி சிலோன் ((CBC)) மற்றும் சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்துடன் ((IFC)) இணைந்து AIA மற்றுமொரு மைல்கல்லை எட்டியிருக்கின்றது.



கொமர்ஷல் வங்கி சிலோனுடனான ((CBC)) இந்த முயற்சியானது மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் நீண்ட காலத்திற்கு இலங்கையின் பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்யும் வகையிலான பெண்களை ஊக்கப்படுத்தும் மற்றும் அவர்களின் நீண்ட கால நிதியியல் உறுதிப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் கொமர்ஷல் வங்கியின் 'அணகி' மகளிர் கணக்கை வைத்திருப்பவர்கள் மற்றும் அவர்களின் அன்பிற்குரியவர்களுக்கு மிகவும் நியாயமான ஆயுள் காப்புறுதி மற்றும் நல்வாழ்வுத் தீர்வுகளை வழங்குகின்றது.

'அணகி' மகளிர் கணக்கை வைத்திருக்கும் பெண் வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் துணைக்கும் வருடமொன்றுக்கு ரூபா.1,100 எனும் மிகவும் குறைவான கட்டணத்திலிருந்து ஆரம்பிக்கும் ரூபா.1 மில்லியனிலிருந்து 5 மில்லியன் வரையிலான மிகவும் பொருத்தமான ஆயுள் காப்புறுதித் தீர்வுகளையே AIA இன்ஷுரன்ஸ் வழங்கும்.

இந்த ஆயுள் காப்புறுதித் திட்டமானது ஆயுள் காப்புறுதிதாரரின் இயற்கையான மற்றும் விபத்து மூலமான மரணங்கள் இரண்டையும் காப்பிடுகின்றது. இதற்கு மேலதிகமாக AIA இனுடைய ஆயுள் காப்புறுதித் தீர்வுகளைக் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களும் தங்களது வீடுகளில் மிகவும் பாதுகாப்பாகவும் சௌகரியமாகவும் இருந்தவாறே Fitzky செயலியினூடாக ஒவ்வொரு மாதமும் 12 இலவசமான நிகழ்நிலை (ஒன்லைன்) ஆரோக்கிய நல்வாழ்வு வகுப்புக்களில் கலந்து கொள்வதற்குத் தகுதி பெறுவார்கள். மேலும் நாடு முழுவதுமுள்ள ''My Dentist'' சிகிச்சை நிலையங்கள் ஊடாக தங்களது பற்சிகிச்சை ஆலோசனைகளை 15மூ விலைக்கழிவுடன் பெறுவதற்கும் இவர்கள் தகுதி பெற முடியும்.

பிரதான நிறைவேற்று அதிகாரி நிகில் அத்வானி கருத்துத் தெரிவிக்கையில்,

'தங்களது பெண் வாடிக்கையாளர்களின் நிதியியல் பாதுகாப்பு மற்றும் உறுதித்தன்மையினை கூட்டாக அதிகரிப்பதற்காக இலங்கையின் முன்னணி வங்கி ஒன்றான கொமர்ஷல் வங்கியுடன்கூட்டாண்மையினை ஏற்படுத்துவதையிட்டு AIA மிகவும் பெருமையடைகின்றது' என்றார்.

கொமர்ஷல் வங்கியின் நிர்வாகப் பணிப்பாளர் குழுமத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி சி.ரெங்கநாதன் கருத்துத் தெரிவிக்கையில், 'நாங்கள் பிரதானமாக கவனம் செலுத்துவோரில் பெண்களும் உள்ளனர். எங்களுடைய 'அணகி மகளிர் வங்கிச் சேவையின்' முதலீட்டிற்கு இந்த தனித்துவமான அனுகூலத்தினைச் சேர்ப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்' என்றார்.

இலங்கை மற்றும் மாலைதீவிற்கான IFC இன் நாட்டிற்கான முகாமையாளர் லீசா கெஷ்னர் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கைப் பெண்களின் பொருளாதாரப் பங்கேற்பை அதிகரித்தல், அதிர்ச்சிகளைத் தாங்கும் திறனை கட்டியெழுப்பல் மற்றும் வியாபாரத்தை மேம்படுத்தல் ஆகியவற்றுக்கு உதவுவதில் பெண்களுக்கான காப்புறுதிச் சந்தையின் பயன்படுத்தப்படாத சாத்தியமான திறனை உணர்வதானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்" என்றார்.

மேலதிக விபரங்களுக்கு 0112 353 353 ஊடாக கொமர்ஷல் வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறோ அல்லது அண்மையிலுள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைக்கு செல்லுமாறோ கேட்கப்பட்டுள்ளது.

# எனது பார்வையில் நோன்பு



## பேராசிரியர் அமரர் சோ. சந்திரசேகரம் பதிவுகளில் இருந்து



உலகளாவிய ரீதியில் முஸ்லிம்கள் ஆண்டுக்கொரு முறை நோன்பு நோற்கின்றனர். சிறுபராயம் முதல் நான் முஸ்லிம் அயலவர்களுடன் ஒன்றுசேர்ந்து வாழும் வாய்ப்பைப் பெற்றதனால், நோன்பின் மகிமையை நன்கு அறிவேன். முஸ்லிம்கள் தங்களது சமயத்தில் சொல்லப்பட்டவாறு மார்க்கக் கடமைகளைக் கட்டாயமாக கடைப்பிடிக்கின்றனர்.

நோய்வாய்ப்பட்ட ஒரு சிலரைத் தவிர ஏனைய முஸ்லிம்கள் நோன்பு நோற்பதில் கண்ணும் கருத்துமாக செயற்படுவதை நான் அவதானித்திருக்கிறேன். தனிப்பட்ட முறையில் நோன்பு நோற்பதைக் கடைப்பிடித்தாலும் கூட, அவர்களுடைய குடும்பமும் சூழவுள்ள சமூகமும் நோன்பு நோற்றிருக்கும் சிறுவர்கள் விடயத்தில் அவதானிப்பையும் கண்காணிப்பையும் செலுத்துவதைக் காணலாம்.

இவ்வாறான அவதானம் இளம் தலைமுறையினரை மட்டுமன்றி, மார்க்கக் கடமையிலிருந்து விலகிச் செல்வோரை நல்வழிப்படுத்தவும் சமயரீதியாக சமூகமயப்படுத்தவும் உதவுகின்றது என்பது நோன்பின் மற்றொரு சிறப்பம்சம்.

முஸ்லிம்கள் நோன்பு காலத்தில் பேணும் உணவுக் கட்டுப்பாடு மற்றும் நோன்பு கால வாழ்க்கை முறைகள் உள்ளத்தையும் உடலையும் தூய்மைப்படுத்த உதவுகின்றன என்பது மிகவும் பிரதானமான விடயம். நோன்பு காலம் தவிர்ந்த ஏனைய காலங்களிலும் உயர்தரமான வாழ்க்கை நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க நோன்புகாலப் பயிற்சிகளும் நடைமுறைகளும் ஒழுக்கங்களும் மகத்தான பங்காற்றுகின்றன.

தொழில்புரிவோர் நோன்பு காலத்தில் குறிப்பிட்ட நேரங்களுக்கு உணவைக் கைவிட்டாலும் தமது தொழில், உடைமைகளை கைவிடுவதில்லை. உண்ணா நோன்புடன் தமது ஐவேளைத் தொழுகையைப் பேணியவர்களாக அவர்கள் தமது தொழிற்கடமைகளில் உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் ஈடுபடுவது நோன்பின் மற்றொரு சிறப்பம்சமாகும்.

பொதுவாக இஸ்லாமியக் கடமைகள் அனைத்தும் முஸ்லிம்களின் வாழ்க்கையை நெறிப்படுத்துவதில் பெரும் பங்காற்றுகின்றன. பிறருக்கு உதவி செய்வது, பண்பாடாக நடந்து கொள்வது, விருந்தோம்பல் செய்வது போன்ற நற்பண்புகள் வளர்வதற்கு இந்த மார்க்க சிந்தனைகள்தான் காரணமாக அமைகின்றன.

இஸ்லாம் மதத்தின் செல்வாக்கின் காரணமாக முஸ்லிம்கள் இந்தப் பண்பாடுடையவர்களாக வாழ வேண்டும் என்ற சிந்தனையைப் பெறுகிறார்கள். குறிப்பாக பிறரை மதித்தல், ஆசிரியர்களை கௌரவப்படுத்தல், அண்மைக் காலங்களில் முஸ்லிம்கள் கல்வியில் செலுத்தி வருகின்ற கூடிய அக்கறை, தொழில் வாழ்க்கை, கல்வி வாழ்க்கை என்பவற்றில் இஸ்லாமிய சிந்தனைகளின் செல்வாக்கு நிறைந்து காணப்படுவதை அவதானிக்கலாம்.

தொகுப்பு:
**ஏ.எம்.முஹம்மத் ஸப்வான்...**
*சீனன்கோட்டை, பேருவளை*

---

# மாணவர்களின் விளையாட்டுத் துறை இரண்டரை வருடங்களாக பின்னடைவு

நாட்டில் கொவிட் தொற்று காரணமாக அரச மற்றும் தனியார் பாடசாலைகள் தொடர்ச்சியாக மூடப்பட்டமையால் அப்பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவ மாணவிகள் கற்றல் நடவடிக்கைகளுக்கு அப்பால் விளையாட்டுத் துறையிலும் பாரிய பின்னடைவை சந்தித்துள்ளனர்.

மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு பாடசாலைக்கு போக முடியாத நிலையிலும் கூட, கல்வி பல வழிகளில் நிறைவு செய்யப்படுகின்றது. ஆனால் மாணவர்களின் உடல் ஆரோக்கியத்தையும் எதிர்கால எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்யும் விளையாட்டுத்துறையை முழுமையாக முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மாணவர்கள் கல்வித்துறையோடு இணைப்பாடவிதான செயற்பாடாக விளையாட்டுத்துறையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.சில மாணவர்கள் விளையாட்டுத்துறையில் பிரகாசிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நாட்டின் பிரபலம் பெற்ற பாடசாலைகளில் இணைந்து கல்வி கற்று வருகின்றர். இவர்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் கொவிட் நிலைமை காரணமாக கடந்த இரண்டரை வருடங்களாக நிறைவேறாமல் போயுள்ளது. இதனால் மாணவர்கள் மனஉளைச்சலுக்கும் ஏமாற்றத்துக்கும் உள்ளாகியுள்ளனர்.



பாடசாலைகளில் முதலாம் தவணையில் பாடசாலை மட்டத்தில் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவது வழமையான ஒன்றாகும். இதில் குறிப்பிட்ட பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் மட்டுமே பங்கேற்பதால் அந்த காலப்பகுதி மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதுடன், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமடையில் சிறந்தவொரு புரிந்துணர்வும் நட்பும் ஏற்படுவது இயல்பு. அதேவேளையில் தமது இல்லம் வெற்றி பெற வேண்டும் என்ற அடிப்படையில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் இடையில் போட்டாபோட்டியும் ஏற்படுவதுண்டு. அந்த மனக்கசப்பு சிறிது காலத்தின் பின்னர் சீர்செய்யப்பட்டு விடும்.

சில மாணவர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலை மட்ட இல்ல விளையாட்டுப் போட்டியுடன் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதனை நிறுத்தி விடுவதுமுண்டு. ஏனெனில் தொடர்ச்சியாக விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுவதனால் தனது பிள்ளையின் கல்வி பாதிக்கப்பட்டுப் போய்விடும் என்ற காரணத்தாலாகும். விளையாட்டுகளில் பங்கேற்காமல் விடுவது சிலவேளை குறிப்பிட்ட பிள்ளைக்கு விருப்பமல்லாமல் இருக்கலாம். ஆனால் பெற்றோரின் வற்புறுத்தல் காரணமாக விளையாட்டுத் துறையிலிருந்து பிள்ளை விலகிக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் உள்ளன.

சில மாணவர்கள் வலய மட்டம், மாகாண மட்டம் தேசிய மட்டம் என இடம்பெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று தங்களில் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்காட்டுவதற்கான சந்தர்ப்பத்தை பெற்று முன்னேறிச் சென்று விடுகின்றனர்.

பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவ மாணவிகள் தமது வயது அடிப்படையிலேயே விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டியுள்ளதால் ஒவ்வொரு வருடமும் செல்லும் போது வயது அடிப்படை மாறிக் கொண்டு செல்லும். இதனால் கடந்த மூன்று வருடங்களாக தமது குறிப்பிட்ட வயதெல்லையில் தமக்கு விருப்பமான அல்லது தனது திறனை வெளிக்காட்டக் கூடிய விளையாட்டுத் துறையில் பங்கேற்காமல் பாடசாலை கல்விக்குரிய காலத்தை கடந்து பாடசாலையை விட்டு வெளியேறும் பல மாணவர்கள் இச்சந்தர்ப்பததை கைநழுவ விட்டுள்ளனர். இதனால் இவர்கள் மனஉளைச்சலுக்கு உள்ளாகியுள்ளர். காலங் கடந்து போன வயதெல்லை மீண்டும் திரும்பாது.

## இளவயதினருக்கு உடல் உள ரீதியில் பெரும் தாக்கம்

விளையாட்டுப் போட்டியின் போது தனிநபர் நிகழ்வுகளான சுவட்டு மற்றும் மைதான நிகழ்வுகளும், அஞ்சலோட்டம் போன்ற குழு நிகழ்வுகளும் இடம்பெறுவது வழமை. குழுநிலை போட்டியின் போது அந்த குறிப்பிட்ட குழு வெற்றி பெறும் போது அதில் பங்கேற்ற அனைவருக்கும் எதிர்காலத்தில் தமது வாழ்க்கையை தீர்மானிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

அதே போன்று பெருவிளையாட்டுகளான கிரிக்கட், காற்பந்து, வலைப்பந்து, கரப்பந்து, கூடைப்பந்து, கபடி போன்றவற்றிலும் தமது குழு சம்பியனாக தெரிவு செய்யப்படும் போது அதில் பங்கேற்ற அனைவருமே சாதனையாளர்களாகக் கருதப்படுகின்றனர்.

இவை தவிர உள்ளக விளையாட்டுகளான ஜிம்னாஸ்டிக், கராட்டி, கரம், செஸ், பெட்மின்ரன் போன்ற போட்டிகளிலும் தமது திறமைகளை வெளிக்காட்டும் மாணவர்கள் பலர் உள்ளனர். இன்று விளையாட்டுத்துறையில் மாகாண, மற்றும் தேசிய மட்டத்தில் சாதனை படைத்த மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியின் போது மேலதிக புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழகம் சென்று பட்டப்படிப்பினை மேற்கொண்டு வருகின்றனர். கல்விக் கல்லூரிகளில் உடற்கல்வித்துறையில் டிப்ளோமா பட்டப்படிப்பினை மேற்கொண்டு வருகின்றனர்.

பாடசாலைகளில் உடற்கல்வித் துறை பயிற்றுவிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுளளனர். சிலர் தனியார் நிறுவனங்களிலும் முப்படைகளிலும் தொழில்வாய்ப்பினை பெற்றுள்ளனர். இருந்தும் கொவிட் காரணமாக சுமார் இரண்டரை ஆண்டுகளுக்குள் தமது திறமையை வெளிக்காட்ட தவறிய மாணவர்களுக்கு இனி மேலாவது அதற்கான சந்தர்ப்பம் கிடைக்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
*(மாளிகைக்காடு குறூப் நிருபர்)*

---

# இலங்கையின் இன்றைய நெருக்கடிக்குத் தீர்வு காணும் போது சிறுவர்களின் தேவைகளுக்கு முன்னுரிமையளித்தல் அவசியம்

சிறுவர்கள் சம்பந்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளிலும், சிறுவர்களின் நல்லார்வங்களுக்கு முதன்மை அவதானம் வழங்கப்படல் வேண்டும் என ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகளுக்கான சாசனத்தின் (CRC) உறுப்புரை 3(1) குறிப்பிடுகின்றது.

இதன் அர்த்தம் என்னவென்றால், பெரியவர்கள் தீர்மானம் எடுக்கும் போது, அவர்களுடைய தீர்மானங்கள் எவ்வாறு சிறுவர்களைப் பாதிக்கும் என்பது குறித்து அவர்கள் சிந்திக்க வேண்டும். பெரியவர்கள் அனைவரும் தமக்கு நல்லதையன்றி, சிறுவர்களுக்கு நல்லதை செய்ய வேண்டும். பெரியவர்கள் என்பது பெற்றோர், பராமரிப்பு வழங்குபவர்கள் மற்றும் அரசாங்கத்தின் தீர்மானம் எடுப்பவர்களைக் குறிக்கின்றது.

உலகளாவிய சிறுவர் தடுப்பூசியேற்றத்தினை எட்டியமை (1989) முதல், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையை உருவாக்கல் (1998), அழிவுகரமான முரண்பாடு மற்றும் இயற்கை அனர்த்தங்களின் போது தேவையான முக்கியமான நிவாரணங்களை பல தசாப்தங்களாக வழங்குவது வரை நாடு முழுவதும், சிறுவர்களின் சுகாதார, கல்வி மற்றும் பாதுகாப்பு தரங்களை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க அடைவுகளை கடந்த வருடங்களில் யுனிசெப்புடன் இணைந்து இலங்கை அரசாங்கம் எட்டியுள்ளது.

ஆனால், தற்போது சிறுவர்களில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய நெருக்கடியை நாம் எதிர்கொண்டுள்ளோம்.

## கொவிட்–19 பெருந்தொற்று உள்ளடங்கலாக சிக்கலான நெருக்கடிகளை எதிர் கொள்வதிலும், சிறுவர் விவகாரங்களைக் கையாள்வதிலும் இலங்கை சிறந்த முன்மாதிரியாக செயற்பட்டமைக்கு பாராட்டு

தற்போதைய நிலைமையினால் சிறுவர்கள் மீதான தாக்கத்தின் உண்மையான அளவு இதுவரை கணிக்கப்படாத போதிலும், ஏனைய நெருக்கடிகளைப் போன்றே போதிய உணவு, கல்வி, சுகாதார மற்றும் பாதுகாப்பு சேவைகளுக்கான அணுகும் வசதி தடைப்படும் போது மிகவும் மோசமாக பாதிக்கப்படுபவர்களாக சிறுவர்கள் உள்ளனர்.



“தவணை முடிவதற்கு முன்னரே கொழும்பில் உள்ள எனது பாடசாலையை மூடவேண்டியேற்பட்டது. எரிபொருள் இன்மையால் என்னால் பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை. பாடசாலை வாகனத்திற்கு எனக்கு எரிபொருள் தேவை” என 17 வயதான ஜித்மினி அண்மையில் யுனிசெப்பிடம் குறிப்பிட்டார்.

“இரவில் அதிக உஷ்ணமாக இருப்பதால் அமைதியாக உறங்க முடியவில்லை. மின்சாரம் இல்லை. இரவில் விழித்திருந்து, காலையில் களைப்புடன் இருக்கின்றோம்” என 12 வயதான செனுனி கூறுகின்றார்.

சிறுவர்கள் மத்தியில் பாடசாலைகளிலும், சுகாதார நிலையங்களிலும், ஊட்டச்சத்து மிக்க உணவுக்கான அவர்களது அணுகும் வசதியிலும், இந்த நெருக்கடியானது தாக்கத்தை ஏற்படுத்தும் போது இவ்வாறான பல கூற்றுகளை நாம் செவிமடுக்க நேர்கின்றது.

வறுமையின் சுமையுடன் சேர்ந்து, கொவிட் 19 மற்றும் தற்போதைய நெருக்கடி என்பன சிறுவர்களை, குறிப்பாக இலங்கையின் எதிர்காலத்திற்கு தொலைநோக்கு விளைவுகளுடன் அதிக பாதிப்புக்குள்ளாகக் கூடிய சிறுவர் மற்றும் சிறுமிகளை பாதிக்கின்றது.

தற்போதைய நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கமும், அனைத்துப் பங்குதாரர்களும் பணியாற்றும் போது, சிறுவர்களின் தேவைகளை முன்னுரிமைப்படுத்தல் மற்றும் கல்வி, சுகாதாரம், உணவு மற்றும் பாதுகாப்புக்கான அவர்களது உரிமைகளைப் பாதுகாத்தல் என்பன காக்கப்பட வேண்டும். நெருக்கடியின் விளைவுகள் சிறுவர்கள் மீது திணிக்கப்படாது இருப்பதனை உறுதி செய்வதற்கு பின்வருவனவற்றை யுனிசெப் பரிந்துரைக்கின்றது:

முதலாவதாக, சிறுவர்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் போது, அவர்கள் செவிமடுக்கப்படுவதுடன், அவர்களது கருத்துக்களை முக்கியமானதாக கருத வேண்டும். தமது எதிர்காலத்தைப் பாதிக்கக் கூடிய விடயங்களில் தமது கரிசனைகளை வெளிப்படுத்துவதற்கும், பங்குபற்றுவதற்கும் அர்த்தமுள்ள வகையில் தமது குரல்களை எழுப்புவதற்கான சந்தர்ப்பத்தை சிறுவர்களுக்கு வழங்குவது அரசாங்கம் மற்றும் அனைத்து பெரியவர்களினதும் பொறுப்பாகும். அவ்வாறு செய்வதன் மூலம், சிறுவர்கள் கையாளப்படக் கூடாது என்பதுடன், அனைத்து சந்தர்ப்பங்களிலும் சிறுவர்களின் பாதுகாப்புக்கான அனைத்து அடிப்படை உத்தரவாதங்களும் பிரயோகிக்கப்பட வேண்டும்.

## யுனிசெப் இலங்கை அலுவலகம் விடுத்துள்ள வேண்டுகோள்

கல்வி நடவடிக்கைகள் மேலும் பாதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கு சிறுவர்களது கல்வியை பாதுகாத்தல். இலங்கை உள்ளடங்கலாக, உலகளாவிய ரீதியில் சிறுவர்களின் கல்வி நடவடிக்கையில் கொவிட்19 பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உலகம் எதிர்கொண்ட நீண்ட கால பாடசாலை மூடலை சந்தித்த நாடுகளில் ஒன்றாக இலங்கை உள்ளது. பெருந்தொற்றின் காரணமான தடங்கல் சமத்துவமின்மை பெரிதாகுவதற்கும், கற்றல் இழப்பிற்கும் காரணமாகியது. கடந்த தசாப்தங்களில் பெற்ற அடைவுகளினை இது முழுமையாக பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது காணப்படும் மின்வெட்டினால், வீட்டில் இருந்து இணைய வழி கற்றல் என்பது அனைத்து சிறுவர்களுக்கும், பருவமானவர்களுக்கும் மேலும் சிக்கலாக மாறியுள்ளது. பெருந்தொற்றுக்கு முன்னரும், பெரும்பாலான நலிவுற்ற சிறுவர்கள் பின்தங்கியவர்களாக இருந்தனர். சமத்துவமின்மை மற்றும் கற்றல் இழப்புக்களையும் தணிப்பதற்கு நேரடியாக பாடசாலையில் கற்பதனை தொடர்வது குறித்து இலங்கை அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கான வவுச்சர்கள் உள்ளடங்கலாக இலகுவில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடியவர்கள் தங்கியிருக்கக் கூடிய பாதுகாப்பு முறைமைகளை காத்தல். அத்தகைய பல பெண்களுக்கு, தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு இந்த வவுச்சர்கள் வாழ்க்கைக்கு முக்கியமானதாகும். அத்துடன், தொடர்ச்சியான மகப்பேற்று சேவைகளுடன், 624 மாதங்களுக்கு இடைப்பட்ட சிறுவர்களுக்கு உயிர்ச்சத்து மிகைநிரப்பிகளை வழங்குதல் என்பன இந்த இலகுவில் பாதிக்கப்பட்ட குழுக்கள் மத்தியில் மற்றொரு நெருக்கடி ஏற்படுவதனை தடுப்பதற்கு முக்கியமாகும்.

சுகாதாரம் மற்றும் சுத்தமான நீர் உள்ளடங்கலாக, சிறுவர்களுக்கான ஏனைய அத்தியாவசிய தேவைகளுக்கான அணுகும் வசதியை உத்தரவாதப்படுத்தல். அத்தியாவசிய மருந்துகளுக்கான தட்டுப்பாடு குறித்து அறிக்கை அனைவருக்கும் கரிசனையை ஏற்படுத்துவதாகும். மின்சாரமின்மை அல்லது குழாய்களுக்கான எரிபொருள் இன்மையால் நீர்க்குழாய்களும் செயற்படாது போகலாம். சுத்தமான நீர் கிடைக்காத போது, பாதுகாப்பற்ற நீர் மூலங்களை சமுதாயங்கள் தேடிச் செல்லும். இது நோய்கள் ஏற்படுவதற்கு காரணியாகும். மருந்துகளின் பற்றாக்குறையின் போது இவ்வாறான நோய்கள் ஏற்படுவது இலங்கைச் சிறுவர்களுக்கு பெரும் பாதிப்பாக அமையும்.

நிலைமை முன்னேற்றம் காணும் போது, நாட்டின் எதிர்காலமான, குறிப்பாக இலகுவில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய இலங்கையின் இளம் பிரஜைகளில் தாக்கத்தினை நெருக்கமாக கண்காணித்தல் அரசாங்கத்தின் முயற்சிகளில் உள்ளடங்குவது அவசியமாகும்.

மிக அண்மையில் கொவிட்19 பெருந்தொற்று உள்ளடங்கலாக சிக்கலான நெருக்கடிகளை எதிர்கொள்வதில் இலங்கை சிறந்த முன்மாதிரியாக இருந்துள்ளது. சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் மிகவும் அவசியமான பகுதியில் முதலீடு செய்வதன் மூலம் சிறுவர்களுக்கு நலன் மிக்கதாக விடயங்களை இலங்கை மாற்றும் என யுனிசெப் உறுதியாக நம்புகின்றது.




**யுனிசெப்**
*(இலங்கை அலுவலகம்)*

## உயிரிழந்தவர்களில் ...

(03 ஆம் பக்கத் தொடர்)

கடந்த 2019 ஏப்ரல் 21 ஆம் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறுதினத்தாக்குதலுடன் தொடர்புடையவர்களின் குடும்ப உறுப்பினர்கள், ஏப்ரல் (26) சாய்ந்தமருது – வெலிவேரியன் பகுதியிலுள்ள வீடொன்றில் மறைந்திருந்த நிலையில், பாதுகாப்பு படைகளுடனான மோதலின்போது குண்டை வெடிக்கச் செய்து தற்கொலை செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## சமையல் எரிவாயு விலை...

விலை அதிகரித்துள்ளமை நாளுக்கு நாள் டொலரின் பெறுமதி அதிகரித்து வருகின்றதையடுத்து இந்த விலையதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை சமையல் எரிவாயு விலைகளை அதிகரிக்காமல் தொடர்ந்தும் நட்டத்தில் அதனை விற்பனை செய்ய முடியாதென ஏற்கனவே தெரிவித்திருந்த லிட்ரோ கேஸ் நிறுவனம் 2,500 ரூபாவால் 12.5 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை அதிகரிப்பதற்கு அனுமதி கோரி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## அரசாங்க செலவினங்களை...

அனுப்பி வைக்கப்பட்டுள்ளது..

அரச துறையில் ஆட்சேர்ப்புகளை இடைநிறுத்தல் திட்டங்களுக்கான செலவினங்களை கட்டுப்படுத்தல், எரிபொருள் பாவனைகளை கட்டுப்படுத்தல், தகவல் தொடர்பு செலவுகள் மற்றும் ஏனைய செலவினங்களை கட்டுப்படுத்தல் இதனூடாக மேற்கொள்ளப்பட வேண்டும் என அந்த சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொது செலவினங்களை அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அந்த சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஸ)

## 3,600 மெற்றிக் தொன்...

லிற்றோ கேஸ் நிறுவனம் தெரிவித்திருந்த நிலையில் நேற்றைய தினம் அதில் 3600 மெட்ரிக் தொன் சமையல் எரிவாயு நாட்டை வந்தடைந்து ள்ளதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்தது.

அது தொடர்பில் லிற்றோ கேஸ் நிறுவனத்தின் தலைவர் விஜித ஹேரத் தெரிவிக்கையில்:

நேற்றைய தினம் மேலும் 3,600 மெற்றிக் தொன் எரிபொருளை தாங்கிய கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது. அதனை இன்று முதல் அதனை சந்தைக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

அதேவேளை மேலும் இரண்டு தினங்களுக்குள் மேலும் 3600 மெற்றிக் தொன் எரிபொருளுடன் கப்பல் நாட்டை வந்தடையவுள்ளது. அதற்கிணங்க இரண்டு கப்பல்களிலும் 7200 மெற்றிக் தொன் எரிபொருள் நாட்டை வந்தடையும் தட்டுப்பாடின்றி மக்களுக்கு எரிபொருளை வழங்கும் வகையில் எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் எதுவித தாமதமுமின்றி உடனடியாக மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, குறைந்த விலையில் சமையல் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நாளாந்தம் தமது நிறுவனம் சுமார் 25 கோடி ரூபா நட்டத்தை எதிர்கொள்ள நேர்ந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## மின் கட்டணத்தை 100 வீதம்...

தெரிவிக்கும் வகையில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்துவதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தயாராகவுள்ளது.

# பிரதமரின் அரசுக்கு ஆதரவாக 124 எம்பிக்கள்

### இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பெரும்பான்மை தொடர்பில் பல்வேறு தரப்பிலிருந்தும் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்த போதும், பிரதமர் தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்து 124 எம்.பிக்கள் பாராளுமன்றத்தில் உள்ளதாக இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த தெரிவித்துள்ளார்.

அவ்வாறு பிரதமருக்கு ஆதரவு வழங்கும் 124 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது தீர்மானத்தை எழுத்து மூலமாக வழங்குவதற்கும் தயாராகவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பாராளுமன்றத்தில் 113 உறுப்பினர்களை காட்ட முடியாத குழுவுக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டால் 124 பேரின் ஆதரவுடனுள்ள பிரதமருக்கு ஆதரவளிக்கும் 124 பேரும் எதிர்க்கட்சியில் அமர்வதற்கும் தயாராகவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமண வீரசிங்க அது தொடர்பில் தெரிவிக்கையில், அரசாங்கம் பதவி விலகாவிட்டால் பாராளுமன்றத்தில் சுயமாக செயற்படும் குழு நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவருவது உறுதி எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது பிரதமர் தமது பதவியிலிருந்து விலகாவிட்டால், அரசாங்கத்திற்கு எதிராக கொண்டுவரப்படும் நம்பிக்கை யில்லாப் பிரேரணைக்கு ஒத்துழைப்பு வழங்க நேரிடும் எனத் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன அது தொடர்பில் தெரிவிக்கையில், பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை காட்டினால் மாத்திரம் நாட்டின் முக்கிய பிரச்சினையான பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுபெற்றுக் கொள்ளமுடியாதென்றும்தெரிவித்துள்ளார். (ஸ)

# பயங்கரவாத தடை சட்டத்தில் கைதான 10 பேர் விடுதலை

### வாழைச்சேனை நீதவான் உத்தரவு

மட்டக்களப்பு கிரான் பகுதியில் கடந்தாண்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 10 பேரையும் குற்றமற்றவர்களாக அறிவித்து வாழைச்சேனை நீதவான் நீதிமன்றம் விடுவித்துள்ளது.

கிரான் பகுதியில் கடந்த ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டித்தமை தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், சட்ட மாஅதிபரின் ஆலோசனைக்கமைய சந்தேகநபர்களை விடுவித்து நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்..

# ஈஸ்டர் தாக்குதல் உண்மைகளை அரசு ஒருபோதும் மறைக்காது

### மறைக்கவும் விரும்பவில்லை

**ஷம்ஸ் பாஹிம்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் எதனையும் மறைக்கும் தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. இது தொடர்பில் பொய்யான கருத்துகள் பரப்பப்படுவதாக இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நாலக்க கொடஹேவா தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நியாயம் நிலைநாட்டப்பட வேண்டுமென பாப்பரசர் வத்திகானில் வைத்து கோரியிருப்பது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் எதனையும் மறைக்கும் தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. இது தொடர்பான அனைத்து தகவல்களும் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொய்யான கருத்துகள் பரப்பப்படுகின்றன. இந்த விடயம் தொடர்பிலான உண்மை சம்பவங்களை வெளியிட இருக்கிறோம். மெல்கம் கர்தினால் ரஞ்சிதுக்கு இன்னும் தேவையான தகவல்களை வழங்க தயாராக இருக்கிறோம்.இதில், அரசாங்கத்துக்கு மறைப்பதற்கு எதுவும் கிடையாது. மறைப்பதால் கிடைப்பது எதுவும் இல்லை. அரசின் நிலைப்பாட்டை ஏற்காத குழுக்களும் உள்ளன என்றார்.(பா)

# நம்பிக்கையில்லா பிரேரணையில் 115 எம்.பிக்கள் கையொப்பம்

### மே 03 ஆம் திகதி சபாநாயகரிடம் கையளிக்க தீர்மானம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

அரசாங்கத்திற்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பது மற்றும் இடைக்கால அரசாங்கமொன்றை உருவாக்குவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அரசாங்கத்தின் சுயாதீன எம்.பிக்கள் குழுவுக்குமிடையில் முக்கிய பேச்சுவார்த்தையொன்று நடைபெற்றுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸின் அலுவலகத்தில் நடைபெற்றுள்ள மேற்படி பேச்சுவார்த்தையில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, ராஜித சேனாரத்ன, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, கயந்த கருணாதிலக்க, எஸ்.எம். மரிக்கார் ஆகியோரும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சுயாதீன குழுவின் சார்பில் முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்ச, உதய கம்மம்பில, முன்னாள் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் டிரான் அலஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர். அரசாங்கத்திற்கு எதிராக சமர்ப்பிக்கவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையில் 115 எம்.பிக்கள் கையொப்பமிட்டுள்ளதாகவும் அதனை எதிர்வரும் 03 ஆம் திகதி சபாநாயகரிடம் கையளிக்கவுள்ளதாகவும் இதன்போது ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

## வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு...

அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன் பிரகாரம், கூட்டு ஆதனங்களின் பெறுமதி குறைந்தபட்சம் 75,000 அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு மேலதிகமாக முதலீடு செய்கின்ற வெளிநாட்டவர்களுக்கு மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகளின் பணிப்பாளர்களுக்கு, அவர்களுடைய துணைவருக்கும் தங்கிவாழ்பவர்களுக்கும் அவ்வாறு முதலீடு செய்கின்ற அமெரிக்க டொலரின் அளவுக்கமைய 05 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான நீண்டகால வதிவிட வீசா வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு இலங்கை மத்திய வங்கியால் அங்கீகாரமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் குறைந்தது 1,00,000 அமெரிக்க டொலர்களை வைப்பிலிடும் வெளிநாட்டவருக்கு 10 ஆண்டுகளுக்கான வதிவிட வீசா வழங்குவதற்கு இயலுமை கிட்டும் வகையில் 'தங்க சுவர்க்க வீசா நிகழ்ச்சித் திட்டம்' எனும் பெயரிலான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (பா)

## மின்சார கட்டண அதிகரிப்பு...

எனினும், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி அளிப்பதானது, முதல் தடவை அல்ல என்றும், கட்டண திருத்தங்களுக்கான கோரிக்கை 2015 முதல் பலமுறை முன்வைக்கப்பட்டது என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார். இதனை நடைமுறைப்படுத்தவோ, திருத்தவோ அல்லது பிரேரணையை நிராகரிக்கவோ அமைச்சரவைக்கு அதிகாரம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய மின்சாரக் கட்டணத்தை திருத்தும் கோரிக்கை தொடர்பில் இதுவரையில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லையென அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர மேலும் தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணத்தை நூறு வீதம் அதிகரிப்பதற்கு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி அளித்துள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் வேண்டுகோளுக்கு அமையவே மேற்படி கட்டணஅதிகரிப்பை மேற்கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழு தெரிவித்தது.

எவ்வாறெனினும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இதுவரை எந்த தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லையெனஎரிசக்தி, மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சார கட்டண அதிகரிப்பு தொடர்பில் அனுமதி வழங்குவது இது முதல் தடவையல்ல என்றும், பல தடவைகள் அனுமதியை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர், அதனை நடைமுறைப் படுத்துவதற்கு, திருத்துவதற்கு அல்லது நிராகரிப்பதற்கு அமைச்சரவைக்கு பூரண அதிகாரம் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி மின்சார கட்டணங்களில் திருத்தங்களை மேற்கொள்ளும் வகையில், இதுவரை எந்தவித தீர்மானத்தையும் மின் சக்தி அமைச்சினால் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ) மின்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்...

ஹாபிஸ் நஸீரை, கட்சியிலிருந்து நீக்கிவிட்டதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அறிவித்துள்ளார்.

இதனையடுத்தே, ஹக்கீமின் இரட்டை வேடம் என்ற தலைப்பில் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அவசரக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். அந்த கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எந்த விசாரணையுமின்றி என்னை உடனடியாக கட்சியை விட்டு நீக்கியதாக கூறப்படும் எந்தத் தகவலும் இதுவரை எனக்கு வரவில்லை, அவ்வாறு கிடைத்தால் அதற்குத் தகுந்த பதிலளிப்பேன் என்றும் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் தெரிவித்துள்ளார்.

அவர் தனது கடிதத்தில் தொடர்ந்தும் தெரிவித்துள்ளதாவது,

2020 ஆகஸ்ட் 05 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன வெற்றி பெற்று இரண்டு மாதங்களுக்கு பின், 2020 ஒக்டோபர் மாதமளவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்புமனுவினூடாக தற்போதைய பாராளுமன்றத்திற்கு மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் நான். தற்போது அதிகாரத்தில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்துடன் இணைந்து நான், செயற்படுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் தீர்மானமே காரணமாகும்.

அவ்வாறிருக்கையில், முறையான விசாரணைகள் எதுவுமின்றி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து என்னை திடீரென நீக்கிவிட்டதாகக் கூறி அவர் எவ்வாறு இந்த நாட்டைத் தவறாக வழிநடத்த முடியும்?

தற்போது, நமது அயல் நாடொன்றில் இலங்கையின் தூதுவராக இருக்கும் அவரது நண்பருடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினதோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தியினதோ அனுமதி இன்றி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியுடன் உறுதியான புரிந்துணர்வுக்கும் ரவூப் ஹக்கீம் வந்ததை அவரால் மறுக்க முடியுமா?

அதனை தொடர்ந்து, 2020 ஒக்டோபர்18ஆம்திகதி ரவூப்ஹக்கீமின் கார்னிவல் (Carnival) அலுவலகத்தில் ஜனாதிபதியின் சகோதரர் பசில் ராஜபக்ஷவுடன் ஒரு மணி நேரத்துக்கு மேல் சந்திப்பு நடத்தியதை அவர் மறுக்க முடியுமா? இச்சந்திப்பில் ரவூப் ஹக்கீமின் அழைப்பின் பேரில், நான் உட்பட எம்.சி.பைசால் காசிம், எச்.எம்.எம்.ஹரீஸ், தௌபீக் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டதுடன் எங்கள் அனைவரையும் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிக்குமாறும் பொதுஜன பெரமுன அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறும் எங்களை வேண்டிக் கொண்டதால், நான் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற விரும்பினாலும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் மற்றும் அவரது கண்டி மாவட்ட தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு என்பவற்றின் காரணமாக அவரால் அவ்வாறு செய்ய முடியாமல் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் பொதுஜன பெரமுனவை, அத்தேர்தலில் அமோக வெற்றியுடன் பாராளுமன்றத்துக்கு அனுப்பியிருப்பதாலும், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எனது வாக்காளர்களின் நலன் கருதியும், அதிகாரத்திலுள்ள அரசாங்கத்துடன் இணைந்து வாக்காளர்களுக்கு அத்தியாவசியமான தேவைகளை பெற்றுக்கொடுக்க நான் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவது அவசியமானதாலும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதை உடன்படுகிறேன்.

அதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட எமது அரசியல் கட்சியின் தலைமையின் வேண்டுகோளுக்கிணங்க, அவரை நம்பி 20ஆவது திருத்தத்துக்கு வாக்களித்தேன். ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியின் அழுத்தத்தின் காரணமாக ரவூப் ஹக்கீம் வாக்களித்தமைக்காக எனது விளக்கத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால் ரவூப் ஹக்கீம்தான், நான் பொது ஜன பெரமுனவுடன் இணைந்து பணியாற்ற வேண்டுமென்று அவர் கட்டாயாப்படுத்தியதற்கேற்ப நான் செயற்பட்டதை ரவூப் ஹக்கீம் நன்றாக அறிந்திருந்ததால், இவ்விடயம் தொடர்பாக ரவூப் ஹக்கீம் என்மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை.

கடந்த 2020 ஆம் ஆண்டு நவம்பர் 03, அன்று பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்ததற்காக, என்னை கட்சியிலிருந்து நீக்கிவிட்டதாக இப்போது திடீரென்று ரவூப் ஹக்கீம் கூறுகிறார், இந் நீக்கமும் கூட ஜனாதிபதி என்னை நாட்டின் அவசர தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அவருக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டு, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியை பெற்றுக் கொண்டதன் பின்னரே இந் நீக்கம் ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையில் அங்கம் வகிக்குமாறு ஜனாதிபதி அழைத்ததன் பின்னரே, தேசிய நலன் கருதி அதனை நான் ஏற்றுக்கொண்டேன்.

## எதிரணியின் பிரேரணையையும் உள்ளடக்கி...

அடிப்படைச் சட்டமூலம் மற்றும் தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு திருத்த யோசனைகள் தொடர்பாகக் கலந்துரையாடி பொது உடன்பாடுகளுடன் சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான பிரேரணையை சமர்ப்பிக்க பிரதமருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

புதிய அமைச்சரவையின் முதலாவது கூட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் (25) பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் கூடிய போது, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் இது தொடர்பான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து மேற்கண்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

நாட்டில் தற்போது நிலவும் சூழலில் மேலெழுந்துள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்காக அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியான உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் அரசியலமைப்புக்கு பொருத்தமான திருத்தங்களை அறிமுகப்படுத்துவது உகந்ததென அரசியல், தொழில் வாண்மை மற்றும் சமூகப் பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பல தரப்பினர்கள் வலியுறுத்துகின்றனர். அந்நிலைமையைக் கருத்தில் கொண்டு பிரதமரினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கமைய பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

@ பத்தொன்பதாவது மற்றும் இருபதாவது அரசியலமைப்பு திருத்தங்களிலுள்ள சாதகமான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்தி பாராளுமன்றத்துக்கு அதிக அதிகாரங்கள் கிட்டும் வகையில் இருபத்தோராவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான அடிப்படைச் சட்டமூலத்தை துரிதமாக தயாரிப்பதற்கு சட்ட வரைஞருக்கு தேவையான வழிகாட்டல்களை வழங்குவதற்காக அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிக்க அமைச்சரவை முடிவு செய்தது. @ இவ்வாறு தயாரிக்கப்படும் அடிப்படைச் சட்டமூலம் மற்றும் தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு திருத்த யோசனைகள் தொடர்பாகக் கலந்துரையாடி, பொது உடன்பாடுகளுடன் சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிக்குமாறு பாராளுமன்றத்தில் பிரேரணையொன்றைச் சமர்ப்பிதற்கு பிரதமர் அவர்களுக்கு அதிகாரமளிக்கவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளதென்றும் அமைச்சர் குறிப்பிட்டார். ஏற்கெனவே, இரு தனிநபர் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு அவற்றையும் கருத்திற் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (பா)

## எக்காரணம் கொண்டும் பிரதமர் பதவி விலகத்...

“பயப்படவேண்டாம் நான் பதவி விலக மாட்டேன்” என்றும் அவர்கள் மத்தியில் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ,ஆளும் கட்சி அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் பேரவையினர் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றுள்ளது.இதன்போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் பிரதமரும் இவ்வாறு தெரிவித்தார்.

அதேவேளை அந்த யோசனையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அனுப்புவதற்கு மாகாண சபை உறுப்பினர்களின் பேரவை தீர்மானித்துள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு எதிர்காலத்திலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை வகிப்பது அவசியமென்றும் அந்த பேரவையின் உறுப்பினர்கள் இந்த சந்திப்பின்போது ஏகமனதாக தெரிவித்துள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பெயரையும் புகைப்படத்தையும் மக்கள் மத்திக்கு கொண்டு சென்று அதன் மூலம் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள் தற்போது பிரதமருக்கு எதிராக சுயாதீன குழுவாக செயற்படுவது எந்த வகையிலும் தர்மமாகாது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் 69 இலட்சம் மக்கள் இப்போதும் பிரதமருடன் உள்ளதாகவும் அவரது மௌனம் காரணமாக சிறு தரப்பினரின் எதிர்ப்பு சமூக வலைத்தளங்கள் மற்றும் முன்னணி ஊடகங்கள் மூலம் பெரும் பிரச்சாரத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதன் காரணமாகவே நாட்டில் இத்தகைய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(ஸ)

## அரசாங்கத்துக்கே இன்னும்...

அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரச தலைவராக ஜனாதிபதி நெகிழ்வுப் போக்குடன் பணியாற்றுகிறார். அரசை மாற்ற பாராளுமன்றத்தில் இணக்கப்பாடு வருமாக இருந்தால், அதனைத்தான், எதிர்க்கப் போவதில்லையென ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

வரலாறு முழுவதும் பொருளாதார நெருக்கடி இருந்து வந்துள்ளது. அரசியல் போராட்டங்களில் அரச எதிர்ப்பு இருக்கும். பாராளுமன்ற ஜனநாயகத்துக்கமைய அரசியலமைப்புக்குட்பட்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும். இந்தப் பிரச்சினைகளுக்கு பாராளுமன்றத்தில் தான் தீர்வுள்ளது. நாம் ஜனநாயகத்தை மதிக்கிறோம். அரசுக்கு எதிராக ஒரு தரப்பு ஆர்ப்பாட்டம் நடத்துகிறது. நாடு அராஜகமடைந்தால் யார் நாட்டுக்குத் தேவையான எரிபொருள் கொண்டுவருவார்கள்? யார் அத்தியாவசிய பொருட்களை கொண்டுவருவார்கள்?.நாட்டை நிர்வகிக்க அமைச்சரவை தேவை. ஜனாதிபதியையோ பிரதமரையோ மாற்றுவது தொடர்பில் அரசியலமைப்பில் தெளிவாக உள்ளது. அதற்கு வெளியில் சென்று மாற்றம் செய்ய முடியாது.

மாற்றம் நிகழ பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கவேண்டும். தற்போதைய நிலையில் அரசாங்கத்துக்கு பெரும்பான்மை பலமுள்ளது. அரசாங்கத்துக்கு பெரும்பான்மை இருக்கையில் ஜனாதிபதிக்கோ, பிரதமருக்கோ விலகுமாறு கோர முடியாது. முதலில் பாராளுமன்ற பெரும்பான்மை பலம் மாற வேண்டும். தற்போதைய நெருக்கடிக்கு இடைக்கால அரசுதான்தீர்வாக அமையும். ஜனாதிபதி அதற்கு அழைப்பு விடுத்துள்ளார். ஜனாதிபதியை நீக்க குற்றப் பிரேரணை கொண்டுவர வேண்டும். போராட்டம் நடத்தி மாற்ற முடியாதென்றும் அவர் குறிப்பிட்டார்.

இடைக்கால அரசு தொடர்பான கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், 150 தாண்டிய பலமான அரசாங்கம் 2020 இல் உருவானது. ஆனால் 39 எம்.பிக்கள் சுயாதீனமாக செயற்பட தீர்மானித்ததால் இந்த நிலைமை மாறியது. தற்போதைய அரசியல் நெருக்கடி நிலை பொருளாதார நெருக்கடிக்கு ஒத்துழைப்பாக இருக்காது. அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண ஜனாதிபதி முன்னுரிமை வழங்கினார்.பிரதமர் தவிர்ந்த அனைவரும் விலகி சர்வகட்சி அரசோ இடைக்கால அரசோ உருவாக்க அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் யாரும் முன்வராததால் நாட்டை நிர்வகிப்பதற்காக பாரிய திருத்தம் செய்து இளம் அமைச்சர்களை அவர் நியமித்தார். மக்கள் இவ்வாறான அமைச்சரவையையே எதிர்பார்த்தனர்.

நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர முயற்சி நடைபெறுகிறது. இந்த நிலையில் தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி மகாசங்கத்தினருக்கு அறிவித்துள்ளார். இடைக்கால அரசை அமைக்க அவர் இன்னும் தயாராக இருக்கிறார். அரச தலைவராக அவர் நெகிழ்வுப் போக்குடன் இருக்கிறார். எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று தெரியாது அரசை மாற்ற பாராளுமன்றத்தில் இணக்கப்பாடு வருமாக இருந்தால் தான் அதனை எதிர்க்கப் போவதில்லையென ஜனாதிபதி தெரிவித்துள்ளார். மக்களின் பிரச்சினைக்கான தீர்வு பொருளாதார நெருக்கடி தீர்விலே உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

(பா)

# நகர்வலம்



## மாத்தறை பள்ளிவாசல்களில் லைலதுல் கத்ர் ஏற்பாடுகள்

(மாத்தறை தினகரன் நிருபர் )

மாத்தறை மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிவாசல்களிலும் புனித லைலதுல் கத்ர் இரவை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ரமழான் பிறை 27 ல் லைலதுல் கத்ர் இரவாகும். அன்றைய தினம் மாத்தறை கடை வீதி ஜூம்ஆப் பள்ளிவாசலில் லைலதுல் கத்ர் இரவை முன்னிட்டு அன்னதானம் வழங்கவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

குறித்த தினத்தில் பள்ளிவாசல்களில் குர்ஆன் மஜ்லிஸ், திக்ர் மஜ்லிஸ், இஃதிகாப் இருத்தல், தஸ்பீஹ் தொழுகை, கியாமுல் லைல் தொழுகை, பயான் நிகழ்ச்சிகள், தராவீஹ் தொழுகை என்பனவும் நடைபெறவுள்ளன. நாட்டுக்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் ஆசி வேண்டி விசேட துஆ பிரார்த்தனைகளும் நடைபெறவுள்ளன. முஸ்லிம் பெண்களுக்கும் பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மினுவங்கொடயில்

## பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த நான்கு முக்கிய தலைவர்கள் கைது

### ரீ – 56 ரக துப்பாக்கியுடன், கைகுண்டு, ஆயுதங்களும் மீட்பு

(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

மினுவங்கொட, ஹீன்ஹெட்டியேன பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பேர் கொண்ட பாதாள உலகக் கோஷ்டியின் தலைவர்களை நீர்கொழும்பு வலயக் குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை (24) கைது செய்த போது, அவர்களிடமிருந்து மூன்று தன்னியக்க துப்பாக்கிகளையும்

கைப்பற்றியுள்ளனர். நீர்கொழும்பு வலயக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி கிஹான் மனோஹரவுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் மேற்படி கோஷ்டியின் தலைவர்களை ஆயுதங்களுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி பாதாள உலகத் தலைவர்களை பொலிஸார் விசாரணை செய்த போது அவர்களிடமிருந்து ரீ 56 துப்பாக்கி ஒன்று, 11 துப்பாக்கிச் சன்னங்கள், இரண்டு கையடக்க பிஸ்டல்கள், குறித்த பிஸ்டல்களுக்கு பயன்படுத்தப்படும் 9 மில்லி மீட்டர் அளவுடைய 8 சன்னங்கள் மற்றும் கைக்குண்டு ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இவர்கள் கொந்தராத்து அடிப்படையில் கொலை முயற்சியொன்றுக்கு தயாராகிக் கொண்டு ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பதாக கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் பேரிலேயே அவர்களை சுற்றி வளைத்து கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்களை விசாரணை செய்தபோது, தாம் தற்போது டுபாய் நாட்டில் தலைமறைவாக வசித்து வருகின்ற பிரபல பாதாள உலகின் தலைவர்களான ஹீன்ஹெட்டியேன, கோனமடின்ன பிரதேசத்தைச் சேர்ந்த நுரேஷ் சுபுன் தயாரத்ன (மகேஷ்) மற்றும் கெஹெல்பத்தர மந்திரகே பத்மசிறி ஆகியோரின் அடியாட்கள் எனவும் தெரிவித்துள்ளனர். நீர்கொழும்பு வலயப் பொலிஸார் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

உலக சாதுலிய்யா தரீக்காவின்

## ஆன்மிக தலைவரின் மறைவிற்கு சீனன்கோட்டை அல் ஸலாஹ் அனுதாபம்



அகில உலக சாதுலிய்யா தரீக்காவின் ஆன்மீக தலைவர் சேகு ஸஜ்ஜாதா அஷ்ஷெய்கு அஜ்வாத் அல்பாஸி (ரஹ்) அவர்களின் திடீர் மறைவு குறித்து பேருவளை, சீனன்கோட்டை அல்ஸலாஹ் அரபிக்கல்லூரியின் நிர்வாகம், உஸ்தாத்மார்கள் அனைவரும் தமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து அனுதாபச்செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சங்கைக்குரிய செய்கு நாயகம் அஜ்வாத் அல்பாஸி அல்மக்கி அஷ்ஷாதுலி (ரஹ்) அவர்கள் சாதுலியா தரீக்காவின் வளர்ச்சிக்கு தான் மரணிக்கும் வரை அர்ப்பணிப்புடன் செயற்பட்டதை இந்நாட்டு முஸ்லிம்கள் நன்கு அறிவர். இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட செய்கு நாயகம் அவர்கள், நமது ஊரான சீனன்கோட்டைக்கும் விஜயம் செய்தபோது எமது அல்ஸலாஹ் அரபுக்கல்லூரிக்கும் விஜயம் செய்தார். இதன்போது எமது மத்ரஸாவின் வளர்ச்சிக்கு துஆ செய்ததையும் எமது கல்லூரி நினைவு குறிப்பு புத்தகத்தில் அவர் தனது வாழ்த்தை பதிவிட்டிருப்பதையும் நாம் அன்போடு நினைவு கூர்கிறோம். வல்ல நாயன் அன்னாரின் நற்செயல்களை அங்கீகரித்து மேலான ஜென்னத்துல் பிர்தௌஸ் கிடைக்க இச்சந்தர்ப்பத்தில் துஆ பிரார்த்தனை செய்வதாகவும் அல்ஸலாஹ் மத்ரஸா விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



எஸ்.கே. காசிலிங்கம் தொகுத்த "ஓர் ஒப்பனை இல்லாத முகம்" எனும் நூலின் அறிமுக விழா ஞாயிற்றுக்கிழமை (24) மாலை கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் வினோதன் மண்டபத்தில் நடைபெற்றபோது நூலின் முதல் பிரதியை ஸ்ரீதர்சிங் புரவலர் ஹாசிம் உமருக்கு வழங்குவதையும் அருகில் உடுவை எஸ்.தில்லை நடராசா, பிரதம ஆசிரியர்களான செந்தில் வேலவர் (தினகரன்) எஸ்.கே.கஜன் (வீரகேசரி) , ஆர்.பி.ஹரன் (தினக்குரல்), எழுத்தாளர் மல்லியப்பூ சந்தி திலகர், சாகித்திய ரத்னா தெளிவத்தை ஜோசப் ஆகியோர் உடன் காணப்படுகின்றனர்.

## மாணவர்களை அச்சுறுத்தி பணம் அபகரிப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

சித்திரை புத்தாண்டில் பொருள் கொள்வனவு செய்வதற்கு அநுராதபுரம் நகரிற்கு சென்றிருந்த பாடசாலை மாணவர்களை அச்சுறுத்தி அவர்களிடம் இருந்து 20 ஆயிரம் ரூபா பணத்தை அபகரித்து தப்பிச்சென்ற நபர் ஒருவரை அநுராதபுரம் பொலிசார் (23) கைது செய்துள்ளனர்.

புதிய ஆடைகளை கொள்வனவு செய்வதற்காக அநுராதபுரம் புதிய நகரிற்கு சென்று நகர மத்தியில் அமைந்துள்ள கும்பிச்சங்குளத்தை பார்வையிடுவதற்கு சென்றிருந்த மிஹிந்தலை பகுதியைச் சேர்ந்த உயர் தரத்தில் கல்வி கற்று வரும் இரு மாணவர்களை அச்சுருத்தி சந்தேக நபர் பணத்தை அபகரித்து சென்றிருந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

தன்னை பொலிஸ் உத்தியோகத்தர் என அடையாளப்படுத்தி உங்கள் இருவரையும் உயர் பொலிஸ் அதிகாரியிடம் விசாரணைக்காக அழைத்துச் செல்ல வேண்டியுள்ளதாக கூறி புகையிரத வீதி ஊடாக ஸ்ரீராவஸ்திபுர பகுதிக்கு அழைத்துச் சென்று 20,000 ஆயிரம் ரூபா பணத்தை அபகரித்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

ரயில் மிதி பலகையில் பயணித்தவர்

## பாலமொன்றில் மோதி கீழே விழுந்து உயிரிழப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

கொழும்பில் இருந்து அநுராதபுரம் நோக்கி சென்று கொண்டிருந்த புகையிரத வண்டி மிதி பலகையில் பயணித்துக்கொண்டிருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் ஸ்ரீராவஸ்திபுர புகையிரத வீதியில் அமைந்துள்ள பாலத்தில் மோதி கீழே விழுந்து கடந்த (22) உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் பொலிசார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் சாலியபுர இராணுவ முகாமில் கடமையாற்றி வரும் சிப்பாயொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளவராவார்.

உயிரிழந்தவர் ஸ்ரீராவஸ்திபுர புகையிர நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள கருப்பு பாலத்தில் விழுந்தே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் லக்மால் விஜேரத்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## தென் மாகாண முஸ்லிம்கள் நோன்புப் பெருநாள் பொருட்கள் கொள்வனவில் அதிக ஆர்வம்

(வெலிகம தினகரன் நிருபர்)

புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளை முன்னிட்டு தென் பிராந்திய முஸ்லிம்கள் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் ஆடைப் பொருட்களை கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடந்த வருடங்கள் நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக சிறப்பாக பெருநாட்களைக் கொண்டாட முடியாமல் இருந்தது. எனினும் இம்முறை சிறப்பாகக் கொண்டாட முஸ்லிம்கள் தயாராகி வருகின்றனர்.

பொருளாதார நெருக்கடி, பொருட்களின் விலைகளின் அதிகரிப்பு, அரசியல் நெருக்கடி போன்ற இன்னோரன்ன நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பொருட்களை கொள்வனவு செய்வதில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிராமப் புறமக்கள் காலி, மாத்தறை, வெலிகம போன்ற நகர்ப்புறங்களுக்குச் சென்று பொருட்களை கொள்வனவு செய்து வருகின்றனர்.

ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளுக்கு இன்னும் ஓரிரு தினங்களே இருக்கும் நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் தீர்ந்து சௌக்கியமான சூழல் ஏற்பட வேண்டுமென இறைவனிடம் பிராத்தனை புரிதல் மற்றும் மதவழிபாடுகளில் கூடுதல் ஈடுபாடு காட்டுதல் போன்ற வணக்கவழிபாடுகளில் அதிகம் கரிசனை காட்டி பெருநாளைக் கொண்டாடி மகிழுமாறும் வீணான கேளிக்கைகள், களியாட்டங்களை தவிர்த்துக் கொள்ளுமாறும் முஸ்லிம்கள் வேண்டப்படுகின்றனர்.

கணவன் – மனைவியிடையே வாய்த்தர்க்கம்;

## கூரிய ஆயுதத்தால் தாக்கி மனைவி படுகொலை

### கணவன் கைது; கட்டான பகுதியில் சம்பவம்

(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதால் தனது மனைவியைக் கணவன் ஸ்தலத்திலேயே கொலை செய்த கொடூரமான சம்பவமொன்று கட்டான பொலிஸ் பிரிவில் கடந்த சனிக்கிழமை (23) நடைபெற்றுள்ளதாக கட்டான பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தினத்தன்று பகல் உணவு பரிமாறும் போதே கணவனுக்கும் மனைவிக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வாக்கு வாதத்தின் போது மனைவியின் பின்புறக் கழுத்துப் பகுதியினை கணவன் கூரிய இருமுனைக் கத்தியினால் (கிறீஸ் கத்தி) கடுமையாக தாக்கியுள்ளார் என பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

ஆனமடுவ, பள்ளம பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட விதாரனகே நிஹால் ஷெல்டன் (57 வயது) என்ற பெயருடைய குறித்த கணவன் கட்டான, அக்கர 50 பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட குணசிங்ககே நிஷானி பிரியங்கனீ (46 வயது) என்ற பெண்ணை திருமணம் செய்துள்ளார். மேற்படி தம்பதியினருக்கு ஒன்றரை வயதுடைய குழந்தையொன்றும் உள்ளதெனவும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.



புனித ரமழான் மாதத்தினை முன்னிட்டு ஹம்பாந்தோட்டை தீனிய்யா பள்ளிவாசலில் (23) நடைபெற்ற இப்தார் நிகழ்வில் பலர் கலந்து கொண்டுள்ளதை படத்தில் காணலாம். படம். ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்


திகதி 25.04.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4743
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.10,093,100.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,896,043.00
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 2 4 2 2 8 2

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0052
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,246,860.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,895,108.80
இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 26 39 41 58

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 773
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,512,740.00
O 01 17 66 72
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 108,620,918.80

கோடி 24+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1091
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,765,000.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 248,982,998.00
M 11 36 46 63 72
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01


## பாத்திமா பர்ஹா 159 புள்ளிகள்



கடந்த 2021ஆம் ஆண்டில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய பலபிட்டிய தேர்தல் தொகுதியின் ஒரேயொரு முஸ்லிம் பாடசாலையான துந்துவை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களில் பாத்திமா பர்ஹா என்ற மாணவி (159 புள்ளிகள்) சிறந்த பெறுபேற்றை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதோடு மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த இப்பாடசாலையின் ஒரேயொரு மாணவியும் இவராவார். இம்மாணவி சித்திபெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார். இவர் துந்துவை பாடசாலை வீதியில் வசிக்கும் மொஹமட் காமில் மற்றும் பாத்திமா ஷாமிலா ஆகியோரின் அன்புப் புதல்வியுமாவார்.

வாடகை என்ற போர்வையில்;

## வெறிச்சோடிய பகுதிக்கு அழைத்துச் சென்று ஆட்டோ சாரதி குத்திக்கொலை

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

வாடகை என்ற போர்வையில் முச்சக்கர வண்டி சாரதியை வெறிச்சோடிய பகுதிக்கு அழைத்துச் சென்று குத்திக்கொலை செய்துவிட்டு அவரிடமிருந்த பணத்தை எடுத்துச் சென்றுள்ளதாக அநுராதபுரம் பொலிசார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் தேவநம்பியதிஸ்ஸபுர நீராவிய பகுதியைச் சேர்ந்த மொஹமட் ஹனிபா றிஸ்வீ (56 வயது) மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளவராவர்.

அநுராதபுரம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அருகாமையில் அமைந்துள்ள விலச்சிய பிரதேசத்திற்கு செல்லும் பஸ் தரிப்பிட முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் அமர்த்தப்பட்டிருந்த முச்சக்கர வண்டி சாரதிக்கு அருகாமையில் சென்ற நபர் ஒருவர் கட்டுகலியாவ பகுதிக்கு செல்ல வேணும் என கூறி முச்சக்கர வண்டியில் ஏறியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

முச்சக்கர வண்டி கட்டுகலியாவ வீதியில் வுலங்குளம் குளத்திற்கு அருகில் பயணித்ததுடன் சந்தேக நபர் முச்சக்கர வண்டி சாரதியின் கழுத்தில் கத்தியொன்றை வைத்து அச்சுறுத்தி சாரதியிடம் இருந்த பணத்தை கேட்டுள்ளதாகவும் பணத்தை கொடுக்காமையினால் இருவருக்கும் இடையில் சண்டை மூண்டுள்ளதாகவும் இவ்வேளையில் சந்தேக நபர் சாரதியின் உடம்பில் நான்கு இடங்களில் கூரிய கத்தியினால் குத்தி காயப்படுத்திவிட்டு பணத்தை எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

குத்துக்காயத்திற்குள்ளான சாரதி கடந்த மூன்று தினங்களாக அநுராதபுரம் போதனா வைத்தியசாலை அதி சத்திர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த (20) உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரிடம் எவ்வளவு பணம் இருந்தது என்பது தொடர்பில் சரியாக கூறமுடியாதுள்ளதெனவும் பொலிசார் தெரிவித்தனர்.




# வெளி.வாழ் இலங்கையர்களுக்கு முதலீட்டு வாய்ப்புகள் உருவாக்கி கொடுக்கப்படும்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



**பருத்தித்துறை விசேட நிருபர்**

வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு இலங்கையில் முதலீடு மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்களை நாட்டுக்கு வரவழைத்து முதலீடு மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் பொருட்டு அரசாங்கம் 11 அம்ச கொள்கை திட்டம் ஒன்றை தயாரித்துள்ளது.

மேலும் வட மாகாணத்தில் இரண்டு வருடத்தில் விவசாயத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் தயார் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அதுமட்டுமல்லாது பெண் தலைமைத்துவத்தை கொண்ட குடும்பங்கள், கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், முதியவர்கள், சமுர்த்தி பயனாளிகள் மற்றும் நிரந்தர வாழ்விடங்கள் அற்றவர்கள் தொடர்பிலும் தொடர்ச்சியாக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது

வடக்கில் எரிபொருள் விநியோகம் அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் என்பவற்றை தடையின்றி வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகிறது.

தீவக பகுதிகளின் தேவைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி வருகின்ற நிலையில் அரச சேவையின் மூலம் மக்களிடமே தேடிச் சென்று குறை தீர்க்கும் கலாசாரம் மேலும் அதிகரிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ் கட்சிகளுடன் அமெரிக்க தூதுவர் சந்திப்பு



**யாழ்.விசேட நிருபர்**

தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் யாழில் அமெரிக்கத் தூதுவர் ஜீலி சுங்கை சந்தித்து கலந்துரையாடினர். யாழ்ப்பாணம் கொக்குவிலிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இச்சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்டோரே சந்திப்பில் பங்கேற்றனர்.

# வடக்கில் அதிகரிக்கும் வீதி விபத்துக்கள்

**சாவகச்சேரி விசேட நிருபர்**



வீதி விபத்துகள் தொடர்பாக மக்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தாத பட்சத்தில் விபத்தினால் ஏற்படும் மரணங்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுதோகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்ற விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டட திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

நவீன முறைமைகளை அரச மருத்துவமனைகளில் ஏற்படுத்த வேண்டும். எம்மிடம் உள்ள ஆளணியைப் பயன்படுத்தி சிறந்த வைத்திய சேவையை மக்களுக்கு கொடுக்க முடியும். இன்றைய சமூகத்தில் டெங்கு மரணம், கர்ப்பிணி மரணம்,சிசு மரணம் என்றால் பெரிய பேசு பொருளாக காணப்படுகிறது. ஆனால் வீதி விபத்துக்களை எவரும் பெரிதாக கணக்கில் எடுப்பதில்லை.

சில வேளைகளில் எமது பகுதியில் மாதத்திற்கு 1015 பேர் வரை வீதி விபத்தில் மரணிக்கின்றனர். அண்மையில் கூட மிருசுவில் ரயில் கடவையில் பாரிய விபத்து. அக் கடவையில் இதுவரை 5 பேர் ரயில் மோதி மரணமடைந்துள்ளனர். இது தொடர்பாக விழிப்புணர்வு மிக அவசியம்.தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் இவ்வாறான நடவடிக்கைகளிலும் முன்னின்று செயற்பட்டு தேவையற்ற மரணங்களை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# அமெரிக்க தூதுவர் முகமாலை பகுதிக்கு விஜயம்

## கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை பார்வையிட்டார்





**(பரந்தன் குறூப் நிருபர்)**

அமெரிக்க தூதுவர் ஜீலி சுங் முகமாலை பகுதியில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை பார்வையிட்டார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க தூதுவர் நேற்று காலை 7.45 மணியளவில் முகமாலை பகுதிக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்க கொடையாளர்களின் நிதியுதவியில் முகாமாலை பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை நேரில் பார்வையிட்டுள்ளார்.

டாஸ் நிறுவனத்தின் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் மனிதநேய பணிகள் தொடர்பில் அமெரிக்க தூதுவருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

தொடர்ந்து அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை நேரில் சென்று பார்வையிட்டதுடன், மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களுடன் கலந்துரையாடியிருந்தார். அப்பகுதியில் அகற்றப்பட்ட ஆபத்துமிக்க வெடி பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு தூதுவருக்கு விளக்கமளிக்கப்பட்டது. தொடர்ந்தும் அப்பகுதியில் கண்ணிவெடிகள் காணப்படுகின்ற இடங்கள், தேவைகள் தொடர்பிலும் அதிகாரிகளால் விளக்கமளிக்கப்பட்டது.

தொடர்ந்து கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள டாஸ் நிறுவனத்தின் பணியாளர்களுடன் புகைப்படம் எடுக்கப்பட்டது.

இவ்விஜயத்தின்போது அமெரிக்க தூதரக அதிகாரிகள், டாஸ் நிறுவனத்தின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது மனிதநேயம் மிக்க பணியை முன்னெடுத்துவரும் ஊழியர்களை தூதுவர் பாராட்டியதுடன். தொடர்ந்தும் பணிகளை முன்னெடுக்குமாறும் அவர் கூறியிருந்தார். அங்கு பணிபுரியும் பெண்களுடன் தனியாக புகைப்படம் ஒன்றினையும் அவர் எடுத்துக்கொண்டார்.

# 40 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது

**கரவெட்டி தினகரன் நிருபர்**

நெத்தலி ஆற்றுப் பகுதியிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளிலிருந்து 40 லீற்றர் கசிப்பினை பொலிஸார் மீட்டுள்ளதுடன் இருவரையும் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய

புதுக்குடியிருப்பு நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளை சோதனையிட்ட போது இவர்களிடமிருந்து 40 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார்.

# தந்தை செல்வாவின் 45 ஆவது நினைவு தினம்

**யாழ்.விசேட நிருபர்**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் 45 ஆவது நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில், நேற்றைய தினம் செவ்வாய்க் கிழமை ஓய்வு நிலை ஆயரும் தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு தலைவருமான கலாநிதி சு.ஜெபநேசனின் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நினைவுத் தூவிக்கு மலர் அஞ்சலி செலுத்தி மரியாதை செய்யப்பட்டது.



அஞ்சலி நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் சிவில் சமூக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

# திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் அதே இடத்திலிருந்து மீட்பு

**யாழ்.விசேட நிருபர்**

மோட்டார் சைக்கிளை இயங்கு நிலையில் விட்டு ஆலய தரிசனத்தில் ஈடுபட்டவரின் மோட்டார் சைக்கிளில் திருடப்பட்டு மறுநாள் அதே ஆலய வளாகத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் அராலி வீதியில், கல்லுண்டாய் வெளி ஊடாக கடந்த ஞாயிற்றுக்கிழமை பயணித்த இளைஞன் ஒருவர் அப்பகுதியில் உள்ள வைரவர் ஆலயத்திற்கு முன்பாக தனது மோட்டார் சைக்கிளை இயங்கு நிலையில் நிறுத்தி விட்டு, ஆலய வழிபாட்டில் ஈடுபட்டுள்ளார். அவ்வேளையில் அவரது மோட்டார் சைக்கிளை இளைஞன் ஒருவர் திருடிக்கொண்டு அவ்விடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளார். அதுதொடர்பில் மோட்டார் சைக்கிள் உரிமையாளர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மோட்டார் சைக்கிளில் திருடப்பட்ட வைரவர் ஆலயம் முன்பாக, மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து , பொலிஸார் மோட்டார் சைக்கிளை மீட்டு சென்றுள்ளனர்.

# யாழ்.மாவட்டத்திலிருந்து இடமாற்றம் பெறாத 47 அதிபர்கள்

**கோப்பாய் குறூப் நிருபர்**

யாழ். வலயத்தில் ஆசிரியர் நியமனத்தின் போதும் இதுவரை வெளிமாவட்டம் செல்லாத 47 அதிபர்கள் யாழ் மாவட்டத்திலேயே தொடர்ந்து இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் தீவகம் தவிர்ந்த யாழ், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய வலயங்களிலேயே அதிபர்கள் கடமையாற்றுகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் தற்போது முதற்கட்டமாக 27 அதிபர்கள் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். எனினும் 27 பேரும் மேல்முறையீடு செய்திருப்பதாக அறிய வருகிறது. இவ்வளவு காலமும் அரசியல் செல்வாக்கு அதிகாரிகளின் செல்வாக்கு என்பவற்றை பயன்படுத்தி யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறாத 47 பேரும் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுவதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரனைத் தொடர்பு கொண்டபோது தாம் அதிபர்கள் இடமாற்றம் தொடர்பில் உறுதியாக இருப்பதாகவும் சரியான மருத்துவ அறிக்கை வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் பரிசீலிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



முஸ்லிம்களின் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை 6.20 மணிக்கு மௌலவி சுபியான் தலைமையில் சர்வமதத்தலைவர்கள் பங்குபற்றுதலுடன் யாழ் தனியார் விருந்தினர் விடுதியில் சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கலந்து கொண்டார். படம் கோப்பாய் குறூப் நிருபர்

# கிழக்கின் குரல்



## தந்தை செல்வாவின் 45வது சிரார்த்த தினம் மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு

### பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்பு





**(வெல்லாவெளி தினகரன், மட்டக்களப்பு விசேட நிருபர்கள்)**

தந்தை செல்வாவின் 45வது சிரார்த்த தினம் மட்டக்களப்பில் சிறப்பாக இடம்பெற்றது. தமிழ் இனத்தின் அடையாளமாக திகழ்ந்த வரும், தமிழ்தேசிய பற்றாளருமான தந்தை செல்வாவின் 45வது சிரார்த்த தினம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. நேற்று செவ்வாய்க்கிழமை (26) காலை 09.00 மணிக்கு மட்டக்களப்பு தந்தை செல்வா நினைவு முற்றத்தில் நிறுவப்பட்டுள்ள அன்னாரின் திருவுருவ சிலைக்கு முன்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்,

இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவருமான பொன்.செல்வராசா தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு அதிதிகளினால் மலர் மாலை அணிவித்து, ஒளித்தீபமேற்றி மலரஞ்சலி செலுத்தி, அகவணக்கம் செலுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம் (ஜனா), இரா.சாணாக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.ஸ்ரீநேசன், சீ.யோகேஸ்வரன், பா.அரியநேந்திரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான மா.நடராஜா, இந்திரகுமார் பிரசன்னா, மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் எஸ்.சத்தியசீலன், முன்னாள் அரசாங்க அதிபர் மா.உதயகுமார், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், மதப்பெரியார்கள், பெண்கள், மகளிர்கள், தமிழ்தேசிய பற்றாளர்கள், ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



நீண்ட நாட்களின் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிபொருளுக்கான வரிசை நீங்கி வழமை போன்று எரிபொருள் விநியோகிக்கப்படுவதை காணலாம்.
(படம்: மட்டக்களப்பு குறூப் நிருபர்)

## காரைதீவில் கரையோர பாதுகாப்பு திணைக்கள கலந்துரையாடல்

**(காரைதீவு குறூப் நிருபர்)**

கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் திங்கட்கிழமை (25) காரைதீவு பிரதேச சபை ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம் பெற்றது.

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில், கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரி, கடல் சார் திணைக்கள அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி, பிரதேச செயலக கரையோரப்பாதுகாப்பு உத்தியோகத்தர், பிரதேச சபை செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதில் கரையோரச் சுத்தம் சம்பந்தமாக பல விடயங்கள், சட்டத்திற்கு முரணான செயற்பாடுகள் தொடர்பாக தவிசாளரினால் பேசப்பட்டது.

இக் கலந்துரையாடலில் முக்கியமாக கலந்து கொள்ள வேண்டிய சுற்றுச்சூழல் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் என்பன அழைப்பு விடுக்கப்பட்டிருந்தும் கலந்து கொள்ள வில்லை .

அதனால் பல விடயங்களை செயற்படுத்த முடியாமல் போனதாகவும் அனைத்து துறைசார்ந்த அதிகாரிகளும் இவ்விடயங்கள் தொடர்பாக அக்கறையுடன் செயற்பட்டு சுற்றுச் சூழலையும் இயற்கை வளங்கள்களை பாதுகாத்து வளமான காரைதீவு பிரதேசத்தை உருவாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென தவிசாளரினால் சுட்டிக்காட்டப்பட்டது.

## சவர்க்காரங்களை கொள்வனவு செய்ய மக்கள் முண்டியடிப்பு



**தோப்பூர் குறூப் நிருபர்**

தோப்பூர் உப பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பல்வேறு பிரதேசங்களில் அமையப்பெற்றுள்ள பலசரக்கு வர்த்தக நிலையங்களில், பொதுமக்கள் முண்டியடித்துக் கொண்டு சவர்க்கார வகைகளை கொள்வனவு செய்ததை அவதானிக்க முடிந்தது.

தோப்பூர் மற்றும் பாலத்தோப்பூர் நகரப்பகுதியில் அமையப் பெற்றிருந்த வர்த்தக நிலையங்களில் இவ்வாறு பொதுமக்கள் திடீரென அதிகளவில் வருகை தந்து சவர்க்கார வகைகள் மற்றும் சலவைத்தூள் வகைகளை கொள்வனவு செய்து வருகின்றனர்.

சமூக ஊடகங்களில் சவர்க்கார வகைகளுக்கு 100 வீத விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் பரவியதை அடுத்து, பொதுமக்கள் பழைய விலையிலான சவர்க்கார வகைகளை அதிகளவில் கொள்வனவு செய்து சேகரித்து வைக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பொத்துவில் சுகாதார பிரிவில் உணவகங்கள் பரிசோதனை

**(ஒலுவில் விசேட நிருபர்)**



பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட உணவகங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் ஆகியன பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் எம்.எஸ். அப்துல் சமட் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனைக்கமைய பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவினால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும், இது தொடர்பாக உணவகங்கள் மற்றும் வியாபார உரிமையாளர்கள், உணவு பரிமாறுவோர் ஆகியோருக்கு சுகாதாரம் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.


உணவு விற்பனை நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது நுகர்வுக்குப் பொருத்தமில்லாத உணவுப் பொருட்கள் மற்றும் காலாவதியான உணவுப் பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டு உரிமையாளர்களின் சம்மதத்துடன் அழித்தொழிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகாரசட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு அமைய வேண்டுமெனவும், உணவு தயாரிப்போர்,உணவுவிநியோகிக்கும்இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றின் தூய்மையாக வைத்திருக்க வேண்டுமெனவும் இதனை மீறுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

உணவு பாதுகாப்புசட்டதிட்டங்களை மீறுபவர்களுக்கெதிராக நீதிமன்றினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதோடு, பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அதன் உரிமையாளருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்நிலையங்கள் மூடப்படுமெனவும் மேலும் தெரிவித்தார்.

## இவரை காணவில்லை

**கந்தளாய் தினகரன் நிருபர்**



கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதுரசா நகர் இல 163/1 பேராறு பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான என். ரபிஸ் (வயது முப்பது) என்பவரை காணவில்லை. மனநிலை பாதிக்கப்பட்ட இவரை, ஒரு வாரமாக காணவில்லை என கந்தளாயில் பொலிஸ் நிலையத்தில் காணமல் போனவரின் தந்தை முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை (22) அதிகாலையிலிருந்து காணாமல் போய் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த நபர் கடைசியாக அணிந்திருந்த சிவப்பு நிற கலர் டி சேர்ட் அணிந்திருந்ததோடு EP UU 4187 இலக்கத் தகடு உடைய பல்சர் மோட்டார் வண்டியுடன் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவரை யாராவது கண்டால் 0750540619 எனும் இலக்கத்துக்கு அறியத்தருமாறு அவரின் தந்தை கேட்டுள்ளார்.



'ஜனாதிபதியின் சுபிட்சமான நாடு வளமான தேசம்' வேலைத்திட்டத்தின் கீழ், நஞ்சற்ற உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சொறிக்கல்முனை, வீரச்சோலை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு சேதனப் பசளை தயாரிப்பதற்கான உபகரணங்களை நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் பயனாளி ஒருவரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.
(படம்: சவளக்கடை குறூப் நிருபர்)

## வறிய மாணவர்களின் கல்விக்கு உதவ வசதிபடைத்தவர்கள் முன்வர வேண்டும்

**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

வறிய மாணவர்களின் கல்விக்கு உதவுவதன் மூலம் சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்க முடியும் என பேராசிரியர் கலாநிதி எஸ்.எல். றியாஸ் தெரிவித்தார்.

சம்மாந்துறையில் சமாதான கற்கைகள் நிறுவனம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த புதிய கற்கை நெறிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில், உரையாற்றிய நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ். எல்.றியாஸ், தொடர்ந்து உரையாற்றுகையில்,

வசதி படைத்த மாணவர்கள் கல்வியில் காட்டும் ஆர்வத்தை விட வசதி குறைந்த மாணவர்கள் கல்வியில் காட்டும் ஆர்வம் அதிகமாகவே காணப்படுகின்றது. ஆனால் வசதி குறைவு மாணவர்கள் தமது குடும்பத்தில் நிலவும் வறுமை காரணமாக கல்வியை இடையில் கைவிட்டு குடும்ப சுமையை குறைக்க கூலி வேலைகளுக்கு செல்ல ஆயத்தமாகின்றனர். இதனால் இம் மாணவர்களின் எதிர்காலம் இருள் மயமானதாக மாறி சமூகத்தில் பாரிய பிரச்சினைகள் ஏற்படுவதற்கு ஏதுவாகின்றது.

இவ்வறிய மாணவர்களின் குடும்பம் நிலைமையை கருத்திற் கொண்டு வசதிபடைத்த தனவந்தகர்கள், இம் மாணவராகளுக்கு உதவி செய்ய முன்வந்தால் அதுவே உலகில் பாரிய மனிதாபிமான உதவியாக இருக்கும் என தெரிவித்தார்.

## இன நல்லிணக்க இப்தார் நிகழ்வு

**ஒலுவில் மத்திய விசேட நிருபர்**



அம்பாறை மாவட்டத்தில் இன நல்லிணக்கத்தை முன்னிலைப்படுத்துகின்ற இப்தார் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக தமிழ், முஸ்லிம் உறவை மேம்படுத்துவதற்கு வாய்ப்பாக இந்த இப்தார் நிகழ்வுகள் அமைந்து நிற்பதை காண முடிகின்றது.

இந்த வகையில் கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் இன நல்லிணக்கத்துக்கான இப்தார் நிகழ்வு, கடந்த சனிக்கிழமை சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் தாணிஸ் ரஹ்மத்துல்லாஹ் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், இன நல்லிணக்கத்துக்கான ஆன்மிக அதிதியாக காரைதீவு குரு குடைச்சாமி, சர்வ மத பீடத்தின் பரிபாலகர் கொடைச்சாமி ஜீவாகரன் சுவாம்ஜி கலந்து சிறப்பித்தார்.



அம்பாறை மாவட்ட சமாதான நீதவான் சங்கம், அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்துடன் இணைந்து நடாத்திய இப்தார் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பொத்துவில் பிரதான வீதியில் அமைந்துள்ள "கிங் ஏசீயா ஹோட்டலில்" நடைபெற்ற போது.
(படம்: பாலமுனை தினகரன்,அக்கரைப்பற்று வடக்கு நிருபர்கள்)

## சிறுவர் பராமரிப்பு நிலையம் திறந்து வைப்பு

**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

அம்பாறை மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு மட்டுமன்றி அனைத்து அரச நிறுவனங்களிலும் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு, புதிய தோற்றத்துடன் அம்பாறை மாவட்டச் செயலக பகல் நேரப் பிள்ளைகள் பராமரிப்பு நிலையம் அம்பாறையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பகல்நேர பராமரிப்பு மையம் பிரத்தியேக அறங்காவலர் குழுவால் நிர்வகிக்கப்பட்டு இயக்கப்படுகிறது.

தொழில் புரியும் பெற்றோரின் வசதி கருதி அமைக்கப்பட்டுள்ள இந்த பராமரிப்பு நிலையத்தில், அனுமதிக்கப்படும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு, பொழுதுபோக்கு வசதிகள், பொருத்தமான உணவு என்பன வழங்கப்படவுள்ளது.

காலை 7.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை இச்சிறுவர் பராமரிப்பு மையம் திறந்திருக்கும் எனவும், ஒன்றரை வயது முதல் எட்டு (08) வயதுள்ள குழந்தைகள் இப்பராமரிப்பு நிலையத்தில் அனுமதிக்கப்படுவதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.




# மக்கள் ஆணையில்லாமல் ஆட்சி நிர்வாகத்தை ஏற்க மாட்டேன்

## எதிர்க்கட்சித் தலைவர்

எம்.ஏ.அமீனுல்லா

எந்தவொரு சந்தர்ப்பத்திலும், ஐக்கிய மக்கள் சக்தி கட்சியோ அதன் தலைமையிலான கூட்டணியோ மக்கள் ஆணையில்லாமல் ஆட்சி நிர்வாகத்தில் இணைய மாட்டாது. இடைக்கால அரசை அமைத்து இன்னொரு நாடகத்திற்கு துணை போவதை விடவும் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவது நல்லதென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (26) கண்டியில் வைத்து தெரிவித்தார்.

இது கட்சியின் கொள்கை என்றும், அந்தக் கொள்கையை கடைபிடிப்பதா இல்லையா என்பதை ஒவ்வொரு தனிநபர்களும் முடிவு செய்யலாம் என்றும் அவர் கூறினார்.

நேற்று (26) ஐக்கிய மக்கள் சக்தி கட்சியால் முன்வைக்கப்பட்ட அரசியலமைப்பு திருத்த பிரேரணையின் பிரதியை அஸ்கிரிய பீடாதிபதி வண. வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரரிடம் கையளித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்துரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,

தற்போதைய பாராளுமன்றத்தின் அமைப்பு எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பதை நாம் பார்க்க வேண்டும். 69 இலட்சம் மக்களின்



ஒப்புதலுடன் ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2020 பொதுத் தேர்தலில் அறுபத்தெட்டு இலட்சம் பேர் இணைந்து 140 எம்.பிக்களை இந்த அரசாங்கத்திற்கு வழங்கியது. பிறகு வழக்கம் போல சலுகைகள், பலன்கள் என்று ஒரு அணியை உருவாக்கி அவர்களின் உதவியால் வழக்கமான மூன்றில் இரண்டு வாக்குகளில் அதிகாரங்களை பெற்றனர். இது அரசியல் இசை நாற்காலிக்கான போட்டி அல்ல. 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் எமது நாட்டு மக்களை முற்றாக மறந்துவிடும் வேலைத்திட்டம் இது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை, பதவி நீக்கம் என்பது ஒரு விடயம் அரசுகளை உருவாக்குவது என்பது வேறு. ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்தை இராஜினாமா செய்யுமாறு கோரி காலி முகத்திடல் உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலும் இளைஞர் குழுக்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்று கூடியுள்ளனர். திருடர்களைப் பிடிக்கச் சொல்கிறார்கள்.திருடிய பணத்தைத் திரும்பப் பெறச் சொல்கிறார்கள்.

இவர்களுடன் சென்று ஆட்சியமைத்து அந்த விடயங்களைச் செய்ய முடியுமா? காலிமுகத்திடல் போராட்டத்தை மக்கள் எந்த வகையிலும் காட்டிக் கொடுக்க மாட்டார்கள். முன்னோக்கி செல்வதில் உறுதியாக உள்ளோம்.

### இரசாயன பசளை, கிருமிநாசினிகள் பற்றாக்குறை

# மாத்தளை மாவட்ட பெரிய வெங்காய உற்பத்தி முழுமையாக பாதிப்பு

உக்குவளை விஷேட நிருபர்

இரசாயன பசளை, கிருமிநாசினிகள் மற்றும் வெங்காய விதைகள் இன்மை காரணமாகவும் தங்களது உற்பத்தி செலவுகள் தினம் தினம் அதிகரித்து வருவதால் மாத்தளை மாவட்ட பெரிய வெங்காய உற்பத்தியாளர்கள் செய்கையை நிறுத்திவிட முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

தமிழ், சிங்கள புத்தாண்டு முடிவுற்றதை தொடர்ந்து பெரிய வெங்காய உற்பத்திக்காக விவசாயிகள் தமது நிலங்களை தயார் செய்து ஆரம்பித்த போது இதுவரை இப் பிரதேசத்தில் பெரிய வெங்காய உற்பத்தியை மேற்கொள்ள அரசினால் எந்தவித திட்டமும் செயற்படுத்தப்படாத நிலையே காணப்படுகின்றது. இதனால் உரிய காலத்தில் பெரிய வெங்காய உற்பத்தியை மேற்கொண்டு குறிப்பிட்ட காலத்தில் அறுவடையை மேற்கொள்வதே தங்களது இலக்காகும் எனக் கூறும் விவசாயிகள் காலம் தாழ்த்தி வெங்காய உற்பத்தியை மேற்கொள்வதால் தங்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படபோவதில்லை எனக் கூறும் பெரிய வெங்காய உற்பத்தியாளர்கள் செய்கையிலிருந்து முற்றிலுமா ஒதுங்கிவிட முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. தம்புள்ளை, சீகிரிய, கலேவெல, நாவுல, லக்கல, பல்லேகம, கெகிராவ, அநுராதபுரம், கலன்மிதுனுவெவ, கல்கிரியாகம, புப்போகம, கலாவெவ, ஹிங்குரக்கொட, பகமூன, தியபெதும, போன்ற பகுதிகளிலேயே அதிகமான பெரிய வெங்காய உற்பத்தி இடம்பெறுகின்றது. தம்புள்ளை கமத்தொழில் விவசாய திணைக்கள வேவல பிரதேசத்தில் அதிக பெரிய வெங்காய உற்பத்தி செய்யப்பட்டபோதும் இப்பகுதியில் கூட தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு பின்னால் பெரிய வெங்காய உற்பத்திக்கான ஆயத்தங்கள் காணப்படவில்லை.



கண்டி மாவட்டத்தில் 15 பேர் மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் நலன்புரி நிலையத்தின் அங்கத்தவர்களாக எம்.எஸ்.எம்.நசார் தலைமையில் நியமிக்கப்பட்டனர். அங்கத்தவர்களில் கம்பளை ஊடகவியலாளர் எஸ். லோகேஸ்வரன் சான்றிதழ் வழங்கி அங்கத்தவராக நியமிக்கப்பட்ட போது...
(படங்கள்: கம்பளை நிருபர்)

# மஸ்கெலியா நகரில் தீர்ந்து போன சவர்க்காரங்கள்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

மஸ்கெலியா பகுதியில் உள்ள விற்பனை நிலையங்களில் சவர்க்காரங்கள் விற்று தீர்ந்து விட்டதாக கடை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். அத்தோடு இருப்பிலுள்ள சவக்காரங்கள் தீர்ந்து விட்டதால் சிறு தட்டுப்பாடும் நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இன்று முதல் சவர்க்காரங்களின் விலை உயர்வை தொடர்ந்து மக்கள்

பழைய விலையில் சவர்க்காரங்கள் மற்றும் பற்பசைகளை அதிகமாக கொள்வனவு செய்துள்ளனர்.

அத்தோடு மஸ்கெலியா நகரில் இயங்கும் எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு மண்ணெண்ணெய் வழங்க இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் முன்வரவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கிறேட்வெஸ்டன் தோட்ட தேயிலை அதிக விலைக்கு விற்பனை

தலவாக்கலை குறூப் நிருபர்



தலவாக்கலை கிறேட்வெஸ்டன் தோட்டத்தில் தயாரிக்கப்பட்ட தேயிலைத் தூள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. உயர்தர தேயிலைகளை உற்பத்தி செய்வதில் பெயர் பெற்ற ஹேலீஸ் பெருந்தோட்ட கம்பனியின் கீழ் இயங்கும் தோட்டமாகும்.

இம்மாதம் ஏப்ரல் இடம்பெற்ற 2022 ஆம் ஆண்டுக்கான ஏலத்தில் டஸ்ட் இலக்கம் 1 தர தேயிலை தூள் 1550 ரூபாய் விலையைப் பெற்று சாதனை படைத்தது. இந்த தேயிலை எம்.எஸ்.இம்பெரியல், எம்.எஸ்.போப்ஸ் மற்றும் வோக்கர் ஆகிய தனியார் ஏற்றுமதி நிறுவனங்களால் வாங்கப்பட்டது.

கிறேட்வெஸ்டன் தோட்டத்தில் மிகவும் தரமான தேயிலை தூள் வகைகளான டீபியோபி, பியோபிளப், பியோபிளப் எஸ்பி மற்றும் டஸ்ட் இலக்கம் 1 ஆகியன சிறந்த விலைகளைப் பெற்றுள்ளது. தலவாக்கலை கிறேட்வெஸ்டன் தோட்டம், தலவாக்கலை பெருந்தோட்ட கம்பனியின் கீழ் நிர்வகிக்கப்படுகிறது.

இதன் வளர்ச்சிக்கு காரணமாக அதன் முகாமையாளர் சரத் ரணவீர விளங்குகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

### இரத்தினபுரி மாவட்டத்தில்

# 15,800 வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கைகள் ஆரம்பம்

பலாங்கொடை தினகரன் நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில்15,800 வீட்டுத் தோட்ட உற்பத்திகளை ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

'எமது வீட்டுத் தோட்டத்திலிருந்து ஆரம்பிப்போம்' என்ற தொனிப்பொருளின் கீழ் தேசிய வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கை திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலை திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்தில் ஆரம்ப வைபவ நிகழ்வு அண்மையில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிகிரி கொப்பேகடுவ மற்றும் இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலினி லொகுபோதாகம ஆகியோர் தலைமையில் பெல்மதுளை பொரால பாடசாலை விவசாய பயிற்சி மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

அதற்கமைய பெல்மதுளை பிரதேச செயலக பிரிவினை முன்னிலைப்படுத்தி இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மாவட்டத்திலுள்ள ஏனைய 17 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இந்த வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கை ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கை திட்டத்தில் இம் மாவட்ட மக்களை தெரிவு செய்யும் போது இதற்காக விருப்பமுள்ள காணி வசதியுள்ள எந்த குடும்பமும் இதில் பங்கு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பயிர்ச்செய்கை திட்டத்தில் வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கைக்கு மரக்கறி கன்றுகள், கிழங்கு உற்பத்தி பழவகை கன்றுகள் உட்பட மேலும் பல விதைகளும் வழங்கப்பட உள்ளன.



'நாட்டை மீட்கும் உன்னத பயணம்' என்ற தொனிப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தியின் நடைப்பயணம் நேற்று கண்டியில் ஆரம்பமான போது பிடிக்கப்பட்ட படங்கள்.
(படங்கள்: நாவலப்பிட்டிய சுழற்சி நிருபர்)

# நுவரெலியா மட்டக்குதிரை சவாரியில் ஈடுபடுவோரின் வாழ்வாதாரம் பெரும் பாதிப்பு

நுவரெலியா குதிரை பந்தய பகுதியில் மட்டக்குதிரை சவாரி மந்தகதியில் காணப்படுவதால் நாள்தோறும் மட்டகுதிரை சவாரியை நம்பி குடும்ப வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாத நிலைக்கு சுமார் 35க்கு அதிகமானவர்கள் அவஸ்தைப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

நுவரெலியாவில் ஏப்பிரல் வசந்தகால நிகழ்வே தமக்கான வாழ்வாதாரத்திற்கு வருமானத்தை ஈட்டுத் தரும் என தெரிவிக்கும் மட்டகுதிரை சவாரியில் ஈடுபடுவோர் இம்முறை குதிரை சவாரி மந்தகதியில் உள்ளதால் வருமானமின்றி அவதியுறும் நிலையில் உள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

நுவரெலியா ரேஸ்கோஸ் மற்றும் கல்வேஸ் கிராமத்தை சேர்ந்த 35க்கு அதிகமானவர்கள் மட்டக்குதிரை சவாரியில் ஈடுப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, உள்ளிட்ட எரிபொருள்களுக்கான தட்டுப்பாடு மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டம் காரணமாக இம்முறை நுவரெலியா வசந்தகால உல்லாசப் பயணிகள் வருகையில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் நுவரெலியாவில் மட்டகுதிரை சவாரியை ஆரம்பிக்கும்



ரேஸ்கோஸ் நுழைவாயில் பகுதிக்கு அருகில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று உள்ளது. இந்த நிலையத்திற்கு எரிபொருள் வரும் நேரத்தில் நுவரெலியாபதுளை பிரதான வீதியில் வாகன நெரிசல் ஏற்படுவதால் வீதி மூடப்படுகிறது.

இவ்வாறு வீதி மூடப்படுவதால் உல்லாச பயணிகள் சவாரிக்கு வருவதும் குறைகின்றது இதுவும் எமது வருமானத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தியது எனவும் தெரிவிக்கின்றனர்.

அதேநேரத்தில் சவாரியில் ஈடுப்படும் நபர்கள் பலர் மட்டக்குதிரை உரிமையாளர்களிடம் குதிரைகளை வாடகைக்கு பெற்று சவாரியை முன்னெடுப்பதாகவும், கிடைக்கும் வருமானத்தில் அரைவாசியை வாடகை பணமாக செலுத்துவதாகவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில் இன்றைய கால நிலையில் உல்லாச பயணிகளாக வெளிநாட்டவர்கள் வருகை குறைந்துள்ளதால் நாள் ஒன்றுக்கு 500/=தொடக்கம்1000/= சம்பாதிப்பதும் முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். இந்த நிலையில் நுவரெலியா மாநகர சபை மட்டக்குதிரை சவாரி தொழிலில் ஈடுப்படுபவர்களின் குடும்ப வருமானத்திற்கு ஏதேனும் உதவிகளை செய்ய முன்வர வேண்டும் என கோரிக்கையையும் இவர்கள் முன்வைத்துள்ளனர்.

ஆ.ரமேஸ்

# வர்த்தகர் தாக்கப்பட்டு வாகன உரிமைச் சான்றிதழ் கொள்ளை

அக்குறணை குறூப் நிருபர்

நாவலப்பிட்டிய உலபனைப் பிரதேச வர்த்தகர் ஒருவர் கடத்தப்பட்டு தாக்கப்பட்டு அவரிடமிருந்த வாகன உரிமைச் சான்றிதழ் கொள்ளையிடப்பட்ட சம்பவம் ஒன்று கம்பளைப் பொலிஸில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கம்பளை உலப்பனைப் பிரதேசத்தைச் சேர்ந்த மேற்படி வாகன விற்பனை வர்த்தகரிடம் வாகனம் ஒன்று கொள்வனவு செய்வது தொடர்பாக ஏழுபேர் கொண்ட குழு ஒன்று 24ம் திகதி இரவு அவரை அழைத்துச் சென்றுள்ளது. வியாபாரியுடன் மற்றும் இருவர் உடன் சென்றுள்ளனர். கம்பளை தொலுவ பாதையில் வைத்து அவர்கள் தாக்கப்பட்டு வியாபாரியிடம் இருந்த வாகன உரிமைச் சான்றிதழ் (புத்தகம்) பறித்தெடுக்கப்பட்டுள்ளது.

# பொருளாதார நெருக்கடியில் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெருந்தோட்ட மக்களே



இந்த நாட்டிற்கு அந்நிய செலாவணியை அதிகமாக ஈட்டித் தந்த பெருமை பெருந்தோட்ட மலையக மக்களையே சாரும். இருந்த போதிலும் அதிக அளவில் பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு முகம் கொடுப்பதும் பெருந்தோட்ட மக்களே. இன்று மலையக மக்களும் வீதிக்கு இறங்கி போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள் என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

பதுளையில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர்,...

தொலைநோக்கு சிந்தனை இல்லாதவர்களால் ஒரு நாட்டை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல முடியாது. நாட்டில் தற்சமயம் ஏற்பட்டுள்ள மிலேச்சத்தனமான செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படல் வேண்டும்.

நேற்று கண்டியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாதையாத்திரை உழைக்கும் வர்க்கத்தை வலுப்படுத்தும் நோக்கில் மே 1ஆம் திகதி தலைநகரை வந்தடையும்.

மேலும் 28ஆம் திகதி அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து அடையாள வேலைநிறுத்த போராட்டத்தை மேற்கொள்ள உள்ளது. இதற்கு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தன்னுடைய முழுமையான ஆதரவை வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.





முகத்துவாரம் ஸ்ரீ பூமி நீளா பத்மாவதி சமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர மகாவிஷ்ணு ஆலய வசந்தோற்சவ இரதபவனி நேற்றுக் காலை ஆலய அறங்காவலர் துரைசாமி செட்டியார் தலைமையில் நடைபெற்றது. வசந்த மண்டப பூஜையை அடுத்து பெருமாள் உள்வீதிவலம் வருவதையும், கோமாதா பூஜை நடைப்பெறுவதையும் அடுத்து பெருமான் தேரில் புறப்பட்டுச் செல்வதையும் படங்களில் காணலாம்.


நிதி அமைச்சு
සේවා නියුක්තයන්ගේ භාර අරමුදල් මණ්ඩලය
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை
Employees' Trust Fund Board

அறிவித்தல்

**தொழில் வழங்குநர்ளுக்கும் அங்கத்தவர்களுக்கும் வழங்கப்படும் சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில் தமது பணிகளை எளிதாகவும் துரிதமாகவும் நிறைவேற்றிக்கொள்ள 2 அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.**

| கொழும்பு மாவட்ட அலுவலகம் மஹரகம (மஹரகம தொழில் அலுவலகத்திற்கு முன்னால்) | உப அலுவலகம் கட்டுபெத்த (காலி வீதி கட்டுபெத்த சந்தியிலிருந்து 200 மீட்டர் பானந்துறை நோக்கி) |
|---|---|

இந்த அலுவலகங்கள் மூலம்

- ❖ நலன் கோரல் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல்
- ❖ மாதாந்த பங்களிப்புத் தொகைளை ஏற்றுக்கொள்ளல்
- ❖ படிவம் II ஐ ஏற்றுக்கொள்ளல்

போன்ற பல சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**நலன் கோரல் விண்ணப்பங்களை இலகுவாக ஒப்படைப்பதற்கு இணையவழி மூலம் (online) திகதியையும் நேரத்தையும் www.etfb.lk எனும் இணையத்தளத்தின் மூலம் அல்லது தொலைபேசி இலக்கம் 011-2103010 ஊடாக ஒதுக்கிக்கொள்ள முடியும்.**

| | |
|---|---|
| கொழும்பு மாவட்ட அலுவலகம்,<br>இல.133,<br>பிரிஸ்டல் ஹவுஸ் கட்டிடம்,<br>ஹைலெவல் வீதி, மஹரகம.<br>தொ. 011-2745511 | கட்டுபெத்த உப அலுவலகம்,<br>இல.464, காலி வீதி,<br>கட்டுபெத்த,<br>மொரட்டுவை.<br>தொ. 011-2655080 |

தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி,
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை,
கொழும்பு 05.



**டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

## கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI)

### கொழும்பு கை.தொ. நிறுவனத்திற்கு 2022ஆம் ஆண்டிற்கான ஊழியர் போக்குவரத்து சேவைக்காக பஸ்கள்/ வேன்களை வாடகைக்குப் பெறுவதற்கான விலைமனு அறிவித்தல்

SUP/SD/22/69

2022 ஆண்டிற்காக கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்த இல. 363 ITI இற்கு போக்குவரத்து சேவையினை வழங்குவதற்காக உத்தேச விலைமனுதாரர்களிடமிருந்து கீழே ஒப்பமிடப்படுபவரால் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

ITI இனால் குறிப்பிடப்படும் ஓர் காலத்திற்கு ITI யுடன் ஓர் உடன்படிக்கைக்கு உட்படுமாறு தேர்ந்தெடுக்கப்படும் சேவை வழங்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்தக்கூடிய இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட ஓர் வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதம் 90 நாட்களுக்கு குறைந்தபட்சம் செல்லுபடியாகும் அத்துடன் மொத்த கேள்விப் பெறுமதியில் 1% விலைமனுப் பிணையுடன் எல்லா தகைமையான விலைமனுக்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் ரூ. 2000/- செலுத்துவதன் பேரில், மாலபே, தலாஹேன, ஹல்பராவ கார்டன்ஸ், இல 503A, இல் உள்ள ITI வழங்கல்கள் பிரிவில் கேள்விப் படிவங்கள் கிடைக்கும். ஓர் மீளளிக்கப்படாத தொகை (ரூபா. 2000/-) இலங்கை வங்கி (BOC) இன் எந்தக் கிளையிலும் காசாக வைப்பிலிடப்படல் வேண்டும். அத்துடன் மாலபே - ITI நிதிப் பிரிவிற்கு வங்கிச் சீட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| **கணக்கின் பெயர்** | - | **கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்** |
| **வங்கி மற்றும் கிளை** | - | **இலங்கை வங்கி - டொரிங்டன்** |
| **கணக்கு இல** | - | **2323303** |
| **குறிப்பு இல.** | - | **SUP/SD/22/69** |

கேள்விப்படிவங்கள் 2022.04.27 முதல் 2022.05.17 இற்கு இடையில் மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் 2022.05.18ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாலபே, தலாஹேன, ஹல்பராவ கார்டன்ஸ் இல. 503/A கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவன HR பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிலிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும்.விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாக மாலபே, தலாஹேன ஹல்பராவ கார்டன்ஸ், இல. 503/A, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் சமுகமளிக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

ஒப்பந்தம் ஐந்து மில்லியனுக்கு மேற்பட்டிருப்பின் 1987ஆம் ஆண்டின் பொது ஒப்பந்த சட்ட இல. 03 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழைப் பெறல் வேண்டும்.

பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக இருக்கும் மேலதிக விபரங்களுக்கு, தயவு செய்து வழங்கல்கள் பிரிவுடன் தொடர்புகொள்ளுங்கள் (தொ.பே. 0112797314/ 0112797315) சம்பந்தப்பட்ட ஆவணங்கள், மாலபே, ITI இன் வழங்கல்கள் பிரிவில் பரிசீலிப்பதற்காக இலவசமாகக் கிடைக்கும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு**
**கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்,**
**இல. 503A, ஹல்பராவ கார்டன்ஸ்,**
**தலாஹேன,**
**மாலபே.**



## பெறுகை அறிவித்தல்

### ஊவா மாகாண சபை
### பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகம்

ஊவா மாகாண சபையின் பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் கைத்தொழில்களை நிறைவேற்றுவதற்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) மற்றும் குறித்த துறையில் பதிவுடன் தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்கள் மற்றும் நிர்மாண நிறுவனங்களில் இருந்து 2022.05.23ம் திகதி வரை போட்டி கேள்வி கோரல் அடிப்படையில் பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| தொடர் இல | ஒப்பந்த இலக்கம் | கைத்தொழிலின் பெயர் | சிவில் வேலை பெறுமதி (ரூ.மி.) (வெட் இன்றி) | கட்டிட நிர்மாண துறையில் தேவைப்படும் குறைந்தபட்ச CIDA தரம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை (காசாக செலுத்துவ தாயின்) (ரூ) | நிர்மாண கால எல்லை (நாட்கள்) | கேள்வி ஆவணக் கட்டணத் தொகை (ரூ) | கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கும் அலுவலகம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | PSSP/ HEALTH/ 2022/01/01 | பதுளை பொது வைத்தியசாலையின் மார்பு சிகிச்சையகப் பழுதுபார்த்தல் | 10.83 | C6 மற்றும் C5 | 54,500.00 | 270 | 5,000.00 | மாகாண கட்டிடத் திணைக்களம் (055-2229629) |
| 2 | PSSP/ HEALTH/ 2022/01/02 | ஸ்பிரிங்வெலி பிரதேச வைத்தியசாலையின் பிரதான கட்டிடம் புதுப்பித்தல் | 7.94 | C7 மற்றும் C6 | 40,000.00 | 210 | 3,000.00 | பிரதேச பொறியியல் (கட்டிடங்கள்) அலுவலகம், பதுளை (055-2224753) |
| 3 | PSSP/ HEALTH/ 2022/01/03 | பஸ்ஸர பிரதேச வைத்தியசாலையின் வார்ட் இல 07 மற்றும் பிரேத அறையை புதுப்பித்தல் | 9.60 | C7 மற்றும் C6 | 48,000.00 | 270 | 3,000.00 | |
| 4 | PSSP/ HEALTH/ 2022/01/04 | மெட்டிகஹதென்ன பிரதேச வைத்தியசாலையின் பிரசவ அறையினை மாற்றுதல், நீர் வழங்கல் அமைப்பை மேம்படுத்துதல் மற்றும் பல் மருத்துவர் உத்தியோகபூர்வ இல்லத்தை புதுப்பித்தல் | 6.72 | C7 மற்றும் C6 | 34,000.00 | 210 | 3,000.00 | |
| 5 | PSSP/ HEALTH/ 2022/01/05 | உடபேவே சிகிச்சை நிலையத்தை நிர்மாணித்தல் | 9.14 | C7 மற்றும் C6 | 46,000.00 | 180 | 3,000.00 | பிரதேச பொறியியல் (கட்டிடங்கள்) அலுவலகம், பண்டாரவளை (057-2222025) |
| 6 | PSSP/ HEALTH/ 2022/01/06 | தெமோதர பிரதேச வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு, அவசர சிகிச்சை அலகு மற்றும் பொறுப்பான மருத்துவ அதிகாரி உத்தியோகபூர்வ இல்லத்தை பழுதுபார்த்தல் | 7.90 | C7 மற்றும் C6 | 39,500.00 | 180 | 3,000.00 | |
| 7 | PSSP/ HEALTH/ 2022/01/07 | தெலுன்கமுவ பிரதேச வைத்தியசாலையின் மருத்துவர் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணித்தல் | 31.75 | C5 மற்றும் C4 | 159,000.00 | 365 | 5,000.00 | |
| 8 | PSSP/ HEALTH/ 2022/01/08 | பிபிலை தளவைத்தியசாலையின் புதிய சத்திர சிகிச்சை கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல் | 143.69 | C4 மற்றும் C3 | 718,500.00 | 540 | 25,000.00 | மாகாண கட்டிடத் திணைக்களம் (055-2229629) |

02. **பெறுகை முறை**
தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் மூலம் கேள்விகள் கோரப்படுவதுடன் மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 50 மில்லியனுக்கு மேற்படாத தொழில்களுக்காக நிதி அமைச்சு சுற்றுநிருப இல. 4/2016 (iii) இன் பிரகாரம் ஒப்பந்தக்காரர்களின் மாகாண முன்னுரிமை மற்றும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பதிவுத் தரத்தின் முன்னுரிமை கேள்வி மதிப்பீடு செய்யும் போது கவனத்தில் கொள்ளப்படும்.

03. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான ஒரு சீடா தரம் (CIDA) மற்றும் குறித்த துறையில் பதிவுடன் அபகீர்த்தியானோர் பட்டியலிடப்படுவதற்காக பரிந்துரைக்கப்படாத, சித்திகரமான மற்றும் தகைமை கொண்ட கேள்விதாரர்கள் கேள்வி வழங்கலுக்கு தகைமை பெறுவர்.

04. கேள்வி மதிப்பிடும் போது நிதி அமைச்சு சுற்றுநிருப இல. 3/2020(i) இன் பிரகாரம் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட விநியோகிக்கப்பட்டுள்ள திருத்தங்களின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்படுவதுடன் மேற்படி தகைமைகள் கவனத்தில் கொள்ளப்படும். தேவைப்படும் தகைமைகளைக் கொண்டிருக்காமை கேள்விகள் நிராகரிக்கப்பட ஏதுவாகும்.
   i. கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தபட்சம் சிவில் வேலைப் பெறுமதியில் 80% பெறுமதியுடைய அதற்குச் சமமான ஒரு கைத்தொழிலை நிறைவேற்றியுள்ள அனுபவம்.
   ii. கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்படி நிர்மாண சிவில் வேலைகளில் பெறுமதிக்கு சமனான நடத்திச் செல்லப்பட்ட சாதாரண செலவு
   iii. நிதித் தகைமை
   iv. தற்போது மேற்கொள்ளப்படும் வேலைகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்.

**கவனிக்கவும்:-** சிவில் வேலைப் பெறுமதி ரூ. 10.00 மில்லியன் அல்லது அதற்குக் குறைந்த கைத்தொழிலிற்காக 04ஆவது பந்தியில் இல. i முதல் iii வரையான நிபந்தனைகள் பொருந்தாது.

05. கேள்விப் பெறுமதி ரூ. 05 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியுடனான கைத்தொழில்களுக்காக 1987 இல. 03 பொது ஒப்பந்த உடன்படிக்கையின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும். அத்துடன் கேள்வியுடன் அப் பதிவுச் சான்றிதழ் அல்லது அதனை உறுதி செய்யக்கூடிய ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அப் பதிவுச் சான்றிதழ் அல்லது அதனை உறுதி செய்யக்கூடிய ஆவணங்கள் கேள்வியுடன் சமர்ப்பிக்காமை கேள்விகள் நிராகரிக்கப்பட ஏதுவாகும்.

06. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் அலுவலகத்திற்கு எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து பெறுகை மாதிரிப் பத்திரங்களின் முழுமையான ஆங்கில மொழியிலான பிரதியொன்றை 2022.04.28 முதல் 2022.05.20ம் திகதி வரை அலுவலக நேரங்களில் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு கேள்வி ஆவணக் கட்டணத்தை செலுத்திய பின்பு பெற்றுக்கொள்ள முடிவதுடன் கட்டணமின்றியே பரீட்சித்துப் பார்க்கலாம்.

07. மேலதிக விபரங்களை, மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்வி விநியோகிக்கும் அலுவலகத்திலிருந்து குறித்த தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

08. கேள்விப் பிணையை காசாக செலுத்தாதுவிடின் கேள்வியுடன் கேள்வி பிணைமுறியொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும். கேள்விப் பிணைமுறியென்றை சமர்ப்பிப்பதாயின் கேள்விப் பிணைக்காக அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்விப் பிணைத் தொகை போன்று இரு மடங்கு பெறுமதியுடைய இலங்கை மத்திய வங்கியில் அனுமதித்த வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட நிபந்தனையற்ற கோரும்போது செலுத்தப்படும் வங்கிப் பிணைமுறியின் மூலம் மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணையானது 2022.09.23ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

09. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் குறித்த பெறுகைக் குழுவிற்கு 2022.05.23 பி.ப. 2.00 இற்கு முன் சர்ப்பிக்க வேண்டியதுடன், கேள்விப் பத்திரங்களில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு வேறுவேறாக இரு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு கடித உறையில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் குறித்த வேலையின் பெயரைக் குறிப்பிட்டு பொறியிட்ட, தலைவர், பெறுகைக் குழு, பிரதி பொதுச் செயலாளா (பொறியியல் சேவை) அலுவலகம், பிங்அராவ, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட முடியும் அத்துடன், தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

10. நகல் பிரதி, மூலப் பிரதியின் சகல பக்கங்களும் உறுதி செய்யப்பட்ட போட்டோப் பிரதியாக இருத்தல் வேண்டும்.

11. கேள்வி செல்லுபடியாகும் காலம் 2022.08.23ம் திகதி வரையானதாக இருத்தல் வேண்டும்.

12. 2022.05.23 பி.ப. 2.00 இற்கு பதுளை, பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன், அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொரவருக்கு சமுகமளிக்கலாம்.

13. கேள்வி கோரல் சம்பந்தமாக கேள்விக்கு முன்னரான கூட்டம் (Pre Bid Meeting) 2022.05.11ம் திகதி மு.ப. 10.00 இற்கு பதுளை, பிங்அராவ, மாகாண கட்டிட பணிப்பாளர் பணிமனையில் நடைபெறுவதுடன், அங்கு உத்தேச கேள்விதாரர்களுக்கு செயற்றிட்ட தேவைப்பாடுகள் பற்றி தெளிவுபடுத்தலைக் கோரலாம். மேலும் தேவையெனில் வேலைத்தள விஜயம் ஒன்றையும் ஏற்பாடு செய்யலாம்.

14. கிடைக்கப்பெறும் கேள்விகளில் தகைமையான கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது சகலதையும் நிராகரிக்கும் முழுமையான உரிமை பெறுகைக்குழுவிற்கு உரித்தாவதுடன், பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர் - பெறுகைக் குழு**
**பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகம்**
**பிங்அராவ, பதுளை.**
**தொ.பே./ பெக்ஸ் இல. 055-2222218**
**ஈமெயில் dcsengupc@gmail.com**
**திகதி 2022.04.25**

# பாடசாலை அதிபரை இடமாற்ற வேண்டாம்; மக்கள் ஆர்ப்பாட்டம்



கோப்பாய் குறூப் நிருபர்

யாழ்.சுழிபுரம் காட்டுப்புலம் பாடசாலை அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டாம் எனக்கூறி பாடசாலை பழைய மாணவர்களும் பெற்றோர்களும் நேற்றையதினம் (26) பாடசாலைக்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிபர் பாடசாலைக்கு வந்தது தொடக்கம் அவர் மாணவர்களது நலன்கள் மீது காட்டுகின்ற அக்கறை, மாணவர்கள் மீதான அணுகுமுறை மற்றும் தலைமைத்துவம் என்பன சிறப்பாக காணப்படுவதால் அவரை இடமாற்றம் செய்ய வேண்டாம் எனக் கூறி கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

கவனயீர்ப்பின் பின்னர் வலயக்கல்வி பணிமனைக்கு கடிதம் ஒன்று கையளிக்கப்போவதாகவும் ஐந்து நாட்களுக்குள் தகுந்த பதில் தராவிட்டால் பாரிய ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுக்கப்போவதாகவும் கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.


## பெறுகை அறிவித்தல்

### சுகாதார அமைச்சு

### பொது வைத்தியசாலை (போதனா) பேராதெனிய

பேராதெனிய பொது வைத்தியசாலையின் பிளந்த வடிவிலான வளிச்சீராக்கி இயந்திர சேவைகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மின் பிறப்பாக்கி இயந்திரச்சேவைகள் மற்றும் பராமரிப்பு சேவைகளை மேற்கொள்ளல்/ஔடதக் களஞ்சியசாலையின் ஔடத இராக்கைகளை கட்டமைத்தல் மற்றும் வைத்தியசாலையின் தகவல் தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் கணினி வலையமைப்புத் தொகுதியை பராமரித்தல் மற்றும் சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் - 2022

பேராதெனிய பொது வைத்தியசாலை (போதனா) பிராந்திய பெறுகைக்குழுத் தலைவரினால் பின்வரும் கருமங்களிற்காக மற்றும் பண்டங்களிற்காக விலைமனுக் கோரப்படுகின்றது.

| இலக்கம் | சேவைகள் | விலை மனுப் பிணைத் தொகை ரூபா | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் ரூபா | பராமரிப்பு மற்றும் சேவைக்கால எல்லை |
|---|---|---|---|---|
| 01 | பிளந்த வடிவிலான வளிச்சீராக்கி இயந்திரங்கள் சேவை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் THP/AD/09/2022 | 75,000.00 | 2,000.00 | 01 வருடம் |
| 02 | ஔடதக் களஞ்சியசாலையின் ஔடத இராக்கைகளை கட்டமைத்தல் THP/AD/07/2022 | 12,000.00 | 2,000.00 | |
| 03 | வளிச்சீராக்கி இயந்திரத்தின் சேவை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் THP/AD/08/2022 | 100,000.00 | 2,000.00 | 01 வருடம் |
| 04 | வைத்தியசாலையின் தகவல் தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் கணினி வலையமைப்புத் தொகுதியைப் பராமரித்தல் மற்றும் சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் THP/AF/ICT-EQui/2022 | 120,000.00 | 2,000.00 | 02 வருடம் |

மேற்படி கருமங்களிற்கான, விலைமனுப்பிணையத்தை அரச அங்கீகாரம் பெற்றுள்ள வணிக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு அல்லது வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவில் பணிப்பாளரின் பெயரில் வைப்புச் செய்தல் வேண்டும்.

- மேற்படி 01,02 மற்றும் 03 ஆகிய கருமங்களிற்காக இலங்கை வர்த்தக சந்தைக்கு வழங்குவதற்காக EM 04 தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தகைமை பெற்றுள்ள முகவர்கள்/அதிகாரம் பெற்ற முகவர்கள் மாத்திரம் தகைமைபெறுவர்.
- விலைமனுப்படிவங்களை வழங்கல் அனைத்து கருமங்களிற்குமான விலைமனுப்படிவங்களை 2022.04.27 முதல் பேராதெனிய பொது வைத்தியசாலையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.peradeniya-hospital.health.gov.lk இலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளல் வேண்டும்.

i. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்தினம் : 2022.05.12 அன்று மு.ப.10.30

ii. விலைமனுத்திறத்தல் : 2022.05.12 அன்று மு.ப.10.30

அனைத்துப் பெறுகைகளுக்குமான மீளளிக்கப்படாத படிவக்கட்டணமான ரூபா 2,000.00 இற்கான தொகையை பேராதெனிய பொது வைத்தியசாலையின் சிறாப்பரிடம் செலுத்தி அல்லது மக்கள் வங்கியின் இலக்கம் 057100129025207 என்ற வைத்தியசாலையின் கணக்கிற்கு வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு, விலைமனுக்களுடன் சமர்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுப்படிவக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

மேற்படி இலக்கம் 01,02 கருமங்களிற்காக விலைமனு முன்னோடிக் கூட்டம் 2022.05.05 அன்று மு.ப.10.00 இற்கும் இலக்கம் 04 இற்காக 2022.05.04 அன்று மு.ப.10.00 இற்கும் பேராதெனிய போதனா வைத்தியசாலையில் நடைபெறும்

விலைமனுக்கள் பதிவுத்தபாலில், "தலைவர், பிராந்தியப் பெறுகைக்குழு, பொது வைத்தியசாலை, பேராதெனிய" என்ற முகவரிக்கு அனுப்பப்படலாம். அல்லது நேரடியாக இவ் வைத்தியசாலையின் கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்க்கலாம். விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில், உரித்தான கருமத்தின் அல்லது உபகரணத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

விலைமனுக்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பிராந்திய பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.

**டாக்டர்.எச்.எம்.ஏ.திலகரத்ன**
**பணிப்பாளர், பொது வைத்தியசாலை (போதனா)**
**பேராதெனிய**

### பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை - நுவரெலியா

**2022 ஆம் ஆண்டு**

2021.04.08ஆம் திகதி நிர்மாண மற்றும் பழுதபார்த்தல் செயற்றிட்டத்திற்காக நுவரெலியா பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் பெறுகைக்குழுவின் தலைவரால் கோரப்பட்ட கேள்வி அழைப்பின் திகதிகள் கீழ்க்காணுமாறு நீடிக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப் படும் இறுதித்திகதி | 2022.04.05 |
| பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி | 2022.04.06ஆம் திகதி மு.ப.10.00 இற்கு |

**தலைவர்**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் பெறுகைக்குழு**
**பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் பணிமனை, நுவரெலியா**
**2022.04.25ஆம் திகதி**


தொழிற்சங்க போராட்டங்களினால்;

## ஹம்பாந்தோட்டை நகரிலுள்ள பாடசாலைகள் ஸ்தம்பிதம்

ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்

ஹம்பாந்தோட்டை நகரிலுள்ள சகல பாடசாலைகளிலும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் (25) முழுமையாக ஸ்தம்பிதமடைந்து காணப்பட்டன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதனால் நிலைமைகள் சீராகும் வரை ஆசிரியர்களை அருகிலுள்ள பாடசாலைகளுக்கு இணைப்பு செய்யுமாறு கோரி கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இக் கடிதத்திற்கு பதில் ஏதும் கிடைக்காமை காரணமாகவே இவ் எதிர்ப்பினை தெரிவித்து நாடளாவிய ரீதியில் தொழிற் சங்கங்கள் சுகயீனலீவு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் நகரிலுள்ள பாடசாலைகளுக்கு அதிபர்கள், ஆசிரியர்களோடு மாணவர்களும் சமுகமளிக்காமையினால் பாடசாலைகள் வெறிச்சோடிக்காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

பெலியத்த, தாரபெரிய, நிஹிலுவ பிரதேசத்தில் நபர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரவு (23) மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஒருவரால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் நிஹிலுவ பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதானவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் வீட்டில் வைத்தே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## வவுனியாவில் பட்டப்பகலில் திருட்டு

வவுனியா விசேட நிருபர்

வவுனியாவில் பட்டப்பகலில் வர்த்தக நிலையத்திற்குள் புகுந்து தங்கச்சங்கிலி ஒன்று அறுத்துச் செல்லப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, யாழ் வீதியில் புதிய பஸ் நிலையத்திற்கு அண்மையிலுள்ள வர்த்தக நிலையத்திற்கு சென்ற இளைஞர் ஒருவர் அங்கு நின்ற பெண்ணை அழைத்து சென்று வர்த்தக நிலையத்திற்குள் வைத்து ஒருவருடைய முகவரியை விசாரிப்பது போல் அவர் அணிந்திருந்த இரண்டரைப் பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளார்.

இளைஞருடன் கூட வந்தவர் தயார் நிலையில் வைத்திருந்த மோட்டர் சைக்கிளில் ஏறி தப்பிச் சென்றுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் ல்விசாரணைகள் முன்னெடுத்துள்ளதாக வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

வவுனியாவில்

## கடலுணவுகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது

வவுனியா விசேட நிருபர்

மன்னார், திருகோணமலை, முல்லைத்தீவு போன்ற கடல்களில் பிடிக்கப்படும் கடலுணவுகளே வவுனியாவிற்கு கொண்டு வரப்படுகின்றது. இந்நிலையில் தற்போது அதன் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளது. எரிபொருள் விலையேற்றமே இதற்கு காரணம் என கடலுணவு வியாபாரிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சாதாரண மக்கள் கடல் உணவுகளை வாங்குவதற்கு பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கியுள்ளதை அவதானிக்க முடிந்தது.


## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

### பெறுகை அறிவித்தல்

### புவியியல் பீடத்திற்காக யுபிஎஸ் மற்றும் அளவை உபகரணத்துடனான வணிக உரிமைப் பெயருடைய மேசைக் கணினிகளை வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல் (SUSL/SU/Goods/NCB/2022/01/A1)

கீழே விபரிக்கப்பட்டவாறு இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு புவியியல் பீடத்திற்கு வணிக உரிமைப் பெயருடைய மேசைக் கணினிகளின் வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதலுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

1. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
2. விலைமனுதாரரானவர் இலங்கையில் உரித்தான துறையில் ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக வழங்கலுக்கான சிரேஷ்ட உதவி நிதியாளரிடமிருந்து (தொடர்பு இல.: 045-2280311) பெற்று பல்கலைக்கழக வழங்கல் கிளையில் 2022.04.28 ஆம் திகதியிலிருந்து 2022.05.18 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 ரூபாவை ரொக்கப் பணத்தில் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக சிறாப்பரின் கருமபீடத்தில் அல்லது 0002246976 என்ற இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக இலங்கை வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்படலாம், அல்லது வழங்கலுக்கான சிரேஷ்ட உதவி நிதியாளரிடம் ரொக்கப் பணத்தில் ஒப்படைக்கப்பட்ட பின்னர், அவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது **www.sab.ac.lk** என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்த பின்னர் ஆங்கிலத்திலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். சிறாப்பரின் ரொக்கப்பண பற்றுச்சீட்டு அல்லது வங்கியின் வரவுத் துண்டானது விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும். ஆவணங்களை 2022.04.28 ஆம் திகதியிலிருந்து 2022.05.18 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கொள்வனவு செய்யலாம்.
5. 2022.05.19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் இரு பிரதிகளில் சிரேஷ்ட உதவி நிதியாளர், வழங்கல் கிளை, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுல்ஓய என முகவரியிடப்பட்டு ஒப்படைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தயவு செய்து **"Supply, Delivery & Installation of Branded Desktop Computer with UPS & Surveying Equipment for Faculty of Geomatics – SUSL/SU/GOODS/NCB/2022/01(AI) – 19.05.2022"** என குறிப்பிடவும்.
6. பின்வரும் அட்டவணையில் திட்டவட்டமாக குறிப்பிட்டவாறு விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் என முகவரியிடப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**Branded Desktop Computer with UPS and Surveying Equipment**

| Item No. | Items | Qty. (Nos) | Bid Security (Rs) |
|---|---|---|---|
| 01. | Branded Desktop Computer with UPS | 40 | Covering an amount equivalent to 1% of the value of the bid |
| 02. | GNSS RTK Units | 02 | Covering an amount equivalent to 1% of the value of the bid |

7. விலைமனுக்கள் பல்கலைக்கழக வழங்கல் கிளையின் சிரேஷ்ட உதவி நிதியாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 'கேள்விப் பெட்டியில்' சேர்க்கப்படல் வேண்டும் அல்லது 5 ஆம் இலக்க உட்கூறில் வழங்கப்பட்டுள்ள முகவரிக்கான இறுதி தினமன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.
8. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் 2022.05.19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக வழங்கல் கிளையின் சபை அறையில் விலைமனு திறத்தலுக்கு சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்.**

### தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் சேவை சபை (கல்வி அமைச்சு)

NLSL

## வெற்றிடங்கள்

தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகள் சபையில் உதவிப் பணிப்பாளர் (உபாய திட்டமிடல்) ii தரம் பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக தகைமையுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. சேவை வகை** : முகாமைத்துவ சேவைத்தரம்

**சம்பள அளவு** : MM 1-1-2016ரு:53,175-10x1375-15x1910-95575/- (மாதாந்தம்)

**பதவி** : **உதவிப் பணிப்பாளர் (உபாய திட்டமிடல்) ii தரம் (வெற்றிடம் 01)**

**தகைமைகள்** : **வெளி விண்ணப்பதாரிகளுக்கு (கீழேயுள்ள 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விசேட பட்டம் (முகாமைத்துவம்/வியாபார நிர்வாகம்/அரச நிர்வாகம்/வணிகம்/பொருளியல் பாடங்களில்) பெற்றிருத்தல்

**மற்றும்**

பட்டம் பெற்ற பின் அரச, அரச கூட்டுத்தாபனம், சபைகள் நியதிகள் நிறுவனங்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் குறைந்தபட்சம் குறித்த பாடத்துறையில் மூன்று (03) வருட அனுபவத்தை பெற்றிருத்தல்

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தை பெற்றிருத்தல் மற்றும் குறித்த பாடத்துறையில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறியை பயின்று சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

மேற்படி தகைமையைப் பெற்றபின்னர் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் குறைந்தபட்சம் குறித்த பாடத்துறையில் மூன்று வருட (03) அனுபவத்தை பெற்றிருத்தல்

**உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு (கீழேயுள்ள 1 அல்லது 2)**

1. மேற்படி வெளி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. கனிஷ்ட முகாமைத்துவ (JM) சேவை வகையில் குறித்த துறையிலான பதவியில் குறைந்தபட்சம் ஐந்துவருட (05) திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது** : 22 வயதிற்கு குறையாது மற்றும் 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது)

**சேர்த்துக்கொள்ளும் முறை :** திறந்த போட்டி பரீட்சை மற்றும்/அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்

**வேறு**

சகல விண்ணப்பதாரிகளும்,

i. இலங்கை பிரஜையாக இருத்தல்

ii. பதவிக்காக ஒப்படைக்கப்படும் வேலைகளை முறையாக நிறைவேற்றுவதற்காக நாட்டின் எந்தப் பாகத்திலும் கடமையாற்றுவதற்கு தேவையான உடல், உளத் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவி நிரந்தரமாவதுடன், 03 வருட நன்னடத்தை காலத்திற்கு உட்பட்டது
2. ஊழியர் சேமலாப நிதிக்காக ஊழியரால் சம்பளத்தில் 8% செலுத்த வேண்டியதுடன், தொழில்தருநரால் 12% மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கு 3% உம் செலுத்தப்படும்.


இப்பதவிக்கான கடமை பிரதேசம் - கொழும்பு - முழுமையான சுயதரவு தகவல்கள், தமது கல்வி /தொழில்சார் தகைமைகள் மற்றும் சேவை அனுபவம் பற்றிய விபரங்கள் மற்றும் தம்மை பற்றிய தகவல்களை அறியக்கூடிய உறவினரல்லாத இரு பரிந்துரைப்பவர்களின் பெயர் மற்றும் முகவரி உள்ளடங்கிய விண்ணப்பத்திற்கு குறித்த சான்றிதழ்களின் பிரதியுடன், "தலைவர், தேசிய நூலக ஆவணங்கள் சேவை சபை, இல.14, நிதஹஸ் மாவத்தை, கொழும்பு - 07 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் 2022.05.06ம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு இருத்தல் வேண்டும்.

மேலே தரப்பட்டுள்ள சகல தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**தேசிய மூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவை சபை**
**இல -14, நிதஹஸ் மாவத்தை,**
**கொழும்பு - 07**

**2022.04.27**


# சிறு விளம்பரம்











122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**

விற்பனைக்கு

SG-YN-4574 Bajaj 2011 threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 027691



312

**வெற்றிடங்கள்**

தொழில் நுட்பம்

டிங்கர் பெயின்டர்கள் தேவை. சகல வசதிகளும் உண்டு. நுகேகொடை 0777252876 027023

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

அல்லஸ் ஹோ் தூஷண சொ்தா விமர்சன கொமிஷன் சபாவ
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
COMMISSION TO INVESTIGATE ALLEGATIONS OF BRIBERY OR CORRUPTION

## 2022/04/08 ஆம் திகதி மாதாந்த வாடகை அடிப்படையில் (03) கார் வண்டிகளைப் பெற்றுக் கொள்வதற்கான விலைமனுக் கோரலுக்கு மேலதிகமாக

## மாதாந்த வாடகை அடிப்படையில் (03) கார் வண்டிகள் மற்றும் (05) வான்களைப் பெற்றுக் கொள்ளல்.

இலஞ்ச அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெறுகைக் குழுவின் தலைவரினால் மாதாந்த வாடகை அடிப்படையில் (03) கார் வண்டிகளைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட அழைப்பிற்கு அமைய 01 ஆவது நிபந்தனையினை மறுசீரமைப்பதுடன், இதற்கு மேலதிகமாக மேலும் பயணிகள் போக்குவரத்திற்காக 05 வான்களைப் பெற்றுக் கொள்வதற்காக தகைமைவாய்ந்த விலை மனுதாரர்களிடமிருந்து முத்திரை பதிக்கப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனை மற்றும் விதிமுறைகள்**

1. வாகனத்தின் வகை
   - i. கார் வண்டி - எஞ்சின் கொள்ளவு - 1300CC மற்றும் 2500CC இடைப்பட்டது
   - ii. பயணிகள் வான் - எஞ்சின் கொள்ளவு - 2500CC - ஆசன எண்ணிக்கை 10/15
   - iii. இதற்காக அனைத்து வாகனங்களையும் ஒரே தடவையில் அல்லது அதனைவிடக் குறைந்த வாகன எண்ணிக்கைக்காகவும் விலைமனுக்களை சமர்பிக்க முடியும்.

இதற்காக விலைமனுக்களை வழங்கும் தினம் 2022/05/17 வரையும், விலை மனுக்களை பொறுப்பேற்கும் இறுதித் தினத்தை 2022/05/18 ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

2022/04/08 ஆம் திகதி விலைமனு கோரலை உள்ளடக்கிய பத்திரிகை விளம்பரத்தில் காணப்படும் ஏனைய வாசகங்கள், பிரிவுகள் மற்றும் நிபந்தனைகள் அதேவாறு உரியதாகும்.

**தலைவர் - பெறுகைக் குழு**
**இலஞ்ச அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு**
**இலக்கம் 36, மலலசேகர மாவத்தை**
**கொழும்பு 07**
**தொலைபேசி இல – 0112582864, 0112596365 பெக்ஸ் - 0112058346**

## பெயர் மாற்றம்

சம்மாந்துறை இஸ்மாயில்புர கிராமத்தில் வசிக்கும் கீழ்க் குறிப்பிடப்படும் பெயரைக் கொண்ட நான் புனித இஸ்லாம் மதத்தை தழுவிக் கொண்டு எனது பெயரை மாற்றி உள்ளேன் என்பதை இத்தால் இலங்கை சோஷலிசக் குடியரசுக்கும், மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

சூசைப்பிள்ளை தசமி
**சூசைப்பிள்ளை பாத்திமா றஸ்மியா**

## 2023 ஆண்டிற்காக வரவு - செலவுத்திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்

ஆனமடுவ பிரதேச சபையின் வரவு ஆனமடுவ பிரதேச சபை செலவுத்திட்ட அறிக்கையை தயாரிப்பதற்காக வருடாந்த அபிவிருத்தி திட்டமிடலுக்கு உட்படுத்தப்பட வேண்டிய அதிகாரப் பிரதேசத்திற்கு சொந்தமான அத்தியாவசிய அபிவிருத்தி ஆலோசனைகள் 2022 ஜுன் 30ம் திகதிக்கு முன்னர் தலைவர், ஆனமடுவ பிரதேச சபை, சிலாபம் வீதி, ஆனமடுவ என்ற முகவரிக்கு அனுப்புமாறு அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களுக்கு மற்றும் சமூக அமைப்புகளுக்கு இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

**ஆர்.எப்.எம்.பி.பீ.ராஜகருணா**
**தலைவர், ஆனமடுவ பிரதேச சபை**

## அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட/நியமிக்கப்பட்டவர்களின் தகுதிகளை ஆராயும்: -

| இல | பெயர் மற்றும் விலாசம் | பதவி |
|---|---|---|
| 1. | திருமதி என்.எம்.டி.ஏ. குணசேகர, 51/8, விஹார மாவத்தை, தலவத்துகொட வீதி, பிட்டகோட்டே | இஸ்ரேல் நாட்டிற்கான இலங்கையின் தூதராக பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 2. | திரு.கே.எம்.மஹிந்த சிறிவர்தன, 30, ஜயதிலக கார்டன், வராகொட, களனி | நிதி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் |

மேற்குறிப்பிட்ட பெயர் குறிப்பிடப்பட்ட/நியமிக்கப்பட்ட நபர்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, **“செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே”** என்ற விலாசத்திற்கு 2022 மே மாதம் 10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல. 011-2777300 ஊடாக அல்லது highposts_c@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

அவ்வெழுத்துமூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையத்தளத்திலும் இடம்பெற்றுள்ளது (www.parliament.lk)

**குழுச் செயலாளர்**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**
**2022 ஏப்ரல் 27 ஆம் திகதி**

## இலங்கை முதலீட்டுச் சபை

## பெறுகை அறிவித்தல்

பின்வரும் பெறுகைக்கான விலைக்கோரல் விளம்பரம் 2022-04-27ஆம் திகதிய புதன்கிழமை மற்றும் 2022-04-30ஆம் திகதிய சனிக்கிழமை டெய்லி நியூஸ் (Daily News) பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**REFURBISHMENT AND REARRAGMENT OF PART OF 27TH FLOOR OF BOI OFFICE BUILDING AT WEST TOWER, WORLD TRADE CENTRE, COLOMBO 01**

**CONTRACT No BOI/TS/HO/2022/09/05.032**

மேற்படி பெறுகைக்கு இயைபான கேள்விப் படிவங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க ஆர்வம் காட்டும் ஒப்பந்தக்காரர்கள் 2022-04-27ஆம் திகதிய புதன்கிழமை மற்றும் 2022-04-30ஆம் திகதிய சனிக்கிழமை டெய்லி நியூஸ் (Daily News) பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

## இலங்கை முதலீட்டுச் சபை

## பெறுகை அறிவித்தல்

கீழ்க்காணும் பெறுகைக்காக பெறுகை கோரல் அறிவித்தல் 2022.04.23 சனிக்கிழமை மற்றும் 2022.04.27 புதன்கிழமை நாட்களில் (Daily News) பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**SUPPLY & INSTALLATION OF ADDITIONAL SUBMERSIBLE PUMPS WITH MOTORS FOR KALU GANGA WATER INTAKE OF WATER SUPPLY SCHEME AT HORANA EXPORT PROCESSING ZONE**

**CONTRACT NO: BOI/TS/HEPZ/2021/08/02.038**

மேற்படி பெறுகைக்காக குறித்த கேள்விப் பத்திரங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு 2022.04.23 சனிக்கிழமை மற்றும் 2022.04.27 புதன்கிழமை நாட்களில் (Daily News) பத்திரிகையில் குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படுமாறு இத்தால் அறிவித்துக் கொள்கிறோம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## ரூ.35,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

17.00% 2025 ‘‘A’’ தொடர்களின் கீழ் ரூ. 20,000 மில்லியனையும், 18.00% 2027 ‘‘A’’ தொடர்களின் கீழ் ரூ. 15,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2022 ஏப்பிறல் 28ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.
**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 17.00% 2025 ‘‘A’’ | 18.00% 2027 ‘‘A’’ |
|---|---|---|
| ISIN* | LKB00425F013 | LKB00527E019 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 20,000 மில்லியன் | ரூ. 15,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 17.00% ஆண்டொன்றிற்கு | 18.00% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2021 யூன் 01 | 2022 மே 01 |
| **முதிர்வுத் திகதி** | **2025 யூன் 01** | **2027 மே 01** |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 01 யூன் & 01 திசெம்பர் | 01 மே & 01 நவெம்பர் |
| ஒன்றுசேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 7.1923 | ரூ. 100 இற்கு ரூ. 0.1467 |
| ஏல விற்பனைத் திகதி | 2022 ஏப்ரல் 28, வியாழக்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2022 ஏப்ரல் 28, வியாழக்கிழமை மு.ப. 11.00 மணி | |
| **தீர்ப்பனவுத் திகதி** | **2022 மே 04** | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வொரு தொடர்/ ISIN தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்வெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் லிமிடட் | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம். ஆசிம்**
பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர் / பதிவாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்,
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**

## பெறுகை அழைத்தல்

### கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை - முல்லேரியாவ

### சிற்றுண்டிச்சாலைச் சேவையை நடைமுறைப்படுத்தல் 2022/ 2023

கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை (முல்லேரியாவ) இன் பிராந்தியப் பெறுகைக் குழுத் தலைவரினால் 2022/2023 ஆண்டிற்கான வைத்தியசாலையின் சிற்றுண்டிச் சாலையை நடைமுறைப்படுத்துவதற்காகத் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக் கோரப்படுகின்றது.

- இதற்காக ஆர்வமுள்ள நபர்கள் படிவக் கட்டணமாக ரூபா 2000.00 இற்கான மீளளிக்கப்படாத தொகையை, இவ் வைத்தியசாலையின் கணக்காளரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டுடன் தம் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து 2022.04.28 முதல் 2022.05.21 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பிரதான அலுவலகத்தில் விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம், என்பதுடன், இலவசமாக அதற்கான ஆவணங்களைப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.
- உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள், 2022.05.28 அன்று மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, ‘தலைவர், பிராந்தியப் பெறுகைக்குழு, கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை, முல்லோரியாவ’ என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது இவ்வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம்.
- விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அதே முகவரியில் விலைமனுத்திறக்கப்படுவதுடன் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் அவ் வேளையில் சமுகமளித்திருக்கலாம்.
- விலைமனுக்கள் 02 பிரதிகளாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன், அவை தனித்தனி உறைகளில் சேர்த்து. மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு ஒருறையில் சேர்த்து, முல்லேரியாவ, கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலைச் சேவையை வழங்கல் - 2022/2023 எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
- அரச ஒப்பந்தங்களை மீறியமைக்காக, அபகீர்த்தியானோர் பட்டியலப்படுத்தப்பட்ட நபர்களுக்கு விலைமனுப்படிவங்கள் வழங்கப்பட மாட்டாது
- குறித்த விலைமனுக்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும் என்பதுடன், பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானமாக அமையும்.
- மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்காக கிழக்கு கொழும்பு ஆதார வைத்தியசாலையின் கீழ்க்காணப்படும் தொலைபேசி இலக்கங்களை அழைக்கவும். தொ.பே.இல: 011-2578226/ 011-2549390

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**கிழக்கு கொழும்பு ஆதார வைத்தியாசலை,**
**முல்லேரியாவ.**
**2022.04.27**

## கேள்வி அறிவித்தல்

## சப்ரகமுவ மாகாண சபை

### உடைந்த வாகனங்களை விற்பனை செய்வதற்கான விலைக்கோரல்

சப்ரகமுவ மாகாண சபையில் பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட உடைந்த வாகனங்களை திறந்த கேள்வி மூலம் விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. வாகனமாக அப்புறப்படுத்துவதற்கு இனங்காணப்பட்ட வாகனம்

| தொ. இல. | வாகன இலக்கம் | வாகன வகை | உற்பத்தி வருடம் | கேள்விக் கட்டணம் (ரூபா) | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளளிக்கப் படாதது | மீளளிக்கப்படும் |
| 01 | 52 - 4728 | நிசான் டபள்கெப் | 1990 | 3,000.00 | 25,000.00 |

02. உதிரிப்பாகங்கள் மற்றும் சிதைவுகளாக அப்புறப்படுத்துவதற்கு இனங்காணப்பட்ட வாகனங்கள்

(இந்த வாகனங்களின் பதிவுச் சான்றிதழ்களை இரத்துச் செய்வதற்கு மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. இதற்கு பதிவுச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது என்பதுடன் செஸி இலக்கத்தை வெட்டி அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.)

| தொ. இல. | வாகன இலக்கம் | வாகன வகை | எண்ணிக்கை | வகைப் படுத்தல் | கேள்விக் கட்டணம் (ரூபா) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளளிக்கப் படாதது | மீளளிக்கப் படும் |
| 01 | இலக்கம் இன்றி | மொபெட் மோட்டார் சைக்கிள் | 197 | லொட் இல. 01 | 4,000.00 | 10,000.00 |
| 02 | 93 - 7001 | ஹொண்டா மோட்டார் சைக்கிள் | 09 | லொட் இல. 02 | 1,000.00 | 4,000.00 |
| 03 | 95 - 6661 | | | | | |
| 04 | 93 - 6916 | | | | | |
| 05 | 93 - 7009 | | | | | |
| 06 | 93 - 6934 | | | | | |
| 07 | 93 - 7007 | | | | | |
| 08 | 89 - 0563 | | | | | |
| 09 | 121 - 5166 | | | | | |
| 10 | 132 - 0075 | | | | | |
| 11 | 88 - 5485 | யமஹா மோட்டார் சைக்கிள் | 01 | | | |
| 12 | 133 - 2132 | சுசுகி மோட்டார் சைக்கிள் | 01 | | | |
| 13 | 53–5627 | மிட்சுபிஷி கெப் | 04 | லொட் இல. 03 | 2,500.00 | 6,000.00 |
| 14 | 53 –5636 | | | | | |
| 15 | 53–5638 | | | | | |
| 16 | 53 –5635 | | | | | |
| 17 | 53–1449 | மிட்சுபிஷி வேன் | 01 | லொட் இல. 04 | 2,000.00 | 5,000.00 |
| 18 | 50–5594 | மெஸ்டா லொறி | 01 | லொட் இல. 05 | 3,000.00 | 8,000.00 |
| 19 | 31-0685 | ஜீப் | 01 | லொட் இல. 06 | 2,500.00 | 6,000.00 |
| 20 | 32-0537 | லேண்ட் ரோவர் | 01 | லொட் இல. 07 | 2,500.00 | 6,000.00 |

1) இந்த வாகனங்கள் சப்ரகமுவ மாகாண சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்பதுடன், உத்தேச கேள்விதாரர்கள் 2022-04-27ஆம் திகதி முதல் 2022-05-19ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம். மேற்படி 01ஆம் மற்றும் 02ஆம் எனும் வகையில் மாகாண திறைசேரிக்கு பணம் செலுத்தி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

02) விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘................ ஆம் இலக்க வாகனத்திற்காக விலைமனு சமர்ப்பித்தல்’’ எனவும் உதிரிப்பாகங்கள் மற்றும் சிதைவுகளுக்காக ‘‘........... ஆம் லொட் இலக்கத்திற்காக விலைமனு சமாப்பித்தல்’’ எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களை 2022-05-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் மாகாண திறைசேரி, சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

3) ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுதாரருக்கு அதுபற்றி அறிவிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் முழுமையான கட்டணத்தைச் செலுத்தி குறித்த வாகனத்தை அப்புறப்படுத்திக்கொள்ள வேண்டும்.

4) மேலதிக விபரங்களை பிரதிப் பிரதான செயலாளர் (நிதி முகாமைத்துவம்) அவர்களிடமிருந்து 045-2231224 அல்லது 045–2222893 எனும் தொலைபேசி இலக்கங்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**சுனில் ஜயலத்,**
**பிரதான செயலாளர்,**
**தலைவர், பிரதான செயலாளர் பெறுகைக் குழு,**
**சப்ரகமுவ மாகாண சபை.**

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அங்கொட ஐடி எச் மந்தவில வீதி, 7ம் ஒழுங்கை , 22/4ம் இலக்கத்தில் வதியும் கலப்பத்திகே ஆனந்தலீல நெரஞ்சலிகா சரங்கனி டி சில்வா (தேசிய அடையாள அட்டை இல: 1947050900802) ஆகிய நான் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் பொதுமக்களுக்கு அறியத் தருவது யாதெனில், பதிவாளர் நாயக அலுவலகத்தின் 2019 செப்டெம்பர் 24ம் திகதியிடப்பட்ட 16234ம் இலக்க தினப்புத்தகத்தின் கீழ் 288 ம் புத்தகத்தில் 43 ம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டதும் மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் நுகேகொட சப்பல் வீதி 36ம் இலக்கத்தில் வதியும் ஜசிந்த றோமனி பியற்றிஸ் கொலம்பகே (அல்லது சிகிலார்) (தேசிய அடையாள அட்டை இல: 578050183V) மற்றும் நுகேகொட ஏக்கநாயக்க அவென்யு 15/1ம் இலக்கத்தில் வதியும் லிலானி சிர்லீன் சாப்ரெர் (தேசிய அடையாள அட்டை இல:457202679V) ஆகியோருக்கு வழங்கப்பட்டதும் பிரசித்த நொத்தாரிசு எச்.ரி.மெத்யூஸ் அவர்களால் அத்தாட்சிப்படுத்திய 2019 ஆகஸ்ட் 8ம் திகதியிடப்பட்ட 1464 ம் இலக்க பொது அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச்செய்யப்படுகிறது என்பதாகும். அத்துடன் எனது சார்பாக அவர்களால் மேற்கொள்ளப்படும் எக்காரியத்திற்கும் நான் பொறுப்பாளியல்ல.

## அற்றோணி அதிகாரத்தை இரத்து செய்தல்

இல.11, சர்வதேச பௌத்த நிலைய வீதி, வெள்ளவத்தை. கொழும்பு-06 இல் வசிக்கும் சசிக்கலா சிவக்கொழுந்து திருமணத்திற்கு முன் குமாரசுவாமி மற்றும் வைத்திலிங்கம் தர்மரத்தினம் சிவக்கொழுந்து ஆகிய நாம் இல.24/16/A ஸ்ரீ சங்கபோ வீதி, கவுடான, தெஹிவளை இல் வசிக்கும் ஜோர்ஜ் பீலிக்ஸ் தோமஸ் என்பவருக்கு வழங்கியதும் எம்மால் நிறைவேற்றப்பட்டதும் எஸ்.சர்மிளா மற்றும் ரஞ்சனி தாகூர் ஆகியோரால் சாட்சியமிடப்பட்டதும் 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி திகதியிடப்பட்டு ஒன்றாறியோ பிரசித்த நொத்தாரிசு நாதன் சிறிதரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட அற்றோணி அதிகார பத்திரத்தை 28.06.2021 ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வண்ணம் இரத்து செய்யப்பட்டுவிட்டதாக இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் அதன் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

## பெறுகை அறிவித்தல்

### டீ சொய்சா மகளிர் வைத்தியசாலை, கொழும்பு - 08

டீ சொய்சா மகளிர் வைத்தியசாலையின், அரச மானியத்தின் கீழ் பின்வரும் கருமத்தை மேற்கொள்வதற்காக இலங்கை நிர்மாணிப்பு மற்றும் பயிற்சி நிறுவகத்தில் (ICTAD) பதிவு செய்யப்பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2022.04.27 முதல் 2022.05.11 அன்று மு.ப. 10.00 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2022.04.27 முதல் 2022.05.10 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 இற்கு இடைப்பட்ட காலத்தில் டீ சொய்சா மகளிர் வைத்தியசாலையின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத ரூபா 2500.00 இற்கான தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை நிருவாகப் பிரிவில் சமர்ப்பித்து இதற்கான விண்ணப்பப்படிவமொன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

பிழைகளின்றிப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் இரண்டு பிரதிகளாக, மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக்குறிப்பிட்டு முத்திரையிடப்பட்ட இரண்டு உறைகளுடன், தம் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் பதிவுத்தபாலில் விலைமனுத் திறக்கப்படும் நேரத்திற்கு முன்னர் 'தலைவர், பிராந்தியப் பெறுகைக் குழு, டீ சொய்சா மகளிர் வைத்தியசாலை, கொழும்பு - 08' என்ற முகவரிக்கு அனுப்புதல் அல்லது கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும். விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில், பெறுகையின் பெயர்' குறிப்பிடப்படல் வேண்டும். 2022.05.11 அன்று மு.ப. 10.00 இற்கு விண்ணப்பங்கள் திறக்கப்படும். அவ்வேளையில், விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

| இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் பெயர் | தரம் | உத்தேச தொகை ரூபா | விலைமனுப் பிணையம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | DMH/AB/D.S/ XII/2021 | ஔடதக்களஞ்சிய சாலையின் கூரையின் திருத்த வேலைகள் | C8 அல்லது அதற்கு மேல் | 4,895,775.75 | 75,000.00 |

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களின் செல்லுபடிக்காலம் 91 நாட்களாக இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களிற்காக அலுவலகத்தை அழைக்கவும். (தொ.பே. இல. 0112662619-23 நீடிப்பு 400) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக் குழு,**
**டீ சொய்சா மகளிர் வைத்தியசாலை**
**கொழும்பு 08.**

## நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்னெடுப்பு (SHIFT) திட்டம்

## வெற்றிடங்கள்

### (திட்ட ஒப்பந்த அடிப்படை)

நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்னெடுப்பு (SHIFT) திட்டதில் உள்ள பின்வரும் வெற்றிடங்களுக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் கீழ் தரப்பட்டுள்ளவாறு தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

### சிரேஷ்ட சமூக உத்தியோகத்தர் பதவி (பதவி 01)

**சம்பள குறியீடு** : PS 5 (ரூபா 95,000 + வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு)
**திட்டப் பிரிவு** : 100 மில். அமெரிக்க டொலருக்கு மேல் மற்றும் 250 அமெரிக்க டொலருக்கு கீழ்ப்பட்டது

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டம்.

அல்லது

தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு நிகரான தகைமை ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகைமை.

அல்லது

தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட இணை அங்கத்துவம்/ அதனை ஒத்த தொழில்முறை தகைமை.

மற்றும்

நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறையில் குறைந்தது 05 ஆண்டுகள் அனுபவம்

உட்கட்டமைப்பு திட்டங்களுக்காக சமூக அணிதிரட்டல் செயற்பாடுகள் மற்றும் ESHS செயற்பாடுகளில் அனுபவம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**பொது நிபந்தனைகள்**
**வயது எல்லை:** விண்ணப்ப இறுதித் திகதிக்கு 65 வயதுக்கு கீழ்பட்ட வயதெல்லை

**சேவையின் விதிகள் மற்றும் நிபந்தனைகள்:**
நியமனமானது திருப்திகரமான செயல்திறன் மதிப்பீட்டுக்கு உட்பட்டு வருடாந்தம் புதுப்பிக்கத்தக்கவாறு ஆரம்பத்தில் ஓர் ஆண்டு காலத்திற்கான ஒப்பந்த அடிப்படையை கொண்டதாகும். 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் நிபந்தனைகள் இந்த நியமனம் தொடர்பில் பொருந்தும்.

**தேர்வு முறை:**
தகைமை மற்றும் அனுபவம் அடிப்படையில் குறுகிய பட்டியலில் சேர்க்கப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு நேர்முகப்பரீட்சையில் காண்பிக்கும் செயல்திறன் அடிப்படையில் தேர்வு இடம்பெறும்.

கல்வி மற்றும் தொழில்முறை தகைமை, கடந்த கால அனுபவம் முதலியவற்றின் அனைத்து பிரதிகளையும் இணைத்த முழுமையான சுயவிபரக் கோவையுடனான விண்ணப்பங்களை 2022.05.18 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். தாமதித்து சமர்ப்பிக்கப்படுபவை நிராகரிக்கப்படும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். அரச/ கூட்டுத்தாபன துறைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனங்களின் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்**
**நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்னெடுப்பு (SHIFT) திட்டம்**
**இல. 38, சார்லஸ் பிளேஸ், ராவதாவத்த**
**மொரட்டுவ.**
**திகதி: 2022.04.25**

## நீர் வழங்கல் அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல்

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலைமனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| **சிவில் கேள்விகள்** | | | | | | | |
| 01 | கபடா வீதியிலுள்ள நீர்த் தாங்கிக் கோபுரத்தின் புதுப்பித்தல் வேலைகள் ஒப்பந்த இல: **RSC(S)/P&C/C/RENOVATION/ G'WEEDIYA/ RH/2022-27** | 2,000/- +VAT | ரூபா 16,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5 முதல் C9 வரையான தரத்தில் CIDA பதிவு | 1.6 மில்லியன் | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele: 0412222105 Fax 0412221329 | 11/05/2022 பி.ப. 2.00 |
| 2021-11-10ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. பிங்கிரிய - உடுபத்தாவ – மாகந்துர – பன்னல- குளியாப்பிட்டிய ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டம் - ஒரு நாளைக்கு $40,000m^3$ கொள்ளளவுடைய நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை நிர்மாணிப்பதற்கான விலைக்கோரல் - படிநிலை I – (பூர்வாங்க வேலைகள் - பொதி I) ஒப்பந்த இல. **NWSDB/NW/P&D/CP/A4-5/2021/03 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-05-11ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். | | | | | | | |
| 2021-11-10ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. ஹலியகொட நீர் வழங்கல் திட்டத்தை நிர்மாணித்தல் - படிநிலை I ஒப்பந்த இல. **NWSDB/SAB/P&D/CP/A4-22/2021/1 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-05-13ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். | | | | | | | |
| **வழங்கல் கேள்விகள்** | | | | | | | |
| 02 | 1500 தொன் அலுமினியம் சல்பேற்றை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல : **SUP&MM/CHEM/ALUM-07/2021/33** | 20,000/-+ VAT ** | ரூபா 1,500,000/- | 1500 தொன் அனுமினியம் சல்பேற் வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 99.82 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை. Tele: 011-2605328 Fax: 011-2635885 | 18/05/2022 மு.ப. 10.00 |
| 03 | குருநாகல் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு RO பொறித்தொகுதிகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல் படிநிலை - II (பொதி-1) ஒப்பந்த இல : **RSC (NW)/DEV/RO/RC (School Pro.) /NWP/2022/13** | 12,500/-+ VAT ** | ரூபா 225,100/- | பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் சகிதம் RO பொறித்தொகுதிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | 22.5 மில்லியன் | பிஒநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல். Tele: 037-2221161 Fax : 037-2230086 | 18/05/2022 பி.ப. 2.00 |
| 2022-04-06ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. வல்வெட்டித்துறை நீர் வழங்கல் திட்டத்திற்கு Submersible பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் கையளித்தல். ஒப்பந்த இல: **RSC/N/DGM/RH/PUMP/ VALVETI/2021/029 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-05-11ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். | | | | | | | |
| 2022-04-20ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. தொமோதர நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கு இரசாயனங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல : **RSC(UVA)/DGM(UVA)/ O&M(BAN)/ DEMODARA/2022/83 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-05-11ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். | | | | | | | |
| **சேவைக் கேள்விகள்** | | | | | | | |
| 04 | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடக்கு - மேற்கு) புத்தளம், எலுவன்குளம், மதுரங்குளி மற்றும் ஆனமடுவ பொறுப்பதிகாரி அலுவலகங்கள் மற்றும் புத்தளம் முகாமையாளர் அலுவலகத்திற்கான சுத்திகரிப்பு மற்றும் ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல: **RSC(NW)/M(O&M)PUT/SER/ O&M/PUT/2022/12** | 12,500/-+ VAT ** | ரூபா 215,000/- | பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் சகிதம் ஜெனிடோரியல் சேவைகளை வழங்குவதற்கான தகுதிவாய்ந்த நிறுவனங்கள் | 21.25 மில்லியன் | பிஒநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல். Tele: 037-2221161 Fax : 037-2230086 | 18/05/2022 பி.ப. 2.00 |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | | |
| 05 | பிஒநி மேற்கு - தெற்கு அலுவலகத்திற்கு (Dual A/C) வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல் மற்றும் பிரதேச பொறியியலாளர் (பண்டாரகம) அலுவலகத்திற்கு வேன் ஒன்றை (Dual A/C) வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல : **W-S/P&C/H(02)/DGM/O&M/2022/34** | 2,000/- +VAT | ரூபா 5,000/- ஒவ்வொரு வாகனத்திற்கும் | வாடகை அடிப்படையில் வானங்களை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் இயைபுடைய வாகன உரிமையாளர்கள் | | பிஒநி. (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ. Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946 / 0112637947 | 12/05/2022 மு.ப. 10.00 |
| 06 | மாத்தறை முகாமையாளர் (O&M) அலுவலகத்திற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல : **RSC(S)/P&C/HIRING/VAN/ M(O&M)MATARA/ O&M/ 2021-76R** | 2,000/- +VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele: 0412222105 Fax 0412221329 | 11/05/2022 பி.ப. 2.00 |
| 07 | பலப்பிட்டிய நீர் வழங்கல் திட்டத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல : **RSC(S)/P&C/HIRING/CREW CAB/ BALAPITIYA/ O&M/2021-169R** | 2,000/-+ VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele: 0412222105 Fax 0412221329 | 11/05/2022 பி.ப. 2.00 |
| 08 | பத்தேகம, பட்டபொல, உடுகம நீர் வழங்கல் திட்டங்களுக்கு (1) க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல : **RSC(S)/P&C/HIRING/CREW CAB/ B'GAMA,B'POLA,U'GAMA(I)/ O&M/2021-173R** | 2,000/- +VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele: 0412222105 Fax 0412221329 | 11/05/2022 பி.ப. 2.00 |
| 09 | ஹிக்கடுவ நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல : **RSC(S)/P&C/HIRING/T.WHEELER/ HIKKADUWA/ O&M/2021-191R** | 500/- +VAT | ரூபா 2,500/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele: 0412222105 Fax 0412221329 | 11/05/2022 பி.ப. 2.00 |
| 10 | வவுனியா RM அலுவலகத்திற்கு வாகனத்தை (வேன் ஒன்று) வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல : **RSC/N/DGM/O&M(V)/Hiring vehicle/2022/003** | 4,000/- +VAT | ரூபா 36,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிநிஓ (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. Tele:024-2225719/ 024-2227340 Fax: 024-2225088/ 024-2227341 | 18/05/2022 பி.ப. 2.00 |
| 11 | (மேற்கு - தெற்கு) பிபொ முகாமையாளருக்கு மோட்டார் காரொன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல : **W-S/P&C/H(01)/DGM/ O&M/2022/31** | 2,000/- +VAT | ரூபா 5,000/- | இயைபுடைய வாகன உரிமையாளர்கள் | | பிஒநி. (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ. Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946 / 0112637947 | 12/05/2022 மு.ப. 10.00 |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

பன்னிப்பிட்டிய, ஹோக்கந்தர வீதி, இலக்கம் 1490/09 இல் வசிக்கும் ருக்ஷான் தர்ஷண இலேபெரும ஆகிய நான், என்னால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விஷேட (வெளிநாட்டு) அற்றோணிப்பத்திரத்தின் மூலம் பன்னிப்பிட்டிய ஹோக்கந்தர வீதி இலக்கம் 1490/09 என்ற முகவரியில் வசிக்கும் கொல்வின் நந்தசிரி இலேபெரும என்பவருக்கு அத்தாட்சிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட விஷேட அற்றோணித்தத்துவமானது 2022.04.25 அன்று முதல் செயல்வலுப்பெறும் வண்ணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதெனவும் இதன் பின்னர் அற்றோணி பெறுநரினால் மேற்கொள்ளப்படும் எந்தவித நடவடிக்கைகளிற்கும் நான் பொறுப்புதாரியல்ல எனவும் இலங்கை குடியரசின் பொதுமக்கள் அனைவருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு - 07, கருவாத் தோட்டம், ரீட் அவெனியூ, இல-10/1 இல் முன்பு வசித்த, தற்போது ராஜகிரிய, புத்கமுவ வீதி, பெயார்மவுன்ட் ரெசிடன்சீஸ் 14Cஇல் வசிக்கும் மெதகொடகே தரிந்து விஜேசேன (தே.அ.அ.இல-821551358V) ஆகிய நான் கொழும்பு - 07, கருவாத் தோட்டம், ரீட் அவெனியூ, இல-10/1 ஐ சேர்ந்த மெதகொடகே துசித்த விஜேசேன (தே.அ.அ.இல-583010572V) இற்கு என்னால் வழங்கப்பட்ட, கொழும்பு பகிரங்க நொத்தாரிசு S.R.நாராயனசுவாமியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012 செப்டம்பர் 11ஆம் திகதியிடப்பட்ட அற்றோணி தத்துவ இல 4792 ஐ 2022.04.25 முதல் அமுலுக்கு வருமாறு நான் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். அத்துடன் சொல்லப்பட்ட அற்றோணி தத்துவத்தின் கீழ் அவரால் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கை அல்லது உறுதிகளுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மெதகொடகே தரிந்து விஜேசேன**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச சபை
## கிழக்கு மாகாணம், திருகோணமலை

## கால நீடிப்பிற்கான அறிவித்தல்

2022.03.27 ஆம் திகதிய ''தினகரன் மற்றும் தினமின " பத்திரிகைகளில் பிரசுரமான கன்னியாவில் தகனசாலை நிர்மாணம் (EP/TGPS/WD/SP/Crematorium/2022/01) கேள்வி அறிவித்தல் சம்பந்தமானது. விலைமனு பெற்றுக்கொள்ளல், சமர்ப்பித்தல், மற்றும் திறத்தல் கீழ்வரும் அட்டவணையின் பிரகாரம் நீடிக்கப்பட்டுள்ளது. ஆகையினால் விலைமனுதாரர்கள் 2022.05.05 ஆம் திகதி பி.ப.15.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில், தலைவர், பட்டிணமும் சூழலும் பிரதேச சபை, உப்புவெளி, திருகோணமலை எனும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மூடிய பின்னர் சமூகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகவே திறக்கப்படும்.

1) விலைமனுக்களை வழங்குதல் :- 2022.05.04 அன்று பி.ப 03.00 மணி வரை

2) விலைமனுக்களை சமர்ப்பித்தல் மற்றும் திறத்தல் :- -2022.05.05 அன்று பி.ப 03.00 மணி வரை

3) விலைமனுக்களை திறத்தல் :- 2022.05.05 அன்று பி.ப.03.00 மணி

**R.A.T.S.D. ரத்நாயக**
**தலைவர்**
**பட்டிணமும் சூழலும் பிரதேச சபை,**
**உப்புவெளி.**
**2022.04.27**

**தொ .பே - 0262222150**
**பெக்ஸ் - 0262220529**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசு
## நீர்ப்பாசன அமைச்சு
## நீர்ப்பாசனத் திணைக்களம்
## தேசிய போட்டி ரீதியிலான விலைகோரல்

1. பின்வரும் 01ஆம் இலக்க அட்டவணையின் பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

**அட்டவணை இல. 01**

| விலைக் கோரல் இல. | வழங்கல் விபரங்கள் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத வைப்பு (ரூபா) | விலைக் கோரல் செல்லுபடியாக வேண்டிய காலம் | விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா) | பிணை முறி செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| IFB/ID/GOSL/ NCB/2022/005 | **அளவை உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்** | | | | | |
| | Lot 01 - Procurement of Total Stations | 05 | 6,000.00 | 2022 ஆகஸ்ட் 03ஆம் திகதி வரை | 100,000.00 | 2022 ஆகஸ்ட் 31ஆம் திகதி வரை |
| | Lot 02 - Procurement of Auto Levels | 25 | | | 50,000.00 | |
| IFB/ID/GOSL/ NCB/2022/009 | உமா ஓய கீழ் நீரோட்ட அபிவிருத்தித் திட்டத்திற்கு 50kg சீமெந்து மூடைகளை வழங்குதல் | 30,000 மூடைகள் | 18,000.00 | 2022 ஆகஸ்ட் 17ஆம் திகதி வரை | 1,000,000.00 | 2022 செப்டெம்பர் 14ஆம் திகதி வரை |

2. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, 230ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களம், ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள் கிளை, நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை இதே முகவரியில் 2022 ஏப்ரல் 27ஆம் திகதி முதல் 2022 மே 18ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் (வேலை நாட்களில்) முன்னேற்பாட்டின் பேரில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். (தொடர்பிலக்கம்: 011-2582677)

3. மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்கு தயவு செய்து 01ஆம் அட்டவணையைப் பார்க்கவும்) பின்வரும் வங்கிக் கணக்கிலக்கத்திற்குச் செலுத்திய வரவுப் பற்றுச்சீட்டுடன் கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, 230ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களம், நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) அலுவலகத்திற்கு அல்லது நிறுவனக் கடிதத் தலைப்பில் (மூலப் பிரதி) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் மின்னஞ்சல் ஊடாக ( idprocurement1@gmail.com / தொலைநகல்: 011-2582677 ) சமர்ப்பிப்பதன் பேரில் 2022 ஏப்ரல் 27ஆம் திகதி முதல் 2022 மே 18ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

**அட்டவணை இல. 02**

| வங்கி விபரங்கள் | வங்கி வரவுத் துண்டு மற்றும் வேண்டுகோள் கடிதம் அனுப்புதல் | |
|---|---|---|
| | மின்னஞ்சல் முகவரி | தொலைநகல் இல. |
| வங்கியின் பெயர்: இலங்கை வங்கி தப்ரபேன் கிளை<br>கணக்கிலக்கம்: 7042385<br>பெறுநரின் பெயர்: நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம்<br>(Online பரிமாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது) | idprocurement1@gmail.com | 011-2582677 |

4. பின்வரும் 03ஆம் அட்டவணையில் குறிப்பிட்டவாறு விலைமனுக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.

**அட்டவணை இல. 03**

| விலைமனு இலக்கம் | வழங்கல் விபரங்கள் | நடாத்தும் வழி | திகதி | நேரம் |
|---|---|---|---|---|
| IFB/ID/GOSL/ NCB/2022/005 | அளவை உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | Zoom Meeting | 2022 மே 05ஆம் திகதி | மு.ப. 11.00 மணி |
| IFB/ID/GOSL/ NCB/2022/009 | உமா ஓய கீழ் நீரோட்ட அபிவிருத்தித் திட்டத்திற்கு 50kg சீமெந்து மூடைகளை வழங்குதல் | Zoom Meeting | 2022 மே 05ஆம் திகதி | பி.ப. 2.00 மணி |

5. 01ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப் பிணைமுறியொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஏதாவது விலைமனு செல்லுபடியாகும் விலைமனுப் பிணை முறி இல்லாமல் இருந்தால் எவ்வித முன்னறிவித்தலுமின்றி பதிலளிக்காதவை எனக் கருதப்பட்டு நிராகரிக்கப்படும்.

6. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களிலும் விலைமனுதாரர் சிற்றொப்பமிட்டு அவரது முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

7. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களை 2022 மே 19ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னராகக் கிடைக்கும் வகையில், கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை 230ஆம் இலக்க நீர்ப்பாசனத் திணைக்களம், 3ஆம் மாடியிலுள்ள பிரதான நிதியிடல் அலுவலரின் 311ஆம் இலக்க அறையில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில், தலைவர், திணைக்கள பெறுகைக்குழு என முகவரியிட்டு மேற்படி முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2022 மே 19ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

8. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பொருள் மற்றும் விலைக்கோரல் இலக்கம் (IFB No.) ஆகியவற்றை தயவு செய்து எழுதவும்.

9. சுய விருப்பத்தின் பேரில் சமுகமளிக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07.**

2022-04-27ஆம் திகதி.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டம்
## நீர்ப்பாசன அமைச்சு
## (தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல்)

விலைக்கோரல் இல. : CRIWMP/NCB/VIS/2022/Packages from 18 to 35)
திகதி : 2022-04-27

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள அநுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் **(VIS)** புனருத்தாரண வேலைகளுக்காக விலைமனு கோரல்

01. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது UNDP இன் தர அங்கீகாரம் பெற்ற முகவர் நிலையத்துடன் பசுமை காலநிலை நிதியத்திலிருந்து (GCF) காலநிலை மாற்றத்தினைத் தாக்குபிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்ட கிரயச் செலவிற்காக நிதியொன்றை பெற்றுள்ளதுடன் இந்நிதியத்தின் பகுதியொன்று மேலேயுள்ள வழங்கலுக்கு உரிய பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது. பின்வரும் பொதிகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து காலநிலை மாற்றத்தினைத் தாக்குபிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் (CRIWMP) செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவரின் சார்பாக செயற்றிட்ட பணிப்பாளர், முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| தொ. இல. | பொதிகளின் விபரம் | விலைக்கோரல் இல. | விலைக் கோரல் உத்தரவாதம் ரூபா | CIDA தரம் |
|---|---|---|---|---|
| **அநுராதபுரம் மாவட்டம், மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவு, வீஹேன - குரம்ப வெவ நீர் அடுக்கை (03 பொதிகள்)** | | | | |
| 01 | பலுகொல வெவ மற்றும் திவுல்கல வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/VEEHENA/2022/18 | 200,000.00 | C5 மற்றும் C6 |
| 02 | கரம்ப வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/VEEHENA/2022/19 | 150,000.00 | C5 மற்றும் C6 |
| 03 | புளியங்குளம வெவ மற்றும் வெஹெர வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/VEEHENA/2022/20 | 250,000.00 | C5 மற்றும் C6 |
| **அநுராதபுரம் மாவட்டம், மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவு, திவுல் வெவ நீர் அடுக்கை (06 பொதிகள்)** | | | | |
| 04 | யோத வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ DIVUL /2022/21 | 200,000.00 | C5 மற்றும் C6 |
| 05 | கல் வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/DIVUL/2022/22 | 200,000.00 | C5 மற்றும் C6 |
| 06 | யோத வெவ அணைக்கட்டு மற்றும் மகிச்சாவ வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/DIVUL/2022/23 | 350,000.00 | C5 மற்றும் C6 |
| 07 | கல் வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/DIVUL/2022/24 | 200,000.00 | C5 மற்றும் C6 |
| 08 | தில்லங்கல வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/DIVUL/2022/25 | 250,000.00 | C5 மற்றும் C6 |
| 09 | மினிஹெட்டிகம வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/DIVUL/2022/26 | 350,000.00 | C5 மற்றும் C6 |
| **குருநாகல் மாவட்டம், கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவு, மொட்டபெத்தாவ வெவ நீர் அடுக்கை (05 பொதிகள்)** | | | | |
| 10 | மொட்டபெத்தாவவெவ, எண்டரக்கொட்டுவ அணை, பனாகொட்டுவ அணை கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/MOTTA/2022/27 | 400,000.00 | C5 மற்றும் C6 |
| 11 | பஹல பலுகண்டெவ வெவ, இஹல பலுகண்டெவ வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/MOTTA/2022/28 | 350,000.00 | C5 மற்றும் C6 |
| 12 | எலபத் வெவ, கருவலகஸ் வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/MOTTA/2022/29 | 200,000.00 | C5 மற்றும் C6 |
| 13 | இஹல வெவ, விமலதாசகே வெவ, கோணாரகம வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/MOTTA/2022/30 | 250,000.00 | C5 மற்றும் C6 |
| 14 | ரம்பொட்டுகுளம வெவ, வெலிஹிந்தவெவ கிராமிய குளங்களின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/MOTTA/2022/35 | 350,000.00 | C5 மற்றும் C6 |
| **அநுராதபுரம் மாவட்டம், மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவு, திவுல் வெவ நீர் அடுக்கை (04 பொதிகள்)** | | | | |
| 15 | புலு வெவ, ஹீலம்பவெவ கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ DIVUL /2022/31 | 300,000.00 | C5 மற்றும் C6 |
| 16 | கோன் வெவ, திவுல் வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ DIVUL /2022/32 | 550,000.00 | C5 மற்றும் C6 |
| 17 | கொஹொம்பகஸ் வெவ, கலவல்பொத்தன வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ DIVUL /2022/33 | 550,000.00 | C5 மற்றும் C6 |
| 18 | பரசன் வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ DIVUL /2022/34 | 200,000.00 | C5 மற்றும் C6 |

02. கலிங்கு, துருசு, மடை கட்டமைப்பு மற்றும் அணைக்கட்டு நிர்மாணம் (தலையாய வேலைகள்) என்பவை 60 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். ஒவ்வொரு பொதியிலுள்ள அனைத்து கிராமிய நீர்ப்பாசன குளங்கள் / முறைமைகளில் ஒரே நேரத்தில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.

03. விலைக்கோரல்கள் முதலில் பொதிகள் ரீதியாக மதிப்பீடு செய்யப்படும். விலைமனுதாரர்கள் ஏதாவது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தப் பொதிகளுக்கு விரும்பலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பொதிகளுக்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது மேலே குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைமனுதார்கள் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் தனித்தனியான விலைக்கோரல் பிணை முறிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் தனித்தனியாக பட்டியலிடப்பட்ட ஒவ்வொரு பொதிகளுக்காகவும் இயந்திரங்கள், உபகரணங்கள், வள ஒதுக்கீட்டைக் குறிக்கும் தகுதி / தகைமை தகவுத்திறன்களை பிரத்தியேகமாக உள்ளடக்கல் வேண்டும். இறுதி மதிப்பீட்டுச் செயற்பாட்டின் போது கணிசமாக பதிலளிக்கக்கூடிய மதிப்பீடு செய்யப்பட்ட விலைக்கோரல் பொதிகளின் முழு மொத்த திட்டத்திற்கும் மிகவும் சிக்கனமான கலவை கவனத்திற் கொள்ளப்படும். விலைக்கோரல்கள் அவற்றின் ஒட்டுமொத்த திறன் மற்றும் மீதமுள்ள தகுதி / தகைமை / தகவுத்திறன் / வள ஒதுக்கீடு மற்றும் கையளித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும் என்பதுடன் அதிகபட்சமாக இரண்டு ஒப்பந்தப் பொதிகளுக்கு வரையறுக்கப்படும்.

04. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களை CRIWMP செயற்றிட்ட அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் முன் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக தகவல்களை 0112672228 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமாகவும் tendercriwmp@gmail.com என்ற மின்னஞ்சலூடாகவும் நீர்ப்பாசன அமைச்சின் CRIWMP செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

06. விபரனமான தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளன என்பதுடன் சில முக்கிய தகைமைகள் கீழே தரப்பட்டுள்ன.

அ. விலைமனுதாரர்கள் நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு துறையில் மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள CIDA (ICTAD) தரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ. நிர்மாண அனுபவம்: கடந்த பத்து வருடங்களில் இதற்கு நிகரான தன்மையுடைய குறைந்தபட்சம் ஒரு ஒப்பந்தத்தையாவது வெற்றிகரமான நிறைவு செய்த குறிப்பிடத்தக்க அனுபவம்

07. 2022-04-27ஆம் திகதி முதல் 2022-05-17ஆம் திகதி வரையும் அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை) ஒவ்வொரு தொகுதிக்கும் (பொதிக்கும்) மீளளிக்கப்படாத 4000.00 ரூபா கட்டணமொன்றைச் செலுத்திய பின்னர் CRIWMP செயற்றிட்ட பணிப்பாளருக்கு ஒப்பந்தக்காரரின் வியாபார தலைப்பில் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 500ஆம் இலக்கத்திலுள்ள 12ஆம் மாடியின் நீர்ப்பாசன அமைச்சின் CRIWMP அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

08. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் (விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது 119 நாட்கள்) மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கானதும் நீர்ப்பாசன அமைச்சின் CRIWMP, செயற்றிட்ட பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்டுள்ளதுமான விலைமனுப் பிணையொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

09. விலைமனுதாரர் விலைமனுவின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பவற்றை இரு தனித்தனியான உள்ளக தபாலுறைகளில் உள்ளிட்டு அவைகளின் மேல் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' எனக் குறிப்பிட்டு அதன் பின்னர் அவ்விரு உறைகளையும் ஒரு வெளியக தபாலுறையில் உள்ளிட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் பொதி இலக்கத்தை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பொதிகளுக்கான விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது, விலைமனுதாரர் ஒவ்வொரு பொதிக்கும் தனித்தனியாக அத்தகைய உறைகளைத் தயாரித்து, அத்தகைய அனைத்து உறைகளையும் "MASTER ENVELOPE" உறையில் உள்ளிடுதல் வேண்டும்.

10. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022-05-18ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தை வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம். தாமதமான சமர்ப்பித்தல்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் 7ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியில் உடன் திறக்கப்படும்.

11. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 7ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியில் 2022-05-10ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இடம்பெறும். வளமுள்ள விலைமனுதாரர்கள் வேளைத் தளங்களைப் பார்வையிடவும் பரீட்சிக்கவும் ஊக்குவிக்கப்படுகின்றனர் என்பதுடன் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு முன் விலைமனுதாரர்களின் சொந்த செலவில் விலைமனுக்களைத் தயாரிப்பதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

12. சந்தையில் நிலவும் ஏற்ற இறக்கங்களைக் கருத்தில் கொண்டு, CIDA வெளியீட்டில் சிறு நீர்ப்பாசனத்திற்கான குறியீட்டு / சூத்திரத்தின் அடிப்படையில் ஒப்பந்த நிபந்தனைகளின் 47வது பிரிவுக்கு இணங்க, ஒப்பந்தங்கள் விலை மாற்றத்திற்கு உட்படுத்தப்படுகின்றன. வெற்றிகரமான ஒப்பந்ததாரர்கள் திரட்டுவதற்கு 30% முன் பணத்தைப் பெற முடியும் மற்றும் காலநிலை மாற்றத்தினைத் தாக்குபிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்ட பசுமை காலநிலை நிதி மானியத்தால் நிதியளிக்கப்படுவதால், ஒப்பந்ததாரர்களுக்கு உரிய பணம் செலுத்துவதில் தாமதம் இருக்காது. இருப்பினும், கூட்டுறவு காப்புறுதி கம்பெனி லிமிடெட் வழங்கும் விலைக்கோரல் /முன்கூட்டிய காப்பீட்டு உத்தரவாதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

13. வேலை கொள்வோர் விலைமனுதாரர்களின் விலைமனுக்களைத் தயாரித்தல் அல்லது விநியோகித்தல் மற்றும் வேலைத் தள விஜயங்கள் தொடர்பான எந்தவொரு கிரயச் செலவுகள் அல்லது செலவினங்களுக்கும் பொறுப்புக்கூற மாட்டார்.

**தலைவரின் சார்பாக,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**செயற்றிட்ட பணிப்பாளர்,**
**காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**நீர்ப்பாசன அமைச்சு**
**12ஆம் மாடி, இல. 500, T.B. ஜயா மாவத்தை, கொழும்பு-10**

BE BETTER INFORMED!
News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE

# 150 மீற்றர் ஓட்டத்தில் ஆசிய சாதனையை முறியடித்த யுபுன்




தெற்காசியாவின் அதிவேக வீரரும், இலங்கையின் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீரருமான யுபுன் அபேகோன், இத்தாலியில் நேற்று (24) நடைபெற்ற *Perso Trophy 2022* போட்டித் தொடரில் ஆண்களுக்கான 150 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடம் பிடித்து அசத்தினார்.

குறித்த போட்டியை 15.16 செக்கன்களில் நிறைவுசெய்த அவர், 2017 ஆம் ஆண்டு ஜப்பான் நாட்டு வீரர் *Yoshihide Kiryu*, 15.35 செக்கன்களில் ஓடிமுடித்து நிலைநாட்டிய ஆசிய சாதனையை 5 ஆண்டுகளுக்குப் பிறகு முறியடித்து சாதனை படைத்தார்.

இந்தப் போட்டியை 15.17 செக்கன்களில் நிறைவுசெய்த இத்தாலி நாட்டு வீரர் *Chituru Ali* இரண்டாவது இடத்தையும், அதே நாட்டைச் சேர்ந்த *Mattia Furlani* 15.76 செக்கன்களில் போட்டியை நிறைவுசெய்து மூன்றாவது இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

குறித்த போட்டியில் பங்குகொண்ட இலங்கையைச் சேர்ந்த மற்றுமொரு வீரரான வினுர லக்மால், 16.83 செக்கன்களில் போட்டியை நிறைவுசெய்தார்.

# இலங்கைக்கெதிரான முதல் டெஸ்டிலிருந்து வெளியேறும் மெஹிதி ஹஸன்



இலங்கை அணிக்கு எதிராக நடைபெறவுள்ள முதல் டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணியின் முன்னணி சுழல் பந்துவீச்சாளர் மெஹிதி ஹஸன் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐசிசி டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் 15ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த போட்டித்தொடருக்கான 16 பேர்கொண்ட அணியை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை ஏற்கனவே அறிவித்திருந்தது. அறிவிக்கப்பட்டிருந்த அணியில் இடம்பெற்றிருந்த மெஹிதி ஹஸனின் விரலில் உபாதை ஏற்பட்டுள்ள காரணத்தால், அவர் முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மெஹிதி ஹஸன் முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடமாட்டார் என்ற நிலையில், சுழல் பந்து வீச்சாளர் நயீம் ஹஸன் அணியில் இணைக்கப்படுவார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மெஹிதி ஹஸன் தொடர்பில் கருத்து வெளியிட்ட பங்களாதேஷ் அணியின் தேர்வுக்குழு உறுப்பினர் ஹபிபுல் பஷார், "மெஹிதி ஹஸன் உபாதை காரணமாக கட்டாயமாக முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடமாட்டார். இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்கும் குறைந்த அளவிலான வாய்ப்புகள் மாத்திரமே உள்ளன" என்றார்.

பங்களாதேஷ் தொடருக்கான இலங்கை அணி எதிர்வரும் 8 ஆம் திகதி புறப்படவுள்ளதுடன், முதல் டெஸ்ட் போட்டிக்கு முன்னர் 2 நாட்கள் கொண்ட பயிற்சிப்போட்டியொன்றில் விளையாடவுள்ளது. இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி அடுத்த மாதம் 15 ஆம் திகதியும், இரண்டாவது டெஸ்ட் போட்டி 23 ஆம் திகதியும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 30-04-2022
இல. 05




# மட்டக்களப்பு மாவட்டத்திற்கு தங்கப்பதக்கம்

**கல்லடி குறூப் நிருபர்**

கிழக்கு மாகாணத்தின் விளையாட்டு திணைக்கள விளையாட்டுப் பயிற்றுவிப்பாளராக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் இவர் அகில இலங்கை ரீதியில் வளர்ந்தோர்களுக்கான *Masters Athletics Sri Lanka (Affiliated World Masters Athletics, Asian Masters Athletics, Athletics Association Of Sri Lanka)* வினால் நடாத்தப்பட்ட திறந்த விளையாட்டுப் போட்டி கடந்த 23 மற்றும் 24.04.2022 திகதிகளில் கொழும்பு சுகததாச மைதானத்தில் நடைபெற்றது. இதில் மட்டக்களப்பு மாவட்ட செயலக விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ப.ஜெயகுமார் 55 60 வயதிற்குற்பட்ட திறந்த போட்டியில் கோலூன்றி பாய்தல் *(Polevault)* நிகழ்வில் முதலாமிடத்தைப் பெற்று தங்கப் பதக்கம் வென்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

களுதாவளையை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வதிவிடமாக கொண்ட இவர் 1972-1978 காலப்பகுதியில் களுதாவளை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் போது விளையாட்டில் ஆர்வம் காட்டியுள்ளதுடன், மேலும் உயர் கல்வி தொடர்வதற்காக மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரியில் சேர்ந்து 1979 1984 வரை இப்பாடசாலையின் விளையாட்டுத்துறையில் திறமைகளை காட்டி மெய்வல்லுனர் போட்டிகளில் சம்பியன் பட்டத்தினை பெற்றுக் கொண்டதுடன், விளையாட்டு அமைச்சு மற்றும் இளைஞர் சேவை மன்றம் என்பவற்றினால் நடாத்தப்பட்ட போட்டிகளிலும் பங்குகொண்டு பல சாதனைகளை தனதாக்கி பல பதக்கங்களை வென்றுள்ளார்.

மெய்வல்லுநர் விளையாட்டுக்களான 100மீற்றர், 200மீற்றர், நீளம்பாய்தல், கோலூன்றி பாய்தல், முப்பாய்ச்சல், தடை தாண்டல் மற்றும் அஞ்சல் ஓட்டங்களிலும் பங்கேற்று பல வெற்றிகளை தனதாக்கியதுடன் நின்றுவிடாது ஆரம்ப காலங்களில் களுதாவளை கெனடி விளையாட்டுக் கழகத்தில் பங்கேற்று பல வெற்றிகளை ஈட்டிக் கொடுத்ததுடன் 1982-1993 வரை மட்டக்களப்பு பாடுமீன் விளையாட்டுக் கழகத்தில் பல மெய்வல்லுநர் போட்டிகளிலும் கலந்து கொண்டுள்ளார்.

விளையாட்டுத்துறை சார்ந்த உத்தியோகத்தர்களுக்கான போட்டிகளில் பங்குகொண்டு பல்வேறுபட்ட மெய்வல்லுநர் விளையாட்டுகளில் வெற்றியீட்டி பிரதேசம், மாவட்டம் மற்றும் தேசிய மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் கலந்துகொண்டு தனது திறமையினை உத்வேகத்துடன் தொடர்ந்து காட்டிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தனது கடமையை திறம்பட செய்துவருவதனால் இளைஞர், யுவதிகளின் விளையாட்டு திறமையினை வெளிக்கொணர்வதற்கு காரண கர்த்தாவாக இருப்பதை காணக்கூடியதாக உள்ளது. கடந்த 2020, 2021ஆம் ஆண்டு நடைபெற்ற வளர்ந்தோருக்கான 100 மீற்றர் நீளம் பாய்தல் மற்றும் கோலூண்றி பாய்தல் போட்டிகளில் வெற்றியீட்டி முறையே வெள்ளிப்பதக்கத்தினையும், தங்கப்பதக்கத்தினையும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பெற்றுத்தந்துள்ளார்.

இவ்வருட இறுதிக்குள் *Asian Athletics Charmpionship* போட்டிகள் சீனாவில் நடைபெறவுள்ளதுடன், இப்போட்டியில் இலங்கையினை பிரதிநிதித்துவப்படுத்தி இவர் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



# கிண்ணியா அக்ஸேரியன் சூப்பர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

**கிண்ணியா மத்திய நிருபர்**

2022 ஆம் ஆண்டுக்கான கிண்ணியா அக்ஸேரியன் சூப்பர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெற உள்ளது.

இந்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி சம்மந்தமான தெளிவூட்டல் கூட்டம் நேற்று(23) கிண்ணியா மிஷன் மண்டபத்தில் அக்ஸேரியன் லீக்கின் தலைவர் எம். எம். ரசாத் முஹம்மத் தலைமையில் நடைபெற்ற போது அதன் ஸ்தாபக தலைவர்

ஏ.எல்.ஏ. நபீல் இதனை தெரிவித்தார்.

ஜூன் மாதம் 1,2,3 ஆகிய திகதிகளில் சுற்றுப் போட்டி நடைபெற்று, ஜூன் மாதம் 4 ஆம் திகதி இறுதிப் போட்டி நடைபெற உள்ளது.

இந்த சுற்றுப்போட்டியில் மொத்தம் 8 அணிகள் பங்கு பற்ற உள்ளன.




அக்ஸேரியன் சுப்பர் போய்ஸ், அக்ஸேரியன் வொரியர்ஸ், அக்ஸேரியன் சுப்பர்பைட்டர்ஸ், அக்ஸேரியன் சுப்பர் கிங்ஸ், அக்ஸேரியன் ரேஸிங் ஸ்டார், அக்ஸேரியன் பிளக் பந்தர், அக்ஸேரியன் புலு ஈக்கில், அக்ஸேரியன் ஜூப்பிட்டர்ஸ் ஆகிய அணிகளே இந்த தொடரில் மோதவுள்ளன.

கடந்த 2017 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கிண்ணியா அல் அக்ஸா கல்லூரியில் கல்வி கற்று விளையாட்டுத்துறையில் சாதனை படைத்த வீரர்களைக் கொண்டு இந்த சுற்றுப் போட்டி நடாத்தப்பட்டு வருகின்றது.

8 அணித் தலைவர்களும்

பங்குபற்றிருந்த இந்த தெளிவூட்டல் கூட்டத்தின் போது, அணித்தலைவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கி வைக்கப்பட்டதோடு, 2022 ஆண்டின் அக்ஸேரியன் சுப்பர் லீக்கின் உத்தியோகபூர்வ இலச்சினையும் அறிமுகப்படுத்தப்பட்டது.




இலங்கை கால்பந்தாட்ட தேசிய அணிக்கான முன்னாள் பயிற்சியாளரும் தொழில்நுட்ப பணிப்பாளருமான பொஸ்னியாவைச் சேர்ந்த அமீர் அலரிஜிக்கு இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஜஸ்வர் உமர் நினைவுப் பரிசு வழங்குவதை படத்தில் காணலாம்.
படம்: வட கொழும்பு தினகரன் நிருபர்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 27ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.